# கன்னியாகுமரி



## ஐந்தாண்டு சாதனைகள்




தமிழ்நாடு அரசாங்க
செய்தித்துறை வெளியீடு

முதற் பதிப்பு
டிசம்பர் 1961

விலை
25 காசுகள்

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை-5



# முன்னுரை

மக்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்பதற்காக ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. அத்திட்டங்களின் கீழ் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அந்தந்தப் பிரதேசத்தின் அமைப்பு, இயற்கை வளங்கள், மக்கள் மனப் போக்கு ஆகியவைகளுக்கேற்ப, முன்னேற்றத்தின் அளவு அமைந்திருக்கிறது. ஆனால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியைப் பிறநாடுகளிலிருந்து வருகின்ற தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.


மாவட்ட வாரியாக நம்முடைய சாதனைகளைத் தொகுத்துத் தனித்தனியாக 12 நூல்களை வெளியிட்டு இருக்கிறோம். எல்லாம் சாதித்தாகிவிட்டது என்று பூரித்துப் பேசுவது இந்த நூல் வரிசையின் நோக்கமல்ல. எந்த அளவுக்கு அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன என்னும் விவரம் இதன் மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது: உருவாகி வரும் சுபிட்ச மாளிகையின் எழுத்து உருவம் இது. அந்த மாளிகையைப் பூரணமாகக் கட்டி முடிப்பதில் நடந்துள்ள பணியை அறியவும், நடக்க வேண்டிய வேலையை அனுமானிக்கவும் இது பயன்படும். ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றிக்குப் பொது மக்கள் தொடர்ந்து ஒத்துழைக்க, இந்த நூல் பெரும் தூண்டுகோலாக இருக்கும் என்று நம்புகிறோம்.

*சென்னை-9*
*22-11-1961*

நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை

# பொருளடக்கம்





சுசீந்திரம் கோயில்

## அட்டைப் படம்

"எம்முயி ராசைகளும்—எங்கள்
இசைகளும் செயல்களும் துணிவுகளும்
செம்மை யுற்றிட அருள்வாய்—நின் றன்
சேவடி அடைக்கலம் புகுந்துவிட்டோம்
மும்மையின் உடைமைகளும்—திரு
முன்னரிட் டஞ்சலி செய்துநிற்போம்"

# கன்னியாகுமரி மாவட்டம்

தேசிய நெடுஞ்சாலை
மாநில நெடுஞ்சாலை
ஆறுகள்
மாவட்ட எல்லை
வட்டஎல்லை




பரப்பு: 645·5 சதுர மைல்

மக்கள் தொகை: 9.97 லட்சம்

ஆண்கள்: 5·04 லட்சம்

பெண்கள்: 4·93 லட்சம்

எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்: 4·79 லட்சம்

ஆண்கள்: 2·80 லட்சம்

பெண்கள்: 1·99 லட்சம்

ஆண்டுச் சராசரி மழை:
1326·4 மில்லி மீட்டர்

# மக்கள் திட்டம்

பொழுது புலர்ந்தது. புள்ளினம் ஆர்த்தன. ஆர்த்தன முரசம். பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம். வெள்ளிய சங்கம் முழங்கின. வீதியெலாம் அடிமை விலங்கொடித்த அணிவகுப்பின் ஆரவாரம். அந்த ஆரவாரத்தோடு நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக்கான புதிய போராட்டம் ஆரம்பமாயிற்று. தாழ்வும் நலிவும் நீங்கி, மகிழ்ச்சியும் பொலிவும் நிறைந்த புதுவாழ்வு காண மாபெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இடையில் ஏற்பட்ட இடையூறுகள் அனைத்துக்கும் ஈடு கொடுத்துப் புது வாழ்வு என்னும் பயிரைத் திட்டமிட்டு வளர்க்கத் தொடங்கினோம்.

1951-ல் முதல் ஐந்தாண்டுத் திட்ட வேலை ஆரம்பமாயிற்று. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்பு இப்போது மூன்றாவது திட்ட வேலை தொடங்கியிருக்கிறது. மூன்றாவது திட்டம் மிகப் பெரியது என்று அனைவரும் கருதினாலும், அதில் வெற்றி காணமுடியும் என்ற தன்னம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது. இந்தத் தன்னம்பிக்கையை நமக்குக் கொடுத்தது எது? முதல் இரு திட்டங்களில் கிடைத்த வெற்றியே.

ஐந்தாண்டுத் திட்டம் என்ருல் சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ள சிலர், கீழே இருக்கும் பலரை வேலை வாங்கும் திட்டமல்ல. இது மக்கள் திட்டம். மக்கள் நலனுக்காக மக்கள் ஒத்துழைப்பைக் கொண்டு நடத்தப்படும் திட்டம். இந்தியாவின் பொருளாதார ஜனநாயகத்துக்குக் கொடுக்கப்பட்ட வரிவடிவமே இது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான தேசியத் திட்டம், மூன்று பெரும் பிரிவுகளைக்கொண்டது. மத்திய அரசாங்கத் திட்டம், மாநில அரசாங்கத் திட்டம், தனியார்துறைத் திட்டம் என்பன அந்த மூன்று பிரிவுகள் ஆகும்.

புதிய உருக்காலைகள் அமைப்பு, கனரக யந்திரத் தொழிற்சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, நிலக்கரிச் சுரங்கம், எண்ணெய் வளம்கண்டுபிடித்தல், எண்ணெய் சுத்திகரிப்பு, பெரிய துறைமுகங்கள், ரயில்வேக்கள் ஆகியவைகளின் அபிவிருத்தி வேலைகள் முதலியன மத்திய அரசாங்கத் திட்டம் என்ற பிரிவில் வருகின்றன.

மாநில அரசாங்கத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சமூகநலப் பணிகள், சுகாதாரம், கிராம முன்னேற்றம் முதலியன அடங்கும்.

மூன்ருவது, தனியார் துறை. ஜவுளி, சர்க்கரை, சிமிட்டி, இஞ்சினீரிங் மற்றும் இதர பொருள்கள் உற்பத்திக்கான ஸ்தாபன ரீதியான தொழில்களில் பொதுமக்கள் முதலீடும், வேளாண்மை, வீடு கட்டுதல் ஆகியவைகளில் பொதுமக்கள் முதலீடும் இந்தப் பிரிவில் சேர்ந்தவை.

### திட்டச் செலவுகள்

முதல் இரண்டு திட்டக் காலங்களில் இந்தியா முழுவதற்குமாக ரூ. 10,110 கோடி செலவிடப்பட்டது. மூன்ருவது திட்டத்தில் இந்தியா முழுவதற்குமாக உத்தேசமாக ரூ. 11,600 கோடி செலவாகும். இதில் மத்திய அரசாங்கம் ரூ. 3,775 கோடி செலவழிக்கும். மாநில அரசாங்கங்கள் ரூ. 3,725 கோடி செலவழிக்கும். தனியார்துறை ரூ. 4,100 கோடி செலவிடும்.

தமிழ் நாட்டின் முதலாவது, இரண்டாவது திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 266 கோடியாகும். அதாவது முதல் திட்டத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 186 கோடியும் செலவிடப்பட்டது.

திட்ட வேலைகளின் பயனுக இந்தப் பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வேளாண்மை, பாசனம், கல்வி, மின்சாரம், தொழில்கள், சமுதாய நலன், போக்குவரத்து ஆகிய எல்லாத் துறைகளிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தின் உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னாக இருந்தது. இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய தின் பயனாக உற்பத்தி இப்போது 53 லட்சம் டன் ஆக உயர்ந் துள்ளது. ஏக்கர் விகித மகசூலை அதிகரிக்கும் முறையில் பொறுக்கு விதைகளைப் பரப்புவதிலும் ஜப்பானியச் சாகுபடி முறையை அனு சரிப்பதிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக மாநிலத்தில் நெல் சாகுபடியாகும் பரப்பு பூராவிலும், சிறு தானி யங்கள் சாகுபடியாகும் பரப்பில் 45 சதவீதத்திலும் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்படுகின்றன. சென்ற பத்து ஆண்டு களில் வேளாண்மை, சமுதாயநலத் திட்டங்களின்கீழ் சுமார் ரூ. 42 கோடி செலவில் இந்த அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன.


### பாசனமும், மின்சாரமும்

தமிழ் நாட்டில் பாசன வசதிகளைப் பெருக்க சென்ற பத்து ஆண்டுகளில் ரூ. 37 கோடிக்குமேல் செலவிடப்பட்டது. 14 பாச னத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக 4·65 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசனம் பெற்றன. ரூ. 35 கோடி செலவாகக் கூடிய பரம்பிக்குளம் - ஆளியாறு திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் 2·4 லட்சம் ஏக்கர் பாசனம் பெறும்.

மின்சாரப் பெருக்கம் தமிழ் நாட்டின் மற்றொரு முக்கிய சாதனை யாகும். சென்ற பத்து ஆண்டுகளில் மின்சார அபிவிருத்திக் காக மட்டும் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண் ணிக்கை 1610-லிருந்து 11,000-ஆக அதிகரித்துள்ளது. மின் சாரத்தால் இயங்கும் பம்பு செட்டுகளின் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 14,000-லிருந்து 1,16,000-ஆக அதிகரித் துள்ளது.

### கல்வி

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் சுமார் 16,000 ஆரம் பப் பள்ளிகள் இருந்தன. தற்போது ஆரம்பப் பள்ளிகளின் தொகை கிட்டத்தட்ட 27,000 ஆகும். 1951-ல் பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் தொகை 18·53 லட்சம். 1961-ல் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள் தொகை 33·80 லட்சம் ஆகும். குழந்தை கள் பள்ளிக்கு வரும்படிச் செய்வதில் ஊக்கமளிப்பதற்காக நண் பகல் உணவுத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டது. இத் திட்டப்படி ஏழைக்குழந்தைகளுக்கு நபர் ஒன்றுக்கு பத்துக்காசு செலவில் இலவசமாக உணவு அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைகின்ற னர். இலவச நண்பகல் உணவு மட்டுமின்றி சுமார் 3·6 லட்சம்



நெய்வேலியில் உருவாகிவரும் புதிய அனல் மின்சார நிலையம்

குழந்தைகளுக்கு இலவசமாக நிகராடை வழங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்துவதும் கல்வித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் மூலம் ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் பள்ளிக்கு:வேண்டிய வசதிகளைச் செய்ய முன்வருகின்றனர். ரொக்கமாகவும் பொருளாகவும் உதவுகின்றனர். இந்த வகையில் அளிக்கப்பட்ட உதவியின் மதிப்பு ரூ. 6·47 கோடி.

தொழில் நுட்பக் கல்வி வசதியில் இரண்டாவது திட்டக் காலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு மொத்த இடவசதி 662 ஆகும். இரண்டாம் திட்ட முடிவில் இந்த இடவசதி 1157-ஆக அதிகரித்தது. பாலிடெக்னிக்குகளில் இடவசதி சென்ற 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 822-லிருந்து 2910-ஆக அதிகரித்துள்ளது.

## தொழில் வளர்ச்சி


தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத் திட்டம், தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் தொழில் முயற்சியாகும். இத் திட்டத்துக்குச் செலவு மதிப்பு 110 கோடி ரூபாய். இந்திய அரசாங்கம் இதுவரை

ரூ. 49 கோடி முதலீடு செய்துள்ளது. பழுப்பு நிலக்கரி எடுக்கும் வேலை தொடங்கி விட்டது. நெய்வேலியில் புதிய அனல் மின்சார நிலையம் 1961-62 ல் உற்பத்தி தொடங்கும். முதல் கட்டத்தில் 2·5 லட்சம் கிலோவாட் உற்பத்தி திறனுடையதாக அது இருக்கும். 1·52 லட்சம் டன் ஊரியா உறபத்தி செய்யக்கூடிய ரசாயன உரத் தொழிற்சாலையும், 3·5 லட்சம் டன் சுட்ட நிலக்கரிக் கட்டிகள் தயாரிக்கக் கூடிய ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்துவதற்கு வகை செய்யப்படுகிறது. நெய்வேலி ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் பெரிய தொழில் பிரிவுகளான இந்த வேலைகள் வெற்றி கரமாக நிறைவேறுவதை யொட்டி, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி கணிசமான முன்னேற்றத்தைக் காணும்.

சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டி தொழிற்சாலையும் முக்கியமான ஒரு தொழில் அபிவிருத்தி வேலையாகும். இதுவும் மத்திய அரசாங்க தொழில் திட்டத்தில் சேர்ந்தது. ரூ. 7·35 கோடி செலவில் அமைந்த இந்தத் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 300 பெட்டிகளுக்கு ஆசன வசதிகள் முதலியன செய்யக் கூடிய தொழில் பிரிவு புதிதாக ரூ. 3·60 கோடி செலவுமதிப்பில் ஏற்

---

நிலத்தைக் குடைந்து மண்ணையெல்லாம் அகற்றிவிட்டு நிலக்கரியை வெட்டிக் கொண்டு வருவதென்பது சாதாரண காரியமல்ல. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் மண்ணை அகற்றும் பெரும் பணிக்கு உரிய பெரிய யந்திரம்



படுத்தப்பட்டு வருகின்றது. ரயில் பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 7800 பேர் வேலை செய்கிறார்கள்.

ரயில் பெட்டி உற்பத்தியானது, பல துணைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்பு அளித்திருக்கின்றது. உருக்கு வார்ப்புகள் ஸ்பிரிங்குகள், ரப்பர் சாமான்கள் முதலிய சுமார் 200 வகைப் பொருள்கள் உள்நாட்டு துணைத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன. இதனால் சென்னை நகரின் சுற்றுப் பிரதேசங்களிலும், மற்றும் நாட்டில் பல்வேறு இடங்களிலும் துணைத் தொழில்கள் பெருக ஊக்கமேற்பட்டுள்ளது.

**தனியார் துறை**

தமிழ் நாட்டில் தனியார் துறையில் சிமிட்டி, துணி ஆலைகள், இஞ்சினீரிங் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சி குறிப்பிடத் தக்கதாகும். மாநிலத்தில் 1934-க்கும் 1946-க்கும் இடையே மூன்று சிமிட்டித் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் முன்பு 7·58 லட்சம் டன்களாக இருந்தது. இப்பொழுது உற்பத்தி 8·13 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. ராஜபாளையம் பகுதியில் ஒரு சிமிட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1·94 லட்சம் டன்களாகும். இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்றும் திட்ட காலத்தில் இரண்டு சிமிட்டித் தொழிற்சாலைகளைப் புதிதாகத் தொடங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

துணி உற்பத்தித் தொழிலைப் பொறுத்த வரையில் இந்தியாவில் 131 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. இவற்றில் 31 லட்சம் கதிர்கள் தமிழ் நாட்டு ஆலைகளில் உள்ளன. 1951-ல் மாநிலத்தில் 71 ஆலைகள் இருந்தன. தற்போது 134 ஆலைகள் இருக்கின்றன. துணி ஆலைத் தொழிலினால் 1950 ல் 90,000 பேர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. இன்று சுமார் 1·2 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்து வருகிறது.

தனியார் துறையின்கீழ், வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி, சென்னை அருகே திருவொற்றியூரில் உள்ள ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை, அம்பத்தூரில் உள்ள டி. ஐ. சைக்கிள் கம்பெனி, எண்ணூரில் உள்ள அசோக் லேலெண்ட் லிமிடெட் ஆகிய தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. மேட்டூர் அருகில் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. ஈரோட்டுக் கருகில் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருறது: இதில் அரசாங்கம் ரூ. 1 கோடி முதலீடு செய்ய முன் வந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் சாகுபுரத்தில் தாரங்கதரா ரசாயன தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 30,000 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்து வருகின்றது. காஸ்டிக் சோடா தயாரிப்பில் இது இந்தியாவிலேயே பெரிய தொழிற்சாலையாகும்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்துக்கருகில் ரெயான் என்னும் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வேலை தொடங்கி விட்டது. இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.

அம்பத்தூரில் உள்ள டன்லப் ரப்பர் கம்பெனி, மேட்டுப் பாளையம் செயற்கை வைரத் தொழிற்சாலை ஆகியனவும் தனியார் துறையில் குறிப்பிடத்தக்க தொழில் அமைப்புகளாகும்.

**சர்க்கரை ஆலைகள்**

ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பின் தமிழ் நாட்டில் நெல்லிக் குப்பம், புகளூர், பாண்டிய ராஜபுரம் ஆகிய இடங்களில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருந்தன. பின் இரண்டாம் திட்டக் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டம் வடபாதி மங்கலத்திலும், திருச்சி மாவட்டம் பேட்டை வாய்த்தலையிலும் இரு சர்க்கரை ஆலைகள் அமைக்கப் பட்டன. இதல்லாமல் உடுமலைப்பேட்டை, ஆம்பூர், படாலம் ஆகியவைகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவதில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது.

சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கத் துறை யிலும், தனியார் துறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிண்டியிலும், விருதுநகரிலும் தொழிற் பண்ணைகள் அமைக்கப் பட்டன. ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, பேட்டை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் தொழில் பேட்டைகள் அமைக் கப்பட்டுள்ளன. காட்பாடியில் ஒரு தொழில்பேட்டை உருவாகி வரு கிறது. இவற்றின் மூலம் சிறு தொழில்கள் வளர வாய்ப்பு ஏற் பட்டுள்ளது. பயிற்சி—உற்பத்தி நிலையங்கள் 44 ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்தத் தொழில் வளர்ச்சி முக்கியமாக இரண்டாவது திட்டத்தில் ஏற்பட்டதாகும்.

சென்ற பத்து ஆண்டுகளில் சாலை வசதி 21,198 மைல்களி லிருந்து 25,878 மைல்களாக அதிகரித்துள்ளது.



பெரிய துறைமுகங்களையும், ரயில்வேக்களையும் அபிவிருத்தி செய்வது மத்திய திட்டத்தின் ஒரு பகுதியாகும். உலக பாங்கியிட மிருந்து கடன் உதவியுடன் சென்னைத் துறைமுகத்தை ரூ. 16 கோடி செலவில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும், தாம்பரம்—செங் கற்பட்டு—விழுப்புரம் இடையில் மின்சார ரயில் அமைப்புக்கான திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றன.

## மருத்துவ வசதிகள்

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உள்ள மருத்துவ மனை களில் மொத்தம் 8,500 படுக்கைகள் இருந்தன. தற்போது படுக்கை களின் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்துள்ளது. செங்கற் பட்டு, பாளையங்கோட்டை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், கடலூர், சேலம் ஆகியவைகளில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கு கட்டிடங்கள் கட்டும் வேலை ரூ. 53 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சா வூரில் ரூபாய் 130 லட்சம் செல்வில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் 110 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

## கூட்டுறவு

1955-56 ல் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் குடியானவர் களுக்கு ரூபாய் 6 கோடி வேளாண்மைக் கடன் வசதி அளிக்கப் பட்டது. 1960-61 ல் இது ரூபாய் 25 கோடியாக அதிகரித்திருக் கிறது. மாநிலத்தில் தற்போது எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு சங்க அனுகூலங்களைப் பெற்று வருகின்றன. முழுக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 43 வட்டாரங்களிலுள்ள கிராம மக்கள் பயனடை கின்றனர். இவர்கள தங்களுக்குத் தேவைப்படும் குறைந்த காலக் கடன் வசதிகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற வகை செய்யப்பட்டிருக்கிறது. இக் குடியானவர்களுக்கு ஜாமீன் இன்றி முன் பணம் கொடுப்பதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற் படக்கூடிய நஷ்டத்திற்கு அரசாங்கம் ஈடு செய்யும். தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரச் சாகுபடித் திட்டம் அமுலிலிருந்து வருகிற 23 வட்டாரங்களும் இதில் அடங்கும்.

தமிழ் நாடு 375 அபிவிருத்தி வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. 363 வட்டாரங்களுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப் பட்டுள்ளன. அடி மட்டத்தில் இந்த ஜனநாயக நிர்வாக முறையானது நாட்டின் அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

சென்ற பத்து ஆண்டுகளில் பின்னடைந்த வகுப்பினர் நிலையில் அபிவிருத்தி சம்பந்தமாக முனைப்பான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. முதல் திட்டம் முதற்கொண்டு ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்தது. அத்துடன் புதிய ஹரிஜன நலத் திட்டங் களுக்காக ஆண்டுதோறும் மேற்கொண்டு சுமார் 2 கோடி செலவு செய்யப்படுகிறது. சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 1·71 லட்சம் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. 27,000 உணவு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. ஹரிஜனங்களுக்கான வீடு வசதித் திட்டத்தின்கீழ் 20,200 வீடுகள் கட்டப்பட்டன.

**வீட்டு வசதி**

சென்னை நகரில் சேரிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 478 புதிய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன; 1546 மனை இடங்கள் அபி விருத்தி செய்து தரப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்காக அரசாங்க உதவியுடன் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1377 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 239 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடு வசதித் திட்டத்தின்கீழ் 3160 வீடுகள் கட்டப்பட்டன. 467 மனை இடங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இந்திய ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கூடிய நடுத்தர வருமானக்காரர்களுக்கான வீடு வசதித் திட்டத்தின்கீழ் 120 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. போலீஸ்காரர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 260 லட்சம் செலவில் சுமார் 4200 வீடுகள் கட்டப்பட்டன.

வேளாண்மைப் பெருக்கம், மின்சார வசதிகளில் பெரும் முன் னேற்றம், நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டவேலை, தொழில் நுட்பக் கல்வியில் அதிகப்படியான பயிற்சி வசதிகள் முதலியன காரணமாக தமிழகத்தின் தொழில் வளத்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் பலமான அஸ்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத் தொழில் துறை, தனியார் துறை இரண்டிலுமே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக முன்னேற்ற வேலைகளைத் தொகுத்துத் தரும் நூல் வரிசையில் கன்னியாகுமரி மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளைப் பின்வரும் அத்தியாயங்களில் காணலாம்.

" நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை "



# கடலுடுத்த கன்னியாகுமரி

“எத்திசையும் ஏழுலகும்” புகழக்கூடிய முத்தும் முத்தமிழும் அளிக்கும் நாடு தமிழ்நாடு. இதன் தென்கோடி எல்லையில் மூன்று கடல்கள் ஒன்று சேர்கின்றன. கடற்கரையில் நின்று பார்த்தால் கதிரவன் உதயமும்—மறைவும் கைகளுக்கு எட்டும் தூரத்தில், கண்களுக்கு விருந்தாக விளங்குவதைக் காணலாம். கால வெள்ளத்தையும் வென்று அந்தக் கதிரவன் உலகை வலம் வருவது போல், கன்னியாகிய ஒரு குமரித் தெய்வம் அந்தக் கடற்கரையில் நின்று காவல் காக்கிறாள்; அவளே கன்னியாகுமரி என்று சொல்வது மரபு. அவள் பெயர்கொண்டு விளங்குவதே கன்னியாகுமரி மாவட்டம்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கடல்கோள் நிகழ்ந்த தென்பர். அக்காலத்தில் தமிழ்நாடு இன்னும் தென்கோடியில் வெகுதூரம் நீண்டிருந்தது. அந்தத் தென்கோடிப் பகுதியை அப்போது குமரிக் கண்டம் என்றனர். அந்தக் குமரிக் கண்டத்தில் குமரி ஆறு என்ற ஒரு ஆறும் குமரி மலை என்ற மலையும் இருந்த தென்பர். கடல்கோள் நிகழ்ந்து குமரிக் கண்டத்தையும், குமரியாற்றினையும் மூழ்கடித்தது. அதே போல் குமரி மலையும் கடல்நீரில்

மூழ்கியது. இதையே சிலப்பதிகாரம் என்ற செந்தமிழ்க் காப்பியத்தில்,

"பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்று இளங்

கோவடிகள் பாடினர்.

எஞ்சியிருந்த பகுதிக்கும் குமரி என்ற பெயரே வந்தது. சங்க காலத்தில் குமரி தமிழகத்தின் தெற்கெல்லையாக இருந்தது. இதையே

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்"

என்று தொல்காப்பியப் பாயிரம் கூறுகின்றது.

**சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும்**

வாணிபம் செய்வதற்காக போர்ச்சுக்கிசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் நம் நாட்டை நோக்கிப் படை படையாகத் திரண்டு வந்தனர். அப்பொழுது அந்த அந்நியர்களுக்கு நம் நாட்டில் பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது. ஒருமுறை கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் துறைமுகத்தில் டச்சுக்காரர்கள் வந்து இறங்கினர். உடனே அந்தப் பகுதி மக்கள் கடலிலும்—நிலத்திலும் போராடி அவர்களைத் தோற்கடித்து விரட்டினர். அந்த ஆண்டு 1741.

அதைத் தொடர்ந்து வந்த இந்தியரின் வீர வரலாறு ஊமை கண்ட கனவு போன்றது. காலனி ஆதிக்கம் வேரூன்றியது. ஆனால் சுதந்திரப் போராட்டம் என்னும் கால வெள்ளத்தில் அது அடித்துச் செல்லப்பட்டது. முடிவில் வெற்றி நமக்கானது. நாடு விடுதலை பெற்றது. வாழ்க்கை இன்னல்களால் தாயைப் பிரிந்திருந்த சேய் அந்த இன்னல்கள் தீர்ந்ததும் தாயின் இனிய முகம் நோக்கி ஓடிவருவது போல், தாயகத்தை விட்டுப் பிரிந்திருந்த கன்னியாகுமரி மாவட்டம் சுதந்திரத்திற்குப்பின் தமிழகத்தின் அங்கமாகத் திகழ விரும்பியது. அதன் பயனாகவும், மொழிவழி மாநிலப் பிரிவினையின் படியும், அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு என்னும் நான்கு வட்டங்கள் கொண்ட கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு இணைந்தது. இது நடந்தது நவம்பர், 1956.

பண்டைக் கால முதல் இந்துக்களின் புண்ணிய தீர்த்தத் தலங்களுள் ஒன்றாக இருந்து வருகிறது கன்னியாகுமரி. குமரி


முனைக்குக் கிழக்குப் பக்கத்தில் கடலில் இரட்டைப் பாறைகள் உள்ளன. சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நடந்த உலக சமய மாநாட்டிற்குச் செல்வதற்கு முன்னால் அப்பாறைகளில் அமர்ந்து தியானம் செய்தார் என்று கூறுவர். கி. பி. 984-ல் ராஜ ராஜ சோழன் இங்கு சிவன் கோவில் ஒன்று கட்டுவித்தான். இப்போது அது குகநாதேசுவரம் என்று வழங்கப்படுகிறது.

### மலைவளமும் நிலவளமும்

கன்னியாகுமரி மாவட்டத்தின் பரப்பளவு 645.5 சதுர மைல்களாகும். 9.97 லட்சம் மக்கள் தொகை கொண்டது. மேற்குப் புறத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளும், நடுப்பாகத்தே வளஞ்சுரக்கும் வயல்வெளிகளும், மற்றும் முப்புறமும் கடல் சூழ்ந்து விளங்கும் இயற்கைச் செல்வங்களும் பெற்றது இது. மலைப்புறங்களில் தேக்கு, எட்டி, கருவேலமரம் ஆகியவை செழித்து வளர்கின்றன. மேலும் இந்தியாவிலேயே சிறந்த ரப்பர் இங்கு தயாரிக்கப்படுகிறது. தனியார் துறையின் கீழும், அரசினர் திட்டங்களின் கீழும் சுமார் 15640 ஏக்கரில் ரப்பர் வளர்க்கப்படுகிறது. காபி, தேயிலையும் பயிரிடப்படுகிறது.

நல்ல மழையும், வளமான மண்ணும், சிறந்த வெப்பமும் உள்ளதால் கழனிகளில் பயிர் மண்டிக் கிடக்கின்றன. 60,000

கீரிப்பாறைப் பகுதியில் உள்ள ரப்பர் தோட்டம்



ஏக்கர்களுக்குமேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மரவள்ளிக் கிழங்கும் பெருவாரியாகப் பயிரிடப்படுகிறது. கனி வகைகளும் ஏராளம். பேச்சிப்பாறை, பெருஞ்சாணி ஆகிய பெரிய பாசனத் திட்டங்களும், மற்ற சிறு பாசனத் திட்டங்களும் நிலவளத்துக்குக் காரணமாக விளங்குகின்றன.

### இதர துறைகள்

இம் மாவட்டத்திற்கு 42 மைல் நீளக் கடற்கரை உண்டு. எனவே மீன் அள வாய்ப்பு வசதிகள் இங்கு அதிகம். ஆண்டு ஒன்றுக்கு 25,000 டன் மீன்கள் பிடிபடுகின்றன. அண்மையில் மீனவர் வாழ்க்கையிலும் தொழிலிலும் மறுமலர்ச்சி தோன்றியுள்ளது. நவீனக் கருவிகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நிறைந்த நன்மை பெறுகிறார்கள்.

இங்கு 1946லேயே கட்டாய ஆரம்பக் கல்வி அமுல் செய்யப் பட்டது. இம்மாவட்டத்தில் படித்தவர்கள் தொகை அதிகம். மொத்தம் படித்தவர்கள் 48.1 சதவிதம். ஆண்களில் படித்தவர்கள் 55.6 சதவிதம். பெண்டிரில் படித்தவர்கள் 40.4 சதவிதம். இந்தச் சிறிய மாவட்டத்தில் 565 கல்வி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றைஅரசாங்கமே ஏற்று நடத்துகிறது. தொழில் பயிற்சி நிலையங்களும் உள்ளன. இவையல்லாமல் ஹரிஜன மக்களின் கல்வி அறிவு மேம்பாட்டிற்காக 19 இரவுப் பள்ளிகளும் 21 நூல் நிலையங்களும் நடத்தப்படுகின்றன.

மற்ற எல்லாத் தொழில்களையும்விட கயறுத் தொழில் இங்கு வளர்ச்சியடைந்துள்ளது. மட்பாண்டத் தொழில், சோப்பு தயாரித்தல், பனைவெல்லம் தயாரித்தல் ஆகிய தொழில்களும் நடைபெற்று வருகின்றன. கிராமப்புற மின்சார விநியோகமும் செவ்வனே நடைபெற்று வருகின்றது. இதுவரை 476 கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன. எல்லாக் கிராமங்களும் கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து இரண்டாவது திட்டம் தொடங்கிய பின்னர்தான் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு இணைந்தது. இந்த ஐந்தாண்டுகளில் வேளாண்மை, பாசனம், மின்சாரம், சமூகநலன், தொழில்கள், மீன் அளம், கல்வி முதலிய துறைகளில் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.



ஒரு பாடல். "ஆற்று வெள்ளம் ஓடிவரத் தோற்றுதே குறி" என்று தொடங்கும் பாடல் அது. எளிய பாடல்தான். ஆனால் அதிலே நம் மக்கள் இயற்கையைப்பற்றி அறிந்திருந்த அறிவின் முதிர்ச்சியைக் காணலாம். எங்கோ ஒரு மூலையில் மின்னல் மின்னு கிறதாம். அதுவும் அடிவானத்தை யொட்டி மின்னுகிறதாம். ஊதைக் காற்று வீசுகிறதாம். இதையெல்லாம் வைத்து வெள்ளம் வரப்போகிறது என்ற பய உணர்ச்சியை இந்தப் பாடல் அழகாக எடுத்துக் காட்டுகிறது,


ஆனாலும் வெள்ளம் வரும் நாளை, ஆற்றில் புதுப்புனல் பெருக் கெடுத்தோடும் தினத்தை நம் மக்கள் விழாவாகக் கொண்டாடத் தவறுவதில்லை. இன்றும் காவிரியில் 'பதினெட்டாம் பெருக்கு' என்று ஒரு நாளைக்கொண்டாடுகிறோம் திருவிழாபோல். அந்நாளில் புதுவெள்ளம் காவிரிக் கரையைத் தொட்டுத் தழுவிச் செல்வதைக் காணலாம். புதுப்புனலைக் கண்டு நாம் மகிழக் காரணம், அந்தப் புனலோடு, மக்கள்சமுதாயத்தை வாழவைக்கும் ஒரு புதிய சக்தியும் வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டதால்தான். "நீரின்று அமை

யாது உலகு" என்று வள்ளுவர் பாடியதும் நமக்கு இதைத்தான் நினைவுறுத்துகிறது.

கிராமங்களில் இன்னும் ஒரு வழக்கத்தைக் காணலாம். நீரை வீண் செய்யாத பழக்கமே அது. சிறிதளவு நீரையும் நாம் வீணுக்குவதில்லையென்றால், வெள்ளப் பெருக்கெடுத்தோடும் ஆற்றுநீரை நாம் பயனில்லாமல் கடலில் கலக்க விடுவோமா? அதுவும் எண்ணற்ற கழனிகள் தண்ணீருக்காக ஏங்கும்போது. ஆகவேதான், சிற்ருறுகளிலும் பேராறுகளிலும் அணைகள் கட்டி, நீரைத் தேக்கி வைத்துக் கட்டுப்பாடாகப் பயன்படுத்துகிறோம். தூர்ந்து போன கிணறுகளையும், குளங்களையும் புதுப்பித்து ஊற்றெடுக்கிறோம். வயல்களுக்குப் பாய்ச்சி வளம் பெருக்குகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு பெரிய அணைகள் உள்ளன. ஒன்று பேச்சிப்பாறை அணை. மற்றொன்று பெருஞ்சாணி அணை. இவை இரண்டாலும் 60,000 ஏக்கர்களுக்கும் மேலான வயல்கள் பாசனம் பெறுகின்றன. பேச்சிப்பாறை அணை சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். பெருஞ்சாணி அணை 1952-ல் கட்டப்பட்டதாகும். கன்னியாகுமரி மாவட்டம் 1956-ல் தமிழ்நாட்டுடன் இணைந்த பிற்பாடு இரண்டாவது திட்

செல்லந்துருத்தி அருகில் தோவாளைக் கால்வாய். கோடையாறு பாசனத் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.



டத்தின் கீழ் பல பாசனத் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. அவற்றுள் நடுத்தர, சிறு பாசனத் திட்டங்கள் அடங்கியுள்ளன.

**நடுத்தரப் பாசனத் திட்டங்கள்**

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக ரூ. 21·86 லட்சம் செலவிடப்பட்டது. இதில் எட்டு வேலைகள் இடம் பெற்றன.

தோவாளைக் கால்வாயைப் புதுப்பித்து அமைப்பதற்காக ரூபாய் 6·55 லட்சம் செலவில் ஆக்க வேலை மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலை 1958—59-ம் ஆண்டில் தொடங்கியது. வெகு விரைவில் முடிவடைந்துவிடும். இதேபோல் கோடையாற்றின் இடது கரைக் கால்வாயையும் புதுப்பித்து அமைக்கும் வேலை 1959—60ல் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இவ்வேலை முடிவடைந்து விட்டது. இதற்கான செலவு ரூபாய் 4·29 லட்சமாகும். மேற்சொன்னது மட்டுமன்றி கோடையாற்றின் இடதுகரைக் கால்வாயில் சில விசேஷ மராமத்து வேலைகளும் 1960—61-ல் ஆரம்பிக்கப்பட்டன. ரூபாய் 4·34 லட்சம் செலவாகியுள்ளது. இந்த வேலையும் முடியும் தறுவாயிலுள்ளது. 1958—59-ல் ஆனந்தனாற்றில் அபிவிருத்தி வேலைகள்

மங்களூருக்கு அருகில் உள்ள கோடையாறு
பாசனத் திட்ட இடதுகரைக் கால்வாய்



மேற்கொள்ளப்பட்டன. ரூபாய் 1.03 லட்சம் செலவாகியுள்ளது. இந்த வேலை இப்பொழுது முனைப்பாக நடைபெற்று வருகிறது. பேச்சிப் பாறைக் கால்வாயில் சில இடங்களில் மிகவும் பழுதேற்பட்டு விட்டதால், அவற்றைப் புதுப்பிக்கும் வேலை 1959—60ல் தொடங்கியது. ரூபாய் 2.60 லட்சம் செலவாகியுள்ளது. பல பகுதிகள் புதுப்பிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ளவை சிலவே. அவைகளிலும் வேலை விரைவாக நடைபெற்றுவருகின்றது. தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம் வட்டங்களில் உள்ள சில பெரிய குளங்களைப் புதுப்பிக்கும் வேலைகளுக்காக முறையே ரூ. 1.10 லட்சம், ரூ. 1.31 லட்சம், ரூ. 64,135 செலவிடப்பட்டுள்ளது. இவற்றில் தோவாளை வட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து குளங்களில் நான்கு குளங்களும், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ஆறு குளங்களில் ஐந்து குளங்களும், கல்குளம் வட்டத்தில் ஆறு குளங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

**சிறு பாசனம்**

சிறு பாசனத் திட்ட வேலைகளுக்காகத் திட்டக்காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ 3.38 லட்சமாகும். இந்தத் தொகையானது 52 வேலைகளை முடிக்கச் செலவிடப்பட்டது. சிறு மதகுகள் கட்டுதல், குளங்களில் விசேஷ மராமத்து வேலைகள் செய்தல், ஏரிகளைப் புதுப்பித்தல் ஆகியவை இந்த வேலைகளில் அடங்கும். இரண்டாவது திட்டக் காலத்தில் 45 குளங்களில் விசேஷ மராமத்து வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு ஓடைகளில் மதகுகள் கட்டப்பட்டன. ஒரு குளம் சிர்குலைந்துவிடாதபடி பலப்படுத்தப்பட்டது. ஒரு குளமும், ஒரு கால்வாயும் புதுப்பித்து அமைக்கப்பட்டன. இரண்டு குளங்களில் பொதுவான அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்களால் கோடையாறு பாசனத் திட்டங்களின் கிழ் பாசனம் பெற்றுவந்த 61,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. மேற்சொன்ன செலவு தொகையன்றி மேற்கொண்டு ரூபாய் 25.67 லட்சம் சிறுபாசனத் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டது. ஆனால், இந்தத் தொகையானது திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்படாததாகும்.

இவை மட்டுமின்றி உணவு உற்பத்தித் துறையினராலும் விசேஷ சிறு பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் மானவாரிக் குளங்களைப் புதுப்பிப்பதே முதலிடம் பெற்றது. இவ்வகையில் 260 குளங்கள் புதுப்பிக்கப்பட்டன. இதற்காக ரூ. 21·78 லட்சம் செலவிடப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கிழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாசனத் திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்

டது. நெய்யாறு இடதுகரைக் கால்வாய் திட்டமே அது. இத்திட்டத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் 9200 ஏக்கர் பாசனம் பெறும். தற்போது இந்தப் பகுதியில் நெல் இரு போகங்கள் சாகுபடியாகிறது. முதல் போகம் மே மாதம் முதல் ஜனவரி மாதம் வரையிலும்; இரண்டாவது போகம் பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரையிலும் ஆகும். ஆனால் இரண்டாவது போகச் சாகுபடிக்குப் பருவ மழையையே நம்பிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. மேலும் இந்தப் பகுதியில் ஏர்களும், குளங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறியுள்ளன. இவைகளில் குறிப்பிடத்தக்க அளவுக்குத் தண்ணீர் தேங்குவதும் கிடையாது. ஆனால் கட்டுப்பாடான முறையில் இக் குளங்களுக்கும், ஏரிகளுக்கும் தண்ணீர் விநியோகித்து, அவற்றைத் தேக்கி வைக்க ஏற்பாடு செய்தால் இரண்டாவது போகச் சாகுபடி மிகவும் சுலபமாகிவிடும். இந்த எண்ணத்துடனேயே நெய்யாறு இடது கரைக் கால்வாய்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திட்டமானது நெய்யாறு அணையின் இரண்டாவது கட்ட வேலைகளில் அடங்கும். இதிலிருந்து வெட்டப்படும் கால்வாயின் நீளம் 40 மைல் 4 பர்லாங் ஆகும். இதில் தமிழ்நாடு தலைமைக் கால்வாயின் நீளம் 13 மைல் 2 பர்லாங்காகும். இதர பகுதியில் நீளம் 27 மைல் 2 பர்லாங்காகும். ஆனால் இந்த நீளத்தில் உத்தேசிக்கப்டிருக்கும் முல்லையாற்று விஸ்தரிப்பு சேரவில்லை.

### பெரிய திட்டங்கள்

கால்வாய் வெட்டும் வேலை 1959 ஜுலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு வெகுவேகமாகப் பூர்த்தியாகிக்கொண்டுவருகிறத.கால்வாயின் இடை இடையேயான கல் கட்டிட வேலைகளில் முக்கால் பகுதி வேலைகள் முடிந்துவிட்டன. தமிழ்நாடு தலைமைக் கால்வாய்க்கான ஆரம்ப செலவு மதிப்பீடு ரூ. 41 லட்சமாகும். ஆனால் 1961 மார்ச் முடிய ரூ. 51.5 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஆகவே மொத்தம் ரூ. 69.1 லட்சத்திற்கான திருத்தப்பட்ட செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசாங்கத்தின் அங்கிகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இதேபோல் சித்தாறு—பட்டணங்கால் திட்டமொன்றும் பாசன வேலைக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்காக ரூ 2.75 கோடி செலவிடப்படும். இத்திட்டத்தால் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

மேற்சொன்ன பெரிய திட்டங்கள் இரண்டும்,இம்மாவட்டத்தில், குறிப்பாக கல்குளம், விளவங்கோடு ஆகிய இரு வட்டங்களிலும் காட்டைத் திருத்திக் கழனியாக்கி, அவைகளில் கதிர்கள் செழித்து வளரப் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை!




அறுவடைக்காலம். வயல்வெளியெங்கும் கதிர்கள் வளர்ந்து மண்டிக்கிடந்தன. குடியானவன் ஒருவன் தன் சோளக் கொல்லையைப் பார்த்துவிட்டுப் போவதற்காக வருகிறான். அந்த சோளக் கொல்லையில் ஒரு குருவி கூடுகட்டியிருந்தது. தாய்ப் பறவையுடன் இரண்டு குஞ்சுகள் அந்தக் கூட்டில் இருந்தன. சோளக்கொல்லையைப் பார்த்துவிட்டுப் போகவந்த குடியானவனைக் கண்டதும் குருவிக் குஞ்சு தாயிடம் சொன்னது "அம்மா! குடியானவன் அறுவடைக்கு வந்திருக்கிறான். நாம் இனிமேல் வேறு இடம் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று. அதற்குத் தாய்ப்பறவை "கவலைப் படாதீர்கள். குடியானவன் இன்று அறுவடை செய்யப்போவதில்லை. அறுவடைக்காகக் கூலியாட்களிடம் சொன்னோமே—அவர்களைக் காணோமே என்று வருந்துகிறான். ஆகவே இன்று அறுவடை செய்யமாட்டான்" என்று சமாதானம் சொன்னது.

மறுநாளும் குடியானவன் சோளக்கொல்லைக்கு வந்தான். குஞ்சுகள் பதறின. ஆனால் தாய்ப்பறவை "பதறாதீர்கள்—இவன் இன்றும் அறுவடை செய்யமாட்டான், ஏனென்றால் நேற்று கூலி

யாட்களிடம் சொல்லிவிட்டு வந்ததுபோல், இன்று உறவினர்களிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறுன். அதுவும் நடவாது'' என்றது.

மூன்றும் நாள். குடியானவன் கையில் ஒரு அரிவாளுடன் சோளைக்கொல்லைக்கு வந்தான். அதைப் பார்த்ததும் தாய்ப்பறவை சரி, இன்று இவன் அறுவடை செய்துவிடுவான். யாரையும் எதிர் பார்க்கமாட்டான் என்று எண்ணியவாறு தன் குஞ்சுகளை அழைத்துக் கொண்டு வான்வெளியில் பறந்து சென்றது

இது ஒரு கதைதான். ஆனல் "தன் கையே தனக்குதவி" என்ற சிறந்த கருத்தை, "பிறரை நம்பி வாழாமல் தன்னை நம்பி வாழ்வதே சிறந்தது'' என்னும் உயர்ந்த உண்மையை அழகாக எடுத்துக்காட்டுகிறது. தனி மனிதனுக்கு மட்டுமல்ல, ஒரு நாட்டுக்கும் இந்த உண்மை மிகவும் பொருந்துவதாகும்.

நாடா வளந்தரு நாடு தான் வள்ளுவர் கண்ட நாடு. எந்தத் துறையிலும் சரி, ஒரு நாடு தன்னைத்தான் நம்பி இருக்கவேண்டும். அதிலும் உணவுத்துறை மிகவும் முக்கியமானது. இறக்குமதி செய்துகொள்ளலாம் என்னும் எண்ணம் எப்பொழுதும் ஒரு நாட்டுக்கு இருக்கவே கூடாது. இதுவே நமது சுதந்திர அரசாங்கத்தின் கொள்கையாகும். ஆனதால்தான் ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டங்களால் நம் நாட்டின், குறிப்பாக, நமது தமிழ் நாட்டின் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது என்று சொல்லலாம்.

**வேளாண்மைத் திட்டங்கள்**

1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இரண்டாவது திட்டம் தொடங்கியது. அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் மாநிலத்துடன் இணைந்தது. ஆனல் உணவு உற்பத்தி வேலைகளை அப்போதே தொடங்க முடியவில்லை. 1957 ஏப்ரல் மாதத்திலிருந்துதான் அந்த வேலைகள் தொடங்கின. அந்த வேலைகளில் நெல்விதை வழங்குதல், தழை உர விதை வழங்குதல், பழவகை அபிவிருத்தி, புகையிலை வளர்ச்சித் திட்டம், ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம், முந்திரி வளர்ப்பு, தென்னை வளர்ப்பு, பயிர்ப் பாதுகாப்பு, எண்ணெய் வித்துக்கள், கிராமப்புற எருவகை அபிவிருத்தி ஆகிய அம்சங்கள் இடம் பெற்று தொடர்ந்து செயற்படுத்தப்பட்டன.

இவையல்லாமல் வடிமுனைக் குழாய் கிணறு திட்டம், ஆற்றுநீர் இறைப்புத் திட்டம், மின்சாரப் பம்பு செட்டு வழங்கும் திட்டம் ஆகியவை பாசன வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டன.

அழகான இறகுகள் கொண்ட பறவை அழகாக இருக்கும். வலுவான நூலில் நெய்யப்பட்ட துணி திறமாக உழைக்கும்.

அதேபோல் உயர்வான விதையில் முளைத்த கதிர் செழிப்பாக வளரும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கென்று தனியாக நெல் விதைகள் உருவாக்கப்படவில்லை. ஆனல் பல பரிசோதனைகளுக்குப் பிறகு நான்குவித விதைகள் உகந்ததென்று தேர்ந்தெடுக்கப்பட்டன. அதுவும் இந்த விதைகள் மாவட்டததின் சில பகுதிகளுக்கு மட்டுமே ஏற்றதாக விளங்குகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதிஸ்வரத்தில் 32 ஏக்கருடன் கூடிய ஒரு நெல்விதைப் பண்ணை 1956-க்குமுன்பிருந்தே உள்ளது. இது இப்போது அரசாங்க விதைப் பண்ணையாக மாற்றப் பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள விதைப் பண்ணைகளுக்கு விதைகளை வழங்குவதற்காக இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் 1959—60-ல் இதனேடு சேர்ந்து மற்ருெரு பண்ணையும் ஏற்படுத்தப்பட்டது. அதனல் இது மொத்தம் 50 ஏக்கருக்கும் மேலுள்ள இரண்டு பண்ணைகளாயிற்று. இரண்டாவது திட்ட முடிவுக்குள் சுமார் 43 ஏக்கரில் நெல் பயிரிட்டுப் பார்க்கப்பட்டது.

இப் பண்ணையில் நிலம் கெட்டியான களிமண்ணுல் ஆனது. ஆகவே 1957-க்கு முன்பு இப்பண்ணையின் சராசரி நெல் விளைச்சல் சுமார் 1,500 பவுண்டுகளாகவே இருந்தது. ஆனல் இரண்டாவது திட்டத்தின் கிழ் பல அபிவிருத்தி வேலைகள் (திட்டமான உரம், தழை உரப்பயிர் வளர்ப்பு) மேற்கொள்ளப்பட்டமையால் இந்நிலத்தின் வளம் அதிகரித்தது. அதனல் இப்பண்ணையில் இரண்டாவது திட்ட முடிவின்போது சராசரி நெல் விளைச்சல் 1956-57ல் இருந்ததைவிட 65 சதவிதம் கூடியது. மாவட்டமெங்கிலும் உயர்ந்த ரக நெல்விதை வழங்கியதால் இரண்டாவது திட்டக் காலத்தில் நெல்உற்பத்தி சுமார் 6585 டன் அதிகரித்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தழைஉர விதை வழங்குதல்

உரம் என்ற சொல்லுக்குத் தமிழில் திண்மை, வன்மை என்று பொருள்கள் உண்டு. பயிர்கள் நன்ருகச் செழித்து வளர்ந்து வன்மையுடன் விளங்கப் பயன்படுவதால் உரம் என்ற பெயர் வந்தது எனலாம்.

தழைகளை வளர்த்து அவற்றை உரமாக்கிக்கொள்ளும் நடைமுறை 1957க்கு முன்புவரை இம்மாவட்டத்தில் அவ்வளவாகப் பரவவில்லை. இங்கிருந்த குடியானவர்கள் தங்களுக்குத் தேவையான தழைகளைக் காட்டு விளைபொருள்களிலிருந்தும், தழை மரங்களிலிருந்தும் பெற்றுப் பயன்படுத்திவந்தனர். ஆனல் இவ்விதமாகக் கிடைத்துவந்த தழை பற்றுக்குறையாகவே இருந்து வந்தது. ஆகவே தழைகள் சம்பந்தப்பட்ட மட்டில் குடியான

வர்கள் தன்னிறைவைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான உதவி களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எங்கெங்கு தழை வளர்ப்புக்கு ஏதுவிருக்கிறதோ அங்கெல்லாம் பெருவாரி யான தழை வளர்ப்பு—குறிப்பாக 'கிளிரிசிடியா' என்னும் தழை வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. 1957—61க்குள் 105 டன் தழை உற்பத்தி செய்யப்பட்டது. தழை உரவிதை வழங்கியதால் 289 டன் உணவு உற்பத்திகூடியது.

பழவகைகள் சத்துள்ளவை. ''நாளுக்கு ஒரு தக்காளி சாப்பிட் டால் வைத்தியரை நாடவேண்டியதில்லை'' என்பார்கள். இதேபோல் மாம்பழம், சப்போட்டா, ஆரஞ்சு, எலுமிச்சை ஆகிய கனிவகைகள் உடலுக்கு நலம் பயப்பவை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழவகை வளர்ச்சிக்காக இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நீண்ட காலத்தவணைகளில் ரூ. 26,200 கடனாகக் கொடுக்கப்பட்டது. இதன் உதவியால் சுமார் 88 ஏக்கர் நிலங்களில் பழத் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அத்துடன் பழவகைச் செடிகளும் கடன்திட்டத்தின்கீழ் விநியோகிக் கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை 2,645 ஆகும். கடன் திட்டத்தி லிருந்து நீங்கலாகவும் பழவகைச் செடிகள் வழங்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை 52415 ஆகும்.

**பணப் பயிர்**

பணப் பயிர்களில் புகையிலை ஒன்று. இங்கு புகையிலை பயிரிடப் படும் நிலப்பரப்பு ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வந்தது. 1957—58ல் 45 ஏக்கரில்மட்டும் புகையிலை பயிரிடப்பட்டது. ஆகவே அதன் அபிவிருத்திக்கான திட்டமொன்று இம்மாவட்டத்தில் 1958 ஜுன் மாதத்திலிருந்து அமுலுக்கு வந்தது. அதனால் திட்டக்காலத்தில் புகையிலை பயிரிடப்படும் நிலப்பரப்பு 205.74 ஏக்கரானது.

புகையிலை அபிவிருத்திக்கான திட்டம் 1960—61ல் ஒருங் கிணைந்த புகையிலை அபிவிருத்தித் திட்டத்துடன் ஒன்றாகச் சேர்க்கப் பட்டது. கோயம்புத்தூரிலுள்ள புகையிலை அபிவிருத்திஅதிகாரி இத் திட்டத்தை நிர்வகித்து வருகிறார். இத்திட்டம் மூன்றாவது ஐந்தாண் டுத் திட்டத்திலும் தொடர்ந்து இருந்து வரும்.

தென்னைமரங்களுக்கு '' நெபான்டிஸ் செரினோபா '' என்னும் நோய் வருவது உண்டு. இதைத் தடுத்து நிறுத்த ஒட்டுண்ணிகள் மிகவும் பயன்படுகின்றன : ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒட்டுண்ணி வளர்ப்புத் திட்டம் 1958—59ல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1959 ஆகஸ்ட்டில் ரூ. 3,600 செலவில் நாகர் கோவி

வில் ஒரு ஆராய்ச்சிக்கூடம் கட்டப்பட்டது. இந்த நிலையத்தின் துணைகொண்டு 1958—61-ல் 1·16 லட்சம் தென்னை மரங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இந்த ஒட்டுண்ணிகள் இம்மாவட்டத்தில் பயன்படுத்தப்படுவதோடு, பிற மாவட்டங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இவைகளால் தென்னை நோய் கணிசமான அளவு நிர்மூலமாக்கப்பட்டதுடன், தென்னை வளர்ப்பவர்களுக்கு நஷ்டமேற்படாமலும் இருக்கிறது.

முந்திரி வளர்ப்பவர்களுக்கு உதவியாக ஏக்கருக்கு ரூ. 80 கடனுதவிகொடுக்கப்படு கிறது. ஆனல் முந்திரி வளர்ப்புக்குச் சாலச் சிறந்த இடங்களில் ரப்பர் வளர்க்கப்படுவதால், முந்திரி வளர்ப்புக்கான கடனுதவித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை. இருந்த போதிலும் திட்டக் காலத்தில் 27 ஏக்கர்களுக்காக ரூ. 2,160 கடனுதவி வழங்கப்பட்டது. முந்திரித் தோட்டங்களுக்கும், மா, பலா மரங்களுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் 57,264 முந்திரிக் கன்றுகள் நடப்பட்டன. இவற்றால் முந்திரி வளர்ப்பு இம்மாவட்டத்தில் படிப்படியாக அபிவிருத்தி அடைந்து வருகிறது.

கன்னியாகுமரியின் மணற்பாங்கான பகுதிகளில் தென்னை செழிப்பாக வளர்கிறது. ஆனல் அதிகமான அளவில் தென்னையை வளர்க்க இங்குள்ள குடியானவர்களால் முடிவதில்லை. காரணம் தரமான தென்னங் கன்றுகள் நியாய விலைக்குக் கிடைப்பதில்லை. இக்குறையைப் போக்குவதற்காக 1958—59-ல் ஆசாரிப் பாளையத்தில் ஒரு தென்னம்பிள்ளைப் பண்ணை ஏற்படுத்தப்பட்டது. இங்கு நல்ல தரமான தென்னங்கன்றுகள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்தப் பண்ணை 1960—61-ல் விஸ்வபுரத்திற்கு மாற்றப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் இங்கு 63,100 தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

### பயிர்ப் பாதுகாப்பு

உரமிட்டு, நீர்ப்பாய்ச்சி, களை பறித்துவிடுவதால் மட்டும் பயிர்கள் செழித்து வளர்ந்துவிடும் என்று சொல்லமுடியாது. அவைகளுக்கு அவ்வப்போது ஏற்படும் நோய்களைத் தீர்க்கவும் வேண்டும். ஏனெனில் பயிர்ப்பாதுகாப்பு முக்கியம்.

இம்மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்புப் பணிகளுக்கும் உரிய இடம் தரப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் 36,750 ஏக்கர் நிலங்களில் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது. 66,602 மரங்களுக்குப் பாதுகாப்புத் தரப்பட்டுள்ளது. இப்பயிர்ப் பாதுகாப்புப் பணிகளால் உற்பத்தி 1,360 டன் அதிகரித்துள்ளது.

இவைகளல்லாமல் 121 மருந்து தெளிக்கும் கருவிகள் குடியான வர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்கப்பட்டன. மீதித்தொகை வேளாண்மைத் துறையின்வசமிருந்த நிதியிலிருந்து சரி செய்யப் பட்டது. மேலும் வட்டார நிர்வாக அலுவலகத்தின் வசமிருந்த நிதி யிலிருந்தும் பல மருந்து தெளிக்கும் கருவிகள்—டஸ்டர்கள் பாதி விலையில் வழங்கப்பட்டன.

பயிர்ப்பாதுகாப்பு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நவீன முறையில் சாகுபடி செய்வதும் ஆகும். ஜப்பானிய முறை யில் நெல் சாகுபடி செய்வது நம் நாட்டுக்கு உகந்த முறையாகும். நாடெங்கும் இம்முறையில் பரவலாகச் சாகுபடி நடைபெறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 1957-58லிருந்து 1960—61 வரை, ஆக நான்கு ஆண்டுகளில் 89,119 ஏக்கர்களில்ஜப்பானியமுறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதனால் 3580 டன் நெல் அதிக உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய முறையில் வேளாண்மையை மேற்கொள்ள நவீன கருவி கள் வேண்டும். அதற்காகக் குடியானவர்களுக்குப் பலதரப்பட்ட 1,520 நவீன கருவிகள் வழங்கப்பட்டன.

## உற்பத்தி உயர்ந்தது

உணவு உற்பத்தியில் எண்ணெய் வித்துக்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. தரமான எண்ணெய் வித்துக்களாலேயே அவ் வகையில் உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆதலால் நிலக் கடலை, எள், ஆமணக்கு ஆகியவற்றில் தரமான எண்ணெய் வித்துக்கள் வழங்கப்பட்டன. 1957—58-ல் 850 ஏக்கரில் எண் ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டன. இந்த எண்ணிக்கை தற்போது 1,600 ஆக உயர்ந்துள்ளது.

1957—61 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் 1·1 லட்சம் டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. இவற்றால் 545 டன் உணவு உற்பத்தி அதிகரித்தது.

உணவுத் துறையில் தன்னிறைவு காண்பதில் நாடு முழு மூச்சு டன் ஈடுபட்டுள்ளது. காடுகள் கழனிகளாகின்றன. தூர்ந்துகிடந்த குளங்களில் நீர் ததும்புகிறது. வெடிப்பு ஏற்பட்டுவிட்ட வாய்க் கால்களில் புதுப்புனல் வழிந்தோடுகிறது. அதனால் உற்பத்தி உயர் கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் அரிசி உற்பத்தி 70,000 டன்களிலிருந்து சுமார் 1·9 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

# விலங்குச் செல்வம்

சிலப்பதிகாரத்தில் ஓர் இடம். தன் கணவனைக் கள்வன் என்று எண்ணிக் கொன்றனர் எனும் செய்தி கேட்டுக் கண்ணகி சீறியெழுகிறாள். பாண்டியன் அவையில் தன் கணவன் குற்றமற்றவன் என்று மெய்ப்பித்தபின், மதுரை மாநகரைச் சுட்டெரிக்க விரும்புகிறாள். அக்னி தேவன்தோன்றுகிறான். அவனிடம்,

" பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவிஎனும் இவரைக் கைவிட்டுத் "

தீத்திறத்தோராகிய தீயவர்கள் பக்கமே சேர்ந்து அழிக்குமாறு கண்ணகி கூறுகிறாள். அவனும் அவ்வாறே மதுரையை எரிக்கத் தொடங்கினான்....அழகு மதுரையை அனல் பற்றி எரியும் பொழுது ஆசிரியர் இளங்கோவடிகள்,

"கறவையும் கன்றும் கனலெரிசேரா" என்று பாடுகிறார்.

உயர் குணத்தோரையும், வயோதிகரையும், பெண்டிரையும், குழவிகளையும் எரிக்க வேண்டாம் என்று சொன்ன கண்ணகி உடன் ஆவினங்களையும் சேர்த்துக் கொள்கிறாள். அவற்றை எரிக்காதே என்று கூறுகிறாள். அக்னி தேவனும் அவ்வாறே ஆவினங்களைத் தீண்டவில்லை. ஆதிகாலந்தொட்டு ஆவினங்களின்பால் நாம்காட்டும் அன்பை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

**உயிர்ச் செல்வங்கள்**

மாடு, கன்றுகளை நம் முன்னோர்கள் செல்வமாகக் கருதினர். அதே போல், ஆடு கோழி போன்ற உயிர்ச் செல்வங்களையும் அவர்கள் போற்றிப் பேணி வந்தனர். இன்றும் நாம் அவற்றை உயர்ந்த செல்வங்களுள் ஒன்றாகக் கருதி, அவைகளின் நன்மைக்கான பல திட்டங்கள் தீட்டிச் செயற் படுத்தி வருகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட விலங்குச் செல்வ அதிகாரி ஒருவர் அதற்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்து இந்திய மையக் கிராமத் திட்டம், அனைத்து இந்தியக் கோழி அபிவிருத்தித் திட்டம், நோய்த் தடுப்பு, மாவட்ட விலங்குச் செல்வக் கண்காட்சி, மையக் கிராம விஸ்தரிப்பு நிலையம் கட்டுதல், செயற்கை முறையில் சினைப்படுத்தும் திட்டம், நாகர் கோயில் விலங்கின மருத்துவ மனையில் பரிசோதனைக் கூடம் கட்டுதல், மையக் கிராமப் பகுதிகளில் கோழி வளர்ப்பு, கன்று உதவித் திட்டம், கோழி வளர்க்கும் தனி நபர்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

நாகர் கோயிலில் 1952-ல் தலைமை மையக் கிராம நிலையமும் அதைச் சார்ந்து தேரூர், நல்லூர், மருங்கூர், ராமபுரம் ஆகிய இடங்களில் நான்கு கிளை நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன. தலைமை நிலையமானது இரண்டாவது திட்டக்காலத்தில் கொட்டாரத்திற்கு மாற்றப்பட்டது. வாரியூர், மயிலாடி, ராமனுதிச்சன்புதூர், நல்லூர், பரக்கை ஆகிய இடங்களில் கிளை நிலையங்கள் உள்ளன. இக்கிளை நிலையங்களில் செயற்கைமுறையில்சினைப்படுத்தும் வேலை நடைபெறுகிறது. இதற்குத் தேவையான விலங்கினவிந்து தலைமை நிலையத்திலிருந்து கிளை நிலையங்களுக்கு வழங்கப் படுகிறது. விந்து சேகரிப்புக்காகத் தலைமை நிலையத்தில் இரண்டு சிந்தி காளைகளும், இரண்டு முர்ரா எருமைகளும் வளர்க்கப்படுகின்றன. மேலும் கிராமங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்காக நான்கு சிந்திக்காளைகள், நான்கு முர்ரா எருமைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 உதவியும் வழங்கப்படுகிறது. விந்து வழங்குவதற்காக ஒவ்வொரு கிளை நிலையத்திலும் ஒரு ஜீப் கார் உள்ளது.

### கோழியும் - குஞ்சுகளும்

இரண்டாவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் 17 கோழி விஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் இம் மாவட்டத்தில் உள்ள கொட்டாரம் (பெருமாள்புரம்) கோழி வளர்ப்புப்பண்ணையும் ஒன்று. இதில் 100 வெள்ளை லகான் கோழிகள் உள்ளன. நான்கு வேலையாட்களும் ஒரு மேல் ஊழியரும் இங்கு உள்ளனர். தற்போது இந்த நிலையமானது கோழி தர உயர்வுத் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் 100 சேவல்கள் வழங்கியுள்ளது. முட்டைகளும் வழங்கப்படுகின்றன. அலுவலகக் கட்டிடமும், மேல் ஊழியருக்கான குடியிருப்பு வசதியும் ரூ. 15,000 செலவில் கட்டப்பட்டது. மின் வசதியும் செய்யப்பட்டு வருகிறது. குஞ்சு பொரிக்கச் செய்யும் யந்திரங்கள் மற்றும் இதர சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. ரூ. 11,000 செலவில் வளர்ப்பு மனை கட்டப்பட்டு வருகிறது.

விலங்கினங்களுக்கு நோய் வராமல் தடுக்க இரு ஸ்டாக்மென்கள் உள்ளனர். இவர்களிடம் ஒருமொபைல் வண்டியும் உள்ளது.

### கண்காட்சி

பொதுவாகவே கண்காட்சிகள் அறிவை வளர்க்கக் கூடியவை. விலங்கினக் கண்காட்சிகள் விலங்கினச் செல்வங்களைப் பற்றிய நுண்ணறிவை வளர்க்க உதவுகின்றன. இந்த அடிப்படையில் இம் மாவட்டத்தில் இரண்டாவது திட்டத்தின் கீழ் விலங்கினக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. கோழிக் கண்காட்சி, கன்றுகள்



குருந்தங்கோடுவட்டாரம விவசாயிகளுககுப் பாதி விலையில் காங்கயம் காளைகள் வழஙகியுள்ளது. ஆவினங்களின் தர விருததககு இககாளைகள் பொதும உதவுகின்றன.

மற்றும் ஆட்டுக் கண்காட்சி, வேளாண்மை வாரம் ஆகியவைகளும் நடத்தப்பட்டன. 1957-61 ஆகிய நான்கு ஆண்டுகளில் நாகர் கோயில், முன்சிறை, பூதப்பாண்டி, ஆரல்வாய்மொழி, களக்காடு, பாறைக்குடி, வள்ளியூர் நல்லூர், சுசிந்திரம், கொட்டாரம் ஆகிய இடங்களில் இக்காட்சிகள் நடத்தப்பட்டன.

1960-61ல் தோவாளையில் ஒரு மையக் கிராம விஸ்தரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு மேற்பார்வை அதிகாரியும் இரு ஸ்டாக்மென்களும் இங்கு நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப் பட்ட நபர்களுக்கு 30 சிந்திக் காளைகள், 20 முர்ரா எருமைகள் வழங்கப்பட்டன. இவைகளைப் பராமரிக்க மாதமொன்றுக்கு ரூபாய் 30 வழங்கப்பட்டது.

நாகர் கோயிலில் இருந்த மையக் கிராம நிலையத்தைக் கொட்டாரத்திற்கு மாற்றி விட்டதால் நாகர் கோயிலில் 1960-61ல் ஒரு செயற்கை முறையில் சினைப்படுத்தும் நிலையம் ஏற்படுத்தப் பட்டது. விந்து சேகரிப்புக்காக இந்நிலையத்தில் இரு சிந்திக் காளைகள், இரு முர்ரா எருமைகள் உள்ளன. இது நாகர்கோயில் விலங்கின மருத்துவ மனையில் உள்ள விலங்கின உதவி சர்ஜனின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. இங்கு இரண்டு ஸ்டாக்மென்கள் உள்ளனர். நாகர் கோயிலிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் செயற்கை முறையில் சினைப்படுத்தும் வேலை நடைபெறுகிறது.

விலங்கினங்களுக்கும், கோழிகளுக்கும் வரும் நோய்களைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று 1960-61ல் நாகர் கோயில் விலங்கின மருத்துவ மனையில் அமைக்கப்பட்டது. இதற் கான கட்டிடம் ரூ. 10,000 செலவில் கட்டப்பட்டது. இந்தப் பிரிவும் விலங்கின உதவி சர்ஜனின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

கோழி வளர்ப்புத் திட்டத்தின் முக்கியமான அம்சம் மையக் கிராமப் பகுதியில் கோழிகள் தர உயர்வுக்கான நிலையம் ஒன்று அமைப்பதாகும். இந்நிலையம் நாட்டுக் கோழிகளை வாங்கிக் கொண்டு அவற்றுக்குக்குப் பதிலாக 200 லெக்கான் கோழிகளை வழங்கி யுள்ளது. இந்நாட்டுக் கோழிகள் வேறு இடத்திற்குக் கொண்டு போகப்பட்டு, ஏலத்தில் விற்கப்பட்டன. 100 முட்டைகள் பொரிக்கும் திறனுள்ள இரு குஞ்சு பொரிக்கும் யந்திரங்கள் இங்கு உள்ளன.

கிராமந்தோறும் சென்று கால்நடைப் பராமரிப்புப் பணியாற் றும் நிலையங்கள் 1960—61ல் ஆறுமனை, குலசேகரம், அழகிய பாண்டியபுரம், கன்னியாகுமரி ஆகிய நான்கு இடங்களில் ஏற்படுத் தப்பட்டன. நோய் கவனிப்பு, மாடுகளுக்குக் காயடித்தல், ஊசி போடுதல் ஆகியவை இப்பணிகளில் அடங்கியவையாகும்.

செயற்கை முறையில் சினைப்படுத்தியதன் மூலம் பிறந்த 40 கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் பராமரிப்புக்காக கன்று ஒன்றுக்கு ரூபாய் 10 உதவி நிதி அவற்றின் சொந்தக்காரர்களிடம் அளிக்கப்படுகிறது. இந்த உதவி நிதி இரண்டு ஆண்டுகளுக்குக் கொடுக்கப்படும்.

**விலங்கின நல நிலையம்**

கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தனி நபர்களுக்கு நிதி உதவி யாக 1959-61 ஆகிய இருஆண்டுகளில் சுமார் ரூ. 1,606 கொடுக்கப் பட்டுள்ளது. கோழிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக் கும் நிதி உதவி செய்யப்பட்டது.

வல்லமடத்தில் விலங்கின வளர்ப்புக்கான கூட்டுறச் சங்கம் அமைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மூன்று முர்ரா எருமைகளும், ஒரு சிந்தி காளையும் வழங்கப்பட்டன. விலங் கின நோய்களைக் கவனிக்கும் முதலுதவி நிலையம் ஒன்று தாழக்குடி யில் ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாவது திட்டக் காலத்தில் நாகர்கோயில், தக்கலை, குளித்துறை, ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி, கொட்டாரம், அழகப்பாபுரம், இறவைப்புதூர், தோவாளை, ஆறுமனை, குலசேகரம்

அழகியபாண்டிபுரம், கன்னியாகுமரி, வாரியூர், மயிலாடி, ராமனுதிச்சன்புதூர், நல்லூர், பரக்கை, விரநாராயணமங்கலம், சிரமடம், பரச்சேரி, அளத்தங்கரை, நத்தலம், கருங்கல் ஆகிய இருபத்தி நான்கு இடங்களில் விலங்கின நல நிலையங்கள் பணியாற்றின.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழு சமுதாய நல வட்டாரங்கள் உள்ளன. அவையாவன: அகஸ்தீஸ்வரம், முன்சிறை, ராஜக்காமங்கலம், குறுந்தங்கோடு, தோவாளை, மேல்புறம், கிள்ளியூர் வட்டாரங்களாகும். இந்த வட்டாரங்களில் உள்ள விலங்கின நல விஸ்தரிப்பு அதிகாரிகளும், ஸ்டாக்மென்களும் விலங்கின அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுள்ளனர். 50 காளைகள், 2000 வெள்ளை லெக்கான் கோழிகள் வட்டாரப் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளன. சிந்தி, காங்கயம் காளை ஒவ்வொன்றுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 200ம், முர்ரா எருமை ஒவ்வொன்றுக்கும் ரூ. 220ம் வழங்கப்படுகிறது.

## நமது கடமை

இந்தக் காளைகள் எல்லாம் விலங்கின நலத்துறையின் பிரிமியம் திட்டத்தில் சேர்க்கப்பட்டவையாகும். இதுவரை 25 சிந்தி, 16 காங்கயம் காளைகள், 10 முர்ரா எருமைகள் பிரிமியம் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவையல்லாமல் அரசாங்கக் காளைகள் வழங்கும் திட்டத்தில் ஒரு முர்ரா எருமையும், மையக் கிராமத் திட்டத்தில் 6 சிந்திக் காளைகளும், 6 முர்ரா எருமைகளும், மையக் கிராம விஸ்தரிப்பு நிலையத்தில் 30 சிந்திக்காளைகளும், 20 முர்ரா எருமைகளும், செயற்கை முறையில் சினைப்படுத்தும் நகரப்புற நிலையத்தில் 2 சிந்திக்காளைகளும், 2 முர்ரா எருமைகளும், விலங்கின நிலையங்களில் 8 சிந்தி, 6 முர்ரா, 1 காங்கயம் மாடுகளும் ஆக மொத்தம் 71 சிந்தி, 45 முர்ரா, 17 காங்கயம் மாடுகளும் உள்ளன.

இம்மாவட்டத்தில் தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஆகிய வட்டங்களில் பல பால் சங்கங்கள் உள்ளன.

நம் நாட்டில் லட்சக் கணக்கான விலங்கினங்கள் உள்ளன. அவைகளால் நம் வாழ்வு இன்னும் எவ்வளவோ வளம் பெற்றாக வேண்டும். ஆனால் அதற்கு, நாம் அவ்விலங்கினங்களைப் பராமரிக்கும் பணிதான் முதன்மையானது. பணம், மாடமாளிகை, ஆடை ஆபரணங்கள் மட்டும் செல்வங்களல்ல. விலங்கினங்களும் செல்வங்களே. அதை உணர்ந்து அவற்றைப் பேணிக் காப்பது நமது கடமை.

# காடுகள்

இயற்கையின் அழகை, காலைக் கதிரவனின் உதயத்திலும் காற்றிலும், கழனிகளில் மண்டி வளர்ந்துகிடக்கும் பசும்பயிர்களிலும் காணலாம். இதே அழகைக் காடுகளிலும் காண முடியும். ஆனால் கழனியில் தோன்றும் இயற்கையின் எழிலுக்கும் காடுகளில் மிளிரும் இயற்கையின் அழகுக்கும் கொஞ்சம் வேறுபாடு உண்டு. முன்னதன் அழகு மனதை மகிழ்விக்கும். பின்னதன் அழகு மகிழ்விப்பதுடன், மருட்சி உண்டாக்கவும் செய்யும். வானோங்கி வளர்ந்த மரங்கள், ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடக்கும் கொடிகள், நிலமே தெரியாதபடி பரவிக் கிடக்கும் புதர்கள் ஆகியவற்றைக் கண்டால் மனம் மருளாமல் என்ன செய்யும்! ஆனாலும் அதே சமயத்தில் அந்த அழகும் நம் மனதை விட்டு நீங்காது.

காடுகளைப்பற்றித் தமிழ் இலக்கியங்கள் அழகுறப் பாடுகின்றன.

"வெயில் நுழைபு அறியாக்
குயில் நுழை பொதும்பர்." என்று நமது நூலில்


பாடப்படுகிறது. கதிரவனின் கதிர்கள்கூட நுழைய முடியாதபடி வளர்ந்துள்ள காடு. ஆனாலும் குயில்கள் தங்கியிருந்து கூவிக் களிக்கின்றன.

இந்தக் காடுகள் உயர்ந்த செல்வங்களாகும். இவைகளால் நாம் அடையும் பயனை நன்கு அறிவோம். இக்காடுகளை யாரும் சீர்குலைத்துவிடாதபடி பாதுகாக்கத் திட்டங்கள் வகுத்திருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் காட்டுவளம் இடம்பெற்றுள்ளது.

**மரம் வளர்ப்பு**

தற்போது இம்மாவட்டத்தில் இரண்டு பாரஸ்ட் ரேஞ்சுகள் உள்ளன. இவற்றின் தலைமை இடம் அழகிய பாண்டிபுரமும், குலசேகரமும் ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 4,13,120 ஏக்கர்கள் ஆகும். இதில் காடுகளின் பரப்பளவு 1,10,080 ஏக்கர்கள். இக் காடுகளில் மரங்கள் வளர்ப்பதற்கேற்ற தட்ப வெட்பநிலை அமைந்துள்ளது. இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்து காடு அபிவிருத்திக்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, 1957லிருந்து அமுலில் இருந்து வருகிறது.

மாநிலப் பிரிவினையின் காரணமாக, தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மரம் வளர் நிலப்பரப்பு கேரள மாநிலத்துடன் சேர்ந்துவிட்டது. தற்போது உற்பத்தியாகும் மரங்கள்



அரசாங்கத் தேக்குப் பண்ணை

பற்றாக்குறையாக உள்ளன. மாநிலக் காடு அபிவிருத்தித் திட்டத்தில் தேக்கு, நூக்கமரம் போன்ற விலைமதிப்பான மர வகைகளை வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 800 ஏக்கரில் தேக்கு நட வேண்டும் என்று லட்சிய அளவு வகுக்கப்பட்டது ஆனல் 1957-61க்குள் துடலைக்காடு, செல்லந் துருத்தி, தாடிக்காரன் கோணம் ஆகிய இடங்களில் 1,135 ஏக்கர்களில் தேக்கு நடப்பட்டது. இதற்கான செலவு ரூ. 38,991 ஆகும்.

தீக்குச்சி செய்வதற்குத் தேவையான மெல்லிய மரவகை குறைவாகவும், பற்றாக்குறையாகவும் இருப்பதால், தகுந்த இடங்களில் அம் மர வகைகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் உதவி நிதி வழங்குகிறது. 1957-61க்குள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 600 ஏக்கர்களில் இம்மரங்களை நடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனல் 1961 மார்ச் மாதத்திற்குள் பாலமூர், துடலைக் காடு, பேச்சிப் பாறை, கடுவாய்வேட்டை ஆகிய நான்கு இடங்களிலும் 710 ஏக்கர்களில் இம் மரவகை நடப்பட்டது. இதற்கான செலவு ரூ. 32,741 ஆகும். இந்த இடங்களில் நெல், மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்ய குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. ஆனல் மரவகைகளைப் பாதிக்

காதவகையில் அவற்றைப் பயிர் செய்யவேண்டும் என்று குத்தகை தாரர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அரக்கு லாபகரமான வர்த்தகப் பொருளாகும். அரக்கு உற்பத்திக்குப் பூவன் மரங்கள் தேவை. அவை இம் மாவட்டத்தில் அபரிமிதமாய் உள்ளன. 1960-61 வரையில் 30 ஏக்கரில் அம்மரங்கள் வளர்க்கப்பட்டன. மற்றும் 69 ஏக்கர்களில் இதர மரவகைகளுடன் சேர்த்து வளர்க்கப்பட்டன. 1960-61 வரையில் ரூ. 16,655 செலவிடப்பட்டது. அரக்குப்பொருள்கள் கம்பம் அரக்குத் தொழிற்சாலைக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

காட்டுப் பொருட் செல்வம் அன்றாட வாழ்க்கைக்கு உதவியாக இருப்பதுடன், வாணிபத்தையும் செழிப்புள்ளதாக்குகிறது. ஆகவே காடுகளைச் செழிப்புள்ளனவாக்கி மேலும் மேலும் அவற்றிலிருந்து பயன்பெற வேண்டும்.

## மீன்வளம்

மீன் சுவையான உணவு. சத்துள்ள உணவும் ஆகும். நமது உணவுகளில் மீன் உணவும் முக்கியமான ஒன்றாகும்.

பொதுவாக நம் நாட்டில், குறிப்பாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் அதிகம் கிடைக்கிறது. ஆகவே அங்கு மீன் உணவு பரவலாக இருப்பதில் வியப்பில்லை. சுமார் 646 சதுர மைல் பரப்பளவு உள்ள இம்மாவட்டத்திற்கு 42 மைல் நீளக் கடற்கரை இருக்கிறது. இது மட்டுமில்லாமல் பல உள்நீர்த்துறைகளும் உள்ளன. இவை இரண்டிலும் சேர்த்து ஆண்டுக்கு மொத்தம் 25,000 டன் மீன் பிடிபடுகின்றது. இதில் சுமார் 13,000 டன் மீன் இங்கேயே பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய மீன் பதன்படுத்தப்பட்டு இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்மாவட்டத்தில் மீன் அளத்துறையில் சிறப்பாக எவ்வித வேலையும் மேற்கொள்ளப்படவில்லை. ஏணியம்புத்தன் துறையில் மீன் பதன்படுத்தும் நிலையம் ஒன்று கட்டப்பட்டது. உப்பு உதவித்திட்டம் மட்டும் அமுலில் இருந்தது. கன்னியாகுமரி, முட்டம், கடியாப்பட்டினம், குளச்சல், தூத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசாங்க மீன் பதனப் பண்ணையில் மீன் பதன்படுத்துவோருக்கு மீன் அளத்துறை உதவி நிதியில் உப்பு வழங்கிவந்தது. இதைத் தவிர சிறப்பான ஆக்க வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் இரண்டாவது திட்டக் காலத்தில் குறிப்பிடத்தக்க பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மீனவர்களுக்கும் நீண்ட கால, குறைந்தகாலத் தவணையில் கடன்களும், கிடங்கு கட்டுவதற்கான கடனும், பங்கு மூலதனக் கடனும் கொடுக்கப்பட்டன. 17 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு, அவர்கள் தங்களது முந்திய கடனைத் திருப்பிச் செலுத்தவும், தரகர்களின் சுரண்டலிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக மீன் பிடித்து விற்பனை செய்து வாழவும் உதவும் வகையில் ரூ. 2·19 லட்சம் நீண்டகாலத் தவணையில் கடனாகக் கொடுக்கப்பட்டது. ஒரு சங்கத்திற்கு ரூ. 3,000 குறைந்த காலத் தவணையில் கடனாகக் கொடுக்கப்பட்டது.

**கடன் உதவி**

மீன்களை உலரவைக்கவும், அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கவும் ஏதுவாகக் கிடங்குகள் கட்டுவதற்கு 3 சங்கங்களுக்கு (மூன்று கிடங்குகள் கட்ட) ரூ. 5800 நீண்டகாலத் தவணைக் கடனாகவும், ரூ. 5800 உதவிப் பணமாகவும் கொடுக்கப்பட்டன. மீனவர் சங்கங்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கவும், மீன் விற்பனையில் அச்சங்கங்களுக்கு உதவியாக இருக்கவும் அரசாங்கம் பங்கு மூலதனக் கடன் தருகிறது. நாகர்கோயிலில் உள்ள கன்னியா

குளச்சல் என்னும் ஊரில் உள்ள மீன் பதனப் பண்ணை



குமரி மாவட்ட மீனவர் கூட்டுறவு பெடரேஷனுக்கு இவ்வகையில் ரூ. 2000 கொடுக்கப்பட்டது.

மீன்களை உலரவைத்துப் பதன்படுத்துவதற்கு உப்பு வேண்டும். இம்மாவட்டத்தில் கன்னியாகுமரி, முட்டம், கடியாப்பட்டினம், தூத்தூர், குளச்சல், ஏணையம்புத்தன்துறை ஆகிய ஊர்களில் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. இங்கு மீன் பதப் படுத்துவோருக்கு உப்பு சகாய விலையில் வழங்கப் பட்டது. 1957 ஏப்ரல் தொடக்கத்திலிருந்து 1961 மார்ச் முடிவு வரை 14,111 டன் பதன்படுத்தப்பட்ட மீன் தயாரிக்கப்பட்டது.

கடலில் மின்விசைப் படகுகளை நங்கூரம்பாய்ச்சி விட்டு, மீன் பிடிப்பதில் பல அபாயங்கள் உள்ளன. இவற்றைத் தவிர்த்து, புதிய மீன்பிடி முறைகளை அமுல் செய்வதற்காக இரண்டாவது திட்டக் கால முடிவில் குளச்சல் துறைமுகத்தில் 6 படகுகள் கட்டும் மிதப்புகள் வழங்க ரூ. 10,000 அநுமதிக்கப்பட்டது.

## உதவித் திட்டங்கள்

மீன்பிடித் தொழிலில் புதிய முறைகளையும், புதிய சாதனங்களையும் புகுத்தினால்தான் அத் தொழில் மேலும் வளர்ச்சி அடைய முடியும். இந்த நோக்கத்துடன் இம்மாவட்டத்தில் ரூ. 1·96 லட்சம் மதிப்புள்ள 34 மின் விசைப்படகுகள் சலுகைவிலையிலும், தவணை முறையிலும் வழங்கப்பட்டன.

செயற்கைப்பட்டு முறுக்கு நூலால் பின்னப்பட்ட நைலான் வலைகளும், வலைபின்னுவதற்கும், நசிந்த இடங்களில் புதுப்பின்னல் போடுவதற்கும் உதவியாக ரூ. 42,000 மதிப்புள்ள செயற்கைப் பட்டு முறுக்கு நூலும் குறைந்த விலையில் வழங்கப்பட்டன. இதை இரண்டு ஆண்டுகளுக்குள் 18 தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம். மேலும் இந்த நூலை இறக்குமதி செய்துகொள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அநுமதியும் வழங்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட மீனவர் பெடரேஷன் நூல் இறக்குமதி செய்து, சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு அதை வழங்கியது.

மீன் பிடிபட்டவுடன் வெகு துரிதமாக உள் நாட்டுச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். இதற்காக புதுக்கடை, கன்னியாகுமரி, செண்பகராமன் புதூரிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 மூன்று சக்கர "லாம்பிரட்டா" வண்டிகள் தவணை முறையில் வழங்கப்பட்டன.



குளச்சல் வாழ் மீனவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன.

மிக விரைவில் வளரக்கூடிய 1·68 லட்சம் மீன் முட்டைகள் மாணுக்குடி ஏரியிலிருந்து சேகரிக்கப்பட்டன. இந்த முட்டைகளை மீன்வளர்க்கும் தனிநபர்களுக்கு விநியோகிப்பதற்காக (வட்டார) வளர்ச்சி அதிகாரிகளிடம் இவை கொடுக்கப்பட்டன. தற்போது இவை பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் வைக்கப் பட்டுள்ளன. மேலும் மாநிலத்தின் பிறபகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பலவகைப்பட்ட 2·3 லட்சம் மீன் குஞ்சுகள் இந்நீர்த் தேக் கங்களில் வளர்க்கப்படுகின்றன. பெருஞ் சாணி, பேச்சிப் பாறை ஆகிய இரு நீர்த்தேக்கங்களிலும் இரண்டாவது திட்டக் காலத்தில் முறையே 65,972; 2,04,675 மீன் குஞ்சுகள் வளர்க்கப் பட்டன.

**மீன் உரம்**

மீன்கள் கெட்டுப் போகாவண்ணம் அவற்றைப் பனிக்கட்டியில் வைத்துப் பாதுகாப்பதற்காகக் குளச்சலில் ஒரு பனிக்கட்டி யந்தி ரம் நிறுவும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகர் கோயிலிலும் மீன்களைப் பாது காப்பதற்கான நிலையம் அமைக்கப் படும்.


மீன் கழிபொருள்கள், உபரி மீன் ஆகியவற்றைக் கொண்டு மீன் உரம் தயாரிப்பதற்காகக் கன்னியாகுமரியில் ஒரு மீன் யந்திரம் நிறுவும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீன்களைப் பதப்படுத்தும் நிலையத்திற்கு அருகிலேயே இது அமைக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி அறிவுள்ள மீனவர்களுக்கு, தூத்துக்குடி பயிற்சி நிலைய உதவி நெறியாளரின் கீழ், புதிய படகுகளை இயக்குவது, ஆழ்கடலில் மீன்பிடிப்பது ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்விதமாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்விதமெல்லாம் மீன் அளத்துறையை வளர்ச்சியுறச் செய்ய முடியுமோ அதற்கான ஆக்க வேலைகளெல்லாம் இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது திட்டச் சாதனைகளால் இம் மாவட்டத்தில்: மீன் வளம் பெருகி உள்ளது.

———

# கிராமங்களில் புதுவாழ்வு



மனிதன், தனது உடலில் ஏதேனும் ஒரு அங்கம் நோய்வாய்ப் பட்டால் அதை அவன் புறக்கணிப்பதில்லை. புறக்கணிக்கவும் கூடாது. நகரங்களைப் போல் தான் இந்திய நாட்டின் அங்கமாகத் திகழ்பவை கிராமங்கள். அவைகளைப் புறக்கணித்து விட்டு நாம் நகரங்களை மட்டும் சிர்படுத்திக் கொண்டிருக்க முடியாது. அந்நியர் ஆட்சியில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டன. அவற்றின் வளம் சூறையாடப்பட்டது. தொழில் வளம் பின் தங்கியது.

நாடு விடுதலை அடைந்த பின் கிராமங்களுக்கு நல் வாழ்வு அளிக்கும் திட்டங்கள் முனைப்பாக மேற்கொள்ளப் பட்டன. ஆரம்பத்தில் பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் கொண்டுவரப்பட்டது. பின்னர் சமுதாய நல வளர்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட்டது.

இதன்படி வட்டாரங்கள் பிரிக்கப்பட்டன. பல அகிராமங்கள் கொண்டது ஒரு வட்டாரம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 வட்டாரங்கள் ஏற்படுத்த வரையறுக்கப் பட்டது. இவற்றில் 7 எல்லாவசதிகளும் பொருந்திய வட்டாரங்களாகும். மற்ற 2 சாதாரண வட்டாரங்களாகும். இந்த ஏழு வட்டாரங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலை களுக்காக 1956 நவம்பரிலிருந்து ரூ. 55 லட்சம் செலவிடப் பட்டது. மற்றும் ஸ்தல விஸ்தரிப்புத் திட்டமும் நடைமுறைக்கு வந்தது. இதில் குடிதண்ணீர் வழங்குவது, சாலை மற்றும் கட்டி டங்கள், கிராமப்புற சுகாதாரம், பாசனம், வேளாண்மை அபி விருத்தி, பொதுச் சுகாதாரம் ஆகியவை இடம் பெற்றன. இரண் டாவது திட்டக் காலத்தில் ஸ்தல விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் 788 வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 374 வேலைகள் முடிவடைந்தன. இதற்காக ரூ. 16.1 லட்சம் செலவிடப் பட்டது.

## தலஆட்சி முறை

நாகர் கோயில் நகராட்சியில் வடசேரி மீன் சந்தையில் கடை கள் கட்ட: நாகர் கோயில் நகராட்சி மன்றத்திற்கு ரூ. 8,750 அரசாங்க உதவி நிதி கிடைத்தது. மொத்தம் ரூ. 6,800 செலவு மதிப்பீட்டில் 10 கடைகள் கட்டப்பட்டுள்ளன. மற்றும் ரூ. 4,636 செலவில் கூடுதலாகஎட்டு கடைகள் கட்டப்படுகின்றன. மீன் சந்தை அபிவிருத்திக்காக 1959-60ல் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கடனிலிருந்து இந்த வேலை மேற்கொள்ளப்படுகிறது. ஸ்தல அபி விருத்தித் திட்டத்தின் கிழ் வள்ளங்குமாரவிளையிலும், சாரக்கால் விளையிலும் இரு நூல் நிலையங்கள் கட்டப்பட்டன. முதலாவது நூல் நிலையத்திற்கு ரூ. 5,400 செலவானது. இதில் பொதுமக்க ளின் உழைப்பு ரூ. 2,500 ஆகும். இரண்டாவது நூல் நிலையத் திற்கு ரூ. 3,500 செலவானது. இதில் பொது மக்களின் உழைப்பு ரூ. 917 ஆகும். ரூ. 22,323 செலவில் 20 வீடுகள் கட்டப்பட்டு நகராட்சி மன்ற வேலையாட்களுக்குக் கொடுக்கப்பட்டது. அரசாங் கத்திடமிருந்து கிடைத்த கடன் தொகையிலிருந்தே இவை கட்டப் பட்டன. குடிநீர்த் திட்டத்தின் கிழ் ரூ. 42,200 செலவில் ஒரு மூன்றுவது வடிகட்டும் யூனிட்டும் அமைக்கப்பட்டது. இதற்கு அரசரங்கம் கடனுதவி அளித்தது. வடசேரி ஏலங்கடை சந்தைகளில் கடைகள் கட்ட 1957-58, 1958-59, 1959-60 வரை ஆண்டு தோறும் ரூ. 20,000 விதம் மொத்தம் ரூ. 60,000 அர சாங்கம் கடனுகக் கொடுத்தது. பஸ் நிலையம் அமைப்பதற்காகவும்

அரசாங்கத்திடமிருந்து ரூ. 61,000 கடன் வாங்கப்பட்டது. ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 4 கக்கூஸ்கள் கட்டப்பட்டு நகராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப் பட்டன. 1951-ல் நகராட்சி எல்லைக்குள் நாகர்கோவில் திருவனந்தபுரம் சிமெண்ட் சாலையைத்தவிர வேறு உயர்ந்த ரகச் சாலைகள் எதுவும் இல்லை. ஆனால் 1956-ல் 4 சாலைகளுக்குத் தார் போடப்பட்டது. 1959-60ல் மூன்று சாலைகளுக்குத் தார் போடப் பட்டது. இதற்காக ரூ. 27,450 கடனாகவும் ரூ. 24,275 மான்யமாகவும் கொடுக்கப்பட்டன.

பத்மநாபபுரம் நகராட்சியில் இரண்டு கிணறுகள் வெட்டவும், மூன்று இடங்களில் சாக்கடை வசதி செய்யவும், இரண்டு கக்கூஸ்கள் கட்டவும் ரூ. 18,900 செலவு மதிப்பீடாகக் கணக்கிடப் பட்டுள்ளது. நகராட்சிச் சந்தையில் அபிவிருத்திகள் செய்ய 1957-58ல் அரசாங்கம் ரூ. 20,000 கடன் வழங்கியது.

குளித்துறை நகராட்சியில் காய்கறிச் சந்தையில் ரூ. 15,000 செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. ரூ. 25,800 செலவில் இரு சாலைகளுக்குத் தார் போடப்பட்டது. ரூ. 11,200 செலவில் மற்றொரு சாலைக்குத் தார் போடப்படுகிறது.

குளச்சல் நகராட்சியில் மீன்அள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 7,000 செலவில் ஒரு மீன் சந்தை நிர்மாணிக்கப்பட்டது.

**பஞ்சாயத்துகளுக்குக் கடன் உதவி**

சந்தைகளில் அபிவிருத்தி வேலைகள் செய்வதற்காக பூதப்பாண்டி, திருவட்டாறு, குளச்சல், மிடாலம், மேட்டுக்கும்பல் பஞ்சாயத்துகளுக்கு அரசாங்கம் முறையே ரூ. 10,000; ரூ. 15,000; ரூ. 5,000; ரூ. 15,000; ரூ. 2,000 கடன் வழங்கியது. பஸ் நிலையம் அமைப்பதற்காகத் தாலக்குளம், திருவட்டாறு பஞ்சாயத்துகளுக்கு முறையே ரூ. 30,550 ரூ. 15,000 கடன் கொடுக்கப்பட்டது. இறைச்சிக்காக ஆடுவெட்டும் கிடங்கு கட்ட விளவங்கோடு பஞ்சாயத்துக்கு ரூ. 2,000 கடன் கொடுக்கப்பட்டது. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டத்திற்காகச் சுசீந்திரம் பஞ்சாயத்து ரூ. 12,000 கடன் பெற்றது. கம்போஸ்ட் உரம் தயாரிக்க பூதப்பாண்டி, ஆரல் வாய்மொழி, கோத்த நல்லூர், ஆத்தூர், மேட்டுக்கும்பல், பொன்மனை அருவிக்கரை, தாமரைக்குளம் பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000 கொடுக்கப்பட்டது. இந்தக் கடன்கள் முதல் இரு திட்டக்காலங்களில் கொடுக்கப்பட்டவையாகும்.

---



# கல்வி விளக்கு

அது ஒரு மருந்து. அந்த மருந்தை நெருப்பு எரிக்கமுடியாது. தண்ணீர் கரைக்க முடியாது. காற்று சிதைக்க முடியாது. யார் எவ்வளவு தான் முயன்றாலும் அந்த மருந்துக்கு எவ்விதமான கேடும் செய்ய முடியாது. அந்த மருந்தைப் பிறருக்குக் கொடுப்பவர்களிடம் அது குறைவதில்லை. அதை வாங்கி உண்பவர்கள் அனைவரிடமிருந்து மறையும் நோய் ஒன்றே ஒன்றுதான். அதுவே அறியாமை. கல்வியே அந்த மருந்து.

பழங்காலந் தொட்டு நம் நாடு கல்வியின் சிறப்பை உணர்ந்துள்ளது. அதிலும் விடுதலைக்குப்பின் நம்மிடையே ஏற்பட்டுள்ள கல்வி ஆர்வத்திற்கு ஓர் அளவில்லை என்றுதான் சொல்லவேண்டும். நமது கல்வித் திட்டங்களை எடுத்துக்கொண்டால் அதில் மக்களின் ஆர்வமும், அரசாங்கத்தின் முயற்சியும் பிரதிபலிக்கக் காணலாம். ஆனால், இந்த ஆர்வம் நாட்டின் விடுதலைக்குப்பின் ஏற்பட்டது

என்று அறியும் பொழுது சிறந்த எதிர்காலத்தைக் குறிக்கும் நல்ல அறிகுறி என்ற எண்ணம் மேலிடுகிறது.


கல்வி சிறந்த நாடு தமிழ் நாடு. அதனோடு கன்னியாகுமரி மாவட்டம் இணைவதற்குமுன் அங்கு கல்வி நிலை ஓரளவு வளர்ச்சி அடைந்திருந்தது என்றே சொல்லவேண்டும். அப்போதிருந்த அரசாங்கம் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொள்ளத் தவறவில்லை. 1946-47ல் இம்மாவட்டத்தில் கட்டாய ஆரம்பக் கல்வி சட்டமாக்கப்பட்டது. ஆனால், முக்கியமான சில ஷரத்துக்கள் அமுல் செய்யப்படவில்லை. இருந்தாலும் மாணவர்கள் எண்ணிக்கை திருப்திகரமாகவே இருந்து வந்ததாகத் தெரிகிறது.

### கல்வி நிறுவனங்கள்

முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951ல் ஆரம்பமானது. அப்போது இம்மாவட்டத்தில் 429 தொடக்கப் பள்ளிகளும், 71 உயர்தர ஆரம்பப்பள்ளிகளும், 3 பயிற்சிப் பள்ளிகளும், 33 உயர் நிலைப் பள்ளிகளும், 1 கல்லூரியும் இருந்தன.

இனி, முதல் திட்டக்காலத்தில் 3 லோயர் ஆரம்பப்பள்ளிகளும், 2 உயர்தர ஆரம்பப்பள்ளிகளும், 1 ஆதாரப் பயிற்சிப் பள்ளியும், 1 சாதாரண பயிற்சிப் பள்ளியும், 5 உயர் நிலைப்பள்ளிகளும், 1 கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டன. ஆக முதல்திட்ட முடிவில் 432 தொடக்கப் பள்ளிகளும், 73 உயர்தர ஆரம்பப்பள்ளிகளும், 5 பயிற்சிப் பள்ளிகளும், 38 உயர் நிலைப்பள்ளிகளும், 2 கல்லூரிகளும் இருந்தன. பின்னர் இரண்டாவது திட்டக்காலத்தில் 1 லோயர் ஆரம்பப்பள்ளியும், 12 உயர்தர ஆரம்பப் பள்ளிகளும், ஒரு ஆதாரப் பயிற்சிப் பள்ளியும், ஒரு உயர் நிலைப்பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் இந்தக் காலத்தில் 22 உயர்தர ஆரம்பப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 3 பயிற்சிப் பள்ளிகள் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாகவும் மாற்றப்பட்டன. ஆக இப்பொழுது 433 தொடக்கப் பள்ளிகளும் (4 லோயர் ஆரம்பப் பள்ளிகளையும் சேர்த்து) 63 உயர்தர ஆரம்பப் பள்ளிகளும், 5 ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளும், 1 சாதாரணப் பயிற்சிப் பள்ளியும், 61 உயர்நிலைப் பள்ளிகளும் (உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்ட 22 உயர்தர ஆரம்பப் பள்ளிகளையும் சேர்த்து) 2 கல்லூரிகளும் உள்ளன.

1951ல் கல்லூரி நீங்கலான இதர கல்வி நிறுவனங்களில் 1,56,784 மாணவர்கள் (இதில் 71,281 பெண்கள்) படித்து வந்தனர். தற்பொழுது 2,03,993 மாணவர்கள் (இதில் 92,765



தூத்தூரில் உள்ள உயர்நிலைப்பள்ளி. அரசாங்க உதவியுடன் மக்கள் உருவாக்கியது.

பெண்கள்) படிக்கின்றனர். கீழ்வரும் அட்டவணையில் தனித்தனிப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1951 | | | 1961 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| தொடக்கப் பள்ளிகள் | 60,348 | 52,437 | 1,12,785 | 80,598 | 70,744 | 1,51,342 |
| உயர்தர ஆரம்பப் பள்ளிகள் | 15,417 | 13,125 | 28,542 | 15,588 | 13,246 | 28,834 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 9,638 | 5,619 | 15,257 | 14,742 | 8,625 | 23,367 |
| பயிற்சிப் பள்ளிகள் | 100 | 100 | 200 | 300 | 150 | 450 |


முதல் திட்டக் காலத்தில் 160 ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆதாரக் கல்வியில் 90 நாட்கள் மறுபயிற்சி அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக்காலத்தில் 190 ஆசிரியர்களுக்கு ஓராண்டுக்கு ஆதாரப் பயிற்சி அளிக்கப் பட்டது. மற்றும் 1960-61ல் 600 ஆசிரியர்களுக்கு ஆதாரக்கல்வி அடிப்படையில் புனர்ப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் இரண்டாவது திட்டக்காலத்தில் 66 ஆரம்பப் பள்ளிகள் ஜூனியர் ஆதாரப் பள்ளிகளாகவும்,

3 உயர்தர ஆரம்பப் பள்ளிகள் சீனியர் ஆதாரப் பள்ளிகளாகவும் மாற்றப்பட்டன.

இம்மாவட்டத்தில் 1946-47ல் கட்டாய ஆரம்பக் கல்வி அமுலாக்கப்பட்டது என்று பார்த்தோம். அதே சமயத்தில் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட எல்லா ஆரம்பப் பள்ளிகளி லும், உயர்நிலைப் பள்ளி, பயிற்சிப் பள்ளிகளில் உள்ள ஆரம்ப வகுப்புகளிலும், நடுத்தரப் பள்ளிகளிலும் படிக்கும் ஏழை மாணவர் களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டமும் அமுலாக்கப்பட்டது. மற்றும் முதல் திட்டக்காலத்தில் சிலேடுகள், ஆடைகள் முதலியன வும் இலவசமாக வழங்கப்பட்டன. மற்றும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு சம்பளச் சலுகைகளும், உபகாரச் சம்பளங்களும் வழங்கப்பட்டன.

பள்ளி அபிவிருத்தித் திட்டங்களும் முதல் திட்டகாலத்தில் மேற் கொள்ளப்பட்டன. 23 லோயர் ஆரம்பப்பள்ளிக் கட்டிடங்களை விஸ்தரிக்கவும், 4 பள்ளிகளுக்குக் காம்பவுண்டுச் சுவர் கட்டவும், 10 பள்ளிகளுக்குக் கக்கூஸ் வசதி செய்துதரவும், மற்றும் சில பள்ளிகளுக்குத் தேவையான மேஜை நாற்காலிகள் வாங்கவும் ரூ. 48,500 செலவிடப் பட்டது.

அரசாங்க உயர்நிலைப்பள்ளி : வகஸ்திஸ்வரத்திலுள்ளது. இதைக்கட்டுவதற்கு மக்களும் நன்கொடை அளித்துள்ளார்கள்




மேற்சொன்ன கல்வி வளர்ச்சித் திட்டங்கள் யாவும் இரண்டாவது திட்டக்காலத்திலும் மேற்கொள்ளப்பட்டன. இலவச உணவுத் திட்டம், இலவச உடை வழங்கும் திட்டம் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றன. பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்குச் சம்பளச் சலுகைகள், உபகாரச் சம்பளங்கள் வழங்குவது விஸ்தரிக்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 116 பள்ளிகளுக்குத் தற்காலிக இட வசதி செய்து கொடுக்கவும், 14 பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டவும், 5 பள்ளிகள் கட்ட நிலம் வாங்கவும், 10 பள்ளிகளுக்குத் தேவையான மேஜை நாற்காலிகள் வாங்கவும், 1 பள்ளிக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்டவும் ரூ. 78,000 செலவிடப்பட்டது.

இரண்டாவது திட்டக்காலத்திற்கு முன்பு இம்மாவட்டத்தில் விடுதி வசதி கிடையாது. ஆனால் இரண்டாவது திட்டக் காலத்தில் இக்குறை ஓரளவு நீக்கப்பட்டது. குறிப்பாக ஆசிரியைகளுக்குத் தேவையான விடுதி வசதி செய்ய 24 பிரிவுகள் கட்ட இரண்டாவது திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. இதுவரை 7 பிரிவுகள் கட்டப்பட்டுள்ளன. ஏஞ்சியவை கட்டப்படுகின்றன. விரைவில் இந்த வேலை முடிவடைந்து விடும்.

### தொழில் படிப்பு

முதல் திட்டக்காலத்தில் இம்மாவட்டத்தில் மூன்று உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி (விவசாயம் முதலியவை) கற்றுத்தர ரூ. 67,705 செலவிடப்பட்டது. அதேபோல் இரண்டாவது திட்டக் காலத்தில் 15 உயர்நிலைப்பள்ளிகளில் நூல் நிலையங்களை அபிவிருத்தி செய்யவும், 5 உயர்நிலைப் பள்ளிகளில் கைத்தொழில்கள் கற்றுத்தரவும், 15 பள்ளிகளில் தொழில் பாடங்களை அபிவிருத்தி செய்யவும் ரூ. 3·45 லட்சம் செலவிடப்பட்டது.

தமிழ் நாட்டில் படித்தவர்கள் தொகை அதிகமுள்ள மாவட்டம் சென்னை (நகரம்) மாவட்டமாகும். இதற்கு அடுத்த ஸ்தானம் வகிப்பது கன்னியாகுமரி மாவட்டமே. 1961-ம் ஆண்டுக் கணக்குப்படி இங்குள்ள மொத்த மக்கள் தொகையில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் சதவீதம் 48.1 ஆகும். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் சதவிதத்தை விட சுமார் 18 சதவீதம் அதிகமாகும். அந்த வகையில் கல்வித் துறையில் கன்னியாகுமரி மேம்பட்டிருப்பதற்காக அங்கு கல்வித் துறை நடவடிக்கைகளின் வேகம் குறையப்போவதில்லை. மேன் மேலும் இம்மாவட்டம் முன்னேறத்துடிக்கிறது. படிப்படியாக அதில் வெற்றியும் அடைந்து வருகிறது. இதே வேகத்தில் சென்றால் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் எவருமில்லை என்னும் நிலை உண்டாக அதிகக் காலம் பிடிக்காது.




ஒரு பெரிய ஏரி. அதன் உயர் மட்டக்கரை வரையில் நீர் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ஏரிக்கரையின் அருகில் நஞ்சை நிலம். நெல் செழித்து வளர்ந்திருந்தது. அதற்கடுத்தாற்போல் ஒரு கிணறு. இளைஞன் ஒருவன் 'ஏற்றம் இறைத்து' வயல்களுக்கு நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தான். உடல் உழைப்பால் வேர்வை அருவிபோல் வழிந்து கொண்டிருந்தது.

அவ்வழியே வந்த ஒரு முதியவர் இளைஞனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "ஏரியில்தான் நீர் பொங்கி வழிகின்றதே. அதை லாவகமாகத் திருப்பி வயல்களுக்குப் பாய்ச்சுவதை விட்டு விட்டு இப்படி இடுப்பொடியச்சிரமப்படுகிறாயே" என்று கேட்டார்.

அதற்கு இளைஞன் "ஏரியில் நீர் இருக்கிறதே என்று நான் சோம்பலாக இருக்கக்கூடாது 'என்று என் தந்தை சொல்லியிருக்கிறார்" என்றான். அதற்கு முதியவர்" ஆமாம்; சோம்பலாக இருக்கக் கூடாது என்று உன் தந்தை சொல்வது உண்மையான வார்த்தை

தான். ஆனால், அதற்காகப் புத்திக் கூர்மையாக இல்லாமல் இருக்க வேண்டுமா?'' என்று கேட்டார்.

இளைஞனுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. முதியவர் விளக்கம் சொன்னார்.

'' தம்பி ! நீ விரும்புவது வயலுக்கு நீர்பாய்ச்ச வேண்டும் என்பதுதான். அதற்கு நீ ஏரிக்கரை நீரையே பயன்படுத்திக் கொள்ளலாம். அதை விட்டு விட்டு உடல் சோர்ந்துவிடும்படி வீணாகச் சிரமப்பட்டு நீயாகவே நீர் இறைத்தால்தான் பயிர் வளருமா ? பக்கத்து ஊருக்குச் செல்வதற்கு வண்டி வாகனாதிகள் இருக்கும்பொழுது அதில் பிரயாணம் செய்தால் சோம்பல் வளரும் என்று நடந்தே போக வேண்டுமா ?'' என்று கேட்டார்.

இந்தச் சிறிய, ஆனால் அடிப்படையான உண்மையை எடுத்துக் காட்டுவது மின்சாரம் ஆகும். எப்படி ஏரியின் நீர் இருக்கும்பொழுது மனிதன் கிணற்றில் ஏற்றம் இறைத்து சக்தியை விரயமாக்க வேண்டியதில்லையோ, அதே போல் நீர் இறைப்பதற்கு மின்சாரப் பம்பு செட்டுகள் இருக்கும்பொழுதும் மனிதன் ஏற்றம் இறைத்து வாட வேண்டியதில்லை. இதே போல் நம் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் மின்சாரத்தைப் பயன்படுத்தி வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்ள வழி வகையிருக்கும்பொழுது, நம்மை நாமே உருக்குலைத்துக் கொள்ள வேண்டியதில்லை.

**மின்சாரம் வழங்குதல்**

இந்த எண்ணத்துடன் தமிழ் நாடெங்கும் மின்சக்தி பரவலாக விஸ்தரிக்கப்படுகிறது. தொழில்களுக்கும், வேளாண்மைக்கும், இதர காரியங்களுக்கும் மின்சக்தி முன்பைவிட இப்போது பன் மடங்கு அதிகமாகப் பயன் படுத்தப்படுகிறது. முதல் திட்டக் காலத்தைவிட இரண்டாவது திட்டக்காலத்தில் மின்சக்தி உற்பத்தி யும், வினியோகமும் அதிகரித்துள்ளன.

முதல் திட்டக்கால முடிவில் இம்மாவட்டத்தில் இருந்த மின்சார வினியோக விவரம்: வீட்டு உபயோகம் 10,361; மின்சாரப் பம்பு செட்டுகள் 3; தொழில்கள் 222; தெரு விளக்குகள் 3,564; மின் வசதி பெற்றிருந்த கிராமங்கள் 198.

தமிழ்நாட்டுடன் இம்மாவட்டம் இணைந்தபின் மின்சாரத் துறையில் விரைவானமுன்னேற்றம் ஏற்பட்டது. 14,017 வீடுகளுக்கு மின்வசதி வழங்கப்பட்டது. விவசாய காரியங்களுக்காக 17 பம்பு செட்டுகளுக்கு மின்சக்தி வினியோகிக்கப்பட்டது. 142 தொழில் களுக்கும் மின்சாரம் தரப்பட்டதுடன், 2733 தெரு விளக்குகள் போடப்பட்டன. இரண்டாவது திட்டக்காலத்தில் 116 கிராமங் களுக்குப் புதிதாக மின்வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று


திட்டமிடப்பட்டது. ஆனால் 278 கிராமங்களுக்கு அவ்வசதி விஸ்தரிக்கப்பட்டது. இதற்கு ரூ. 50·15 லட்சம் செலவாயிற்று.

ஆண்டுவாரியான செலவு, சாதனை ஆகியவைகள் கீழ்க்கண்ட அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளன.

| விபரம் | முதல் ஆண்டு 56-57 | 2-வது ஆண்டு 57-58 | 3-வது ஆண்டு 58-59 | 4-வது ஆண்டு 59-60 | 5-வது ஆண்டு 60-61 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. செலவு (லட்சத்தில்) | ரூ. 5·26 | ரூ. 13·08 | ரூ. 15·32 | ரூ. 7·43 | ரூ. 9·06 | ரூ. 50·15 |
| 2. மின்வசதி பெற்ற கிராமங்கள் | 50 | 56 | 81 | 20 | 71 | 278 |
| 3. மின்வசதி வீடுகளுக்கு | 1929 | 3506 | 3038 | 2477 | 3067 | 14017 |
| 4. வேளாண்மை | — | 3 | 6 | 5 | 3 | 17 |
| 5. தொழில்கள் | 5 | 28 | 40 | 27 | 42 | 142 |
| 6. தெரு விளக்குகள் | 912 | 187 | 745 | 524 | 365 | 2733 |

நாகர் கோயிலில் 66 கி. வோ கிளை மின் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டதுடன், தக்கலையில் இருந்த 66 கி. வோ கிளை மின் நிலையமும் திருத்தி நிர்மாணிக்கப்பட்டது. இத் திட்டத்திற்கான

நாகர்கோயிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மின்சாரக் கிளை நிலையம்.




செலவு ரூ. 32லட்சம். ஆகமொத்தம் செலவு ரூ. 82·15லட்சமாகும். இவ்விரு நிலையங்களும் 6,500 கி. வா மின்சக்தி வழங்கு திறன் உடையனவாகும். தேவைப்பட்டால் இத்திறனை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மொத்த மின்சக்தித் தேவைப்பாடு 3,400 கி. வா. ஆகும். இதற்கான மின்சக்தியைத் தமிழ்நாடு மின்சார இணைப்பிலிருந்தே வழங்கி, இம்மாவட்டம் பயனடையுமாறு செய்யவேண்டும் என்பதற்காகவே இவ்விரு நிலையங்களும் கட்டப்பட்டுள்ளன. தற்போது இவ்விரு மின் நிலையங்களுக்கும் கேரள மாநில மின்சார இணைப்பிலிருந்து மின்சக்தி வழங்கப்படுகிறது.

கிராமங்களுக்கு மின்சக்தி வினியோகிப்பதில் தமிழ்நாடு தான் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குகிறது என்பதை அனைவரும் அறிவர். மூன்றுவது திட்டக்கால முடிவுக்குள் தமிழ்நாட்டில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சக்தி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முழுப்பயனையும் அடைந்து, கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லாக் கிராமங்களும் ஒளி வீசித் திகழும் என்பதில் ஐயமில்லை.

# வளரும் தொழில்கள்



ஒரு நாட்டின் பொருளாதாரக் கட்டுக்கோப்பு இரு அஸ்திவாரங்களின் மேல் நிற்கிறது. ஒன்று வேளாண்மை; மற்றொன்று தொழில். அடிப்படைப் பொருளாதாரத்தை உருவாக்குவது வேளாண்மை. இந்த அடிப்படைப் பொருளாதாரத்திலிருந்துதான் சமுதாயத்தின் பரவலான பொருளாதாரம் உண்டாகிறது. அவ்வாறு பரவலான பொருளாதாரத்தை உண்டாக்குவது தொழில்கள் ஆகும். தொழில்கள் என்று சொல்லும்பொழுது அதில் பல கூறுகள் அடங்கியிருக்கின்றன. ஆனால், அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரித்துவிடலாம். ஒன்று பெரிய, நடுத்தரத் தொழில்கள்; இரண்டாவது சிறுதொழில்கள்; மூன்றாவது கிராமக் குடிசைத் தொழில்கள்.

நம் தமிழ் நாட்டில் இம்மூவகைத் தொழில்களும் உள்ளன. பெரிய யந்திரங்களைக் கொண்டு இயங்கும் பெரிய தொழில்களை ஒரு புறத்தில் பார்க்கிறோம். அடுத்து, சில மனிதர்கள் ஒரு சிறு தொழிற்சாலையில் சில கருவிகளை வைத்துக் கொண்டு வேலை செய்வதையும் பார்க்கிறோம். மூன்றாவதாக, இந்த யந்திரங்கள், கருவிகள் எதுவு

மின்றிக் கிராமப்புறத்தில், மர நிழலில் ஒரு மனிதன், தன்னந் தனியனாக அமர்ந்து கொண்டு தொழில் செய்வதையும் பார்க்கிறோம். தொழில் என்னும் வற்றாத நதியின் கிளை நதிகளே இவை.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நம் தமிழ் நாட்டில் இந்தத் தொழில்கள் இருந்தனவா? அல்லது இப்போதுதான் ஏதோ ஒரு மாயா ஜாலம் போல் இந்தத் தொழில்களெல்லாம் ஏற்பட்டனவா? என்றால் இரண்டுக்கும் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டும். ஏனென்றால் அப்போதும் இந்தத் தொழில்கள் இல்லாமல் இல்லை. கிராமக் குடிசைத் தொழில்கள் அப்போது அறவே வளர்ச்சி குன்றி இருந்தன வென்றாலும், பெரிய நடுத்தரத் தொழில்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே இருந்தன. இப்போது இருப்பதைப் போல் பரவலான முறையில் விஸ்தாரமாக அமைந்திருக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன?

## கைக்கு எட்டாத கனி

தொழில் வளர்ச்சியில் அப்போது விசேஷ அக்கறை எதுவும் காட்டப்படவில்லை. சென்னை, மதுரை, கோவை போன்ற முக்கியமான நகரங்களில் மட்டும் தொழில் வசதிகள் செய்து தரப்பட்டன. மற்றபடி நாடெங்கும் அவைகளை விஸ்தரிப்பதற்கான ஒரு சூழ்நிலையே நாட்டில் தோன்றவில்லை. காலனி ஆதிக்கத்தின்கீழ் நம் நாடு இருந்ததால், வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு இங்கு மார்க்கெட்டுகள்தான் உண்டாக்கப்பட்டனவே தவிர இங்கேயே அந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய காலனி ஆதிக்கம் முன் வரவில்லை. ஆரம்பிக்கப்பட்ட தொழில்களுக்கு அரசாங்கமும் மிக மிகக் குறைந்த அளவிலேதான் உதவி செய்து வந்தது. மின்சாரப் பற்றாக்குறை, மூலப் பொருள்களான நிலக் கரி, இரும்பு பற்றாக்குறை ஆகியவை இருந்தன. அதோடு தொழில் வளர்ச்சிக்காக எந்தவிதமான திட்டமிடப்பட்ட ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படாமையால் தொழில் வசதி என்பது கைக்கு எட்டாத கனியாகவே இருந்தது.

இந்த நிலையில் நாடு விடுதலை அடைந்தது. அரசாங்க நிர்வாகம் நம் கைக்கு வந்தது. அன்றிலிருந்து தொழில் துறையில் ஒரு புதுத் திருப்பம் தோன்றலாயிற்று. சுதந்திர அரசாங்கத்தின் தொழில் கொள்கை வகுக்கப்பட்டது. எங்கெங்கு இயற்கை வசதிகள் கிடைக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டது. அவைகளை எந்தெந்த முறைகளிலெல்லாம் பயன்படுத்தலாம் என்றும் திட்டமிடப்பட்டது. நாடு, தொழில் துறையில் மிகவும் பின் தங்கியிருப்பதை அரசாங்கம் அறிந்தது போல் மக்களும் உணரத் தலைப்பட்டனர். தொழில்களைப் பெருக்கும் ஆர்வம் அவர்களுக்கும் தோன்றி

யது. அந்த ஆர்வம் அரசாங்கத் தொழில் கொள்கைகளுக்கு ஒத்துழைப்பாக வந்து நின்றது. வெறிச்சோடிக் கிடந்த தரிசு நிலங்களில் தொழிற்சாலைக் கட்டிடங்கள் உருவாயின. தொழிற்சாலைச் சங்குகள் உறங்குகின்ற மக்களைத் தட்டி எழுப்புவது போல் பெரும் ஓசை செய்தன. அதன் பயனாக நம் தமிழ்நாடு தொழில் துறையில் முன்பிருந்ததைவிடப் பல மடங்கு முன்னேற முடிந்தது. இனி, தமிழ் நாட்டின் அங்கமாகிய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்ப்போம்.


கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைவதற்கு முன்பு இம் மாவட்டத்தில் தொழில் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் சிறு தொழிலதிபர்களுக்கு உதவி செய்யும் திட்டம் எதையும் நடைமுறையில் வைத்திருக்கவில்லை. ஆனால் தமிழ் நாட்டு அரசாங்கம் சிறு தொழிலதிபர்களை ஊக்குவிக்கும் ஒரு திட்டத்தை மேற்கொண்டது. அதுவே தொழில் பேட்டை அமைக்கும் திட்டம்.

**தொழில்பேட்டை**

சிறு தொழிலதிபர் ஒருவர் ஒரு சிறு தொழிற்சாலை வைத்து நடத்த வேண்டுமென்றால் அவருக்குப் பல சிரமங்கள் உள்ளன. தகுந்த இடம், நீர், மின்சாரம், போக்குவரத்து உதவிகள், தொழிற் சட்டத்தின்படி அநுமதி வாங்குதல் போன்ற விஷயங்களில் இடையூறுகள் நேரலாம். அதனால் தொழிலதிபர் பின்வாங்கிவிடலாம். ஆகவே அரசாங்கம் எல்லா வசதிகளும் கிடைக்கக்கூடிய இடங்களில் தொழில்பேட்டைகளை நிர்மாணிக்கிறது. அப்பேட்டைகளில் பல தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு, அவை தேவையான தொழிலதிபர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன.

இரண்டாவது திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில், மார்த்தாண்டம் பகுதியில் சிறுதொழில் வளர்ச்சிக்காகப் பல வசதிகளுடன் அமைந்த ஒரு தொழில்பேட்டை அமைக்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 2.92 லட்சமாகும். இங்கு நான்கு சிறிய தொழிற் கூடங்களும், ஒரு பெரிய தொழிற்கூடமும் உள்ளன. சிறிய தொழிற்கூடங்கள் நான்கும் தனி நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பெரிய தொழிற்கூடம் மார்த்தாண்டம் கூட்டுறவு மரத் தொழிற்சாலைக்கு விடப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை 1959 ஏப்ரலிலிருந்து வேலை தொடங்கியது. தற்போது இங்கு இருக்கைகளும், இதர மரச்சாமான்களும் தயாரிக்கப்படுகின்றன.

பூஞ்சோலைக்குப் பசுமையூட்டுவது தடாகம். அது வற்றி விட்டாலோ, அல்லது தூர்ந்து போனாலோ பூஞ்சோலையில் பசுமை இராது. அதேபோல் இந்தியப் பூஞ்சோலைக்கு அழகும் வலிவும் தரக்கூடியவை கிராமங்கள். அவை சீர்குலைந்து விட்டால் இந்திய நாட்டின் வன்மை சிதறுண்டு போகும்.



மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தொழில்பேட்டை

அந்நியர் ஆட்சிக் காலத்தில் கிராமங்கள் சீர்குலைந்தன. கற்பகத் தருக்களான அவைகள் ரெவின்யூ பிரிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டன. வரி, வரி என்று கிராமப் பொருளாதாரம் சூறையாடப்பட்டது. மக்கள் மனம் இடிந்தது போல் வேளாண்மை நிலை கெட்டது. கிராமத் தொழில்கள் தேய்ந்தன. அவற்றைச் செய்து வந்த தொழில் வினைஞர்களும் வேலை இல்லாத் திண்டாட்டத்தில் சிக்கித் திறனை இழந்தனர்.

**கிராமத் தொழில்கள்**

நாடு விடுதலை அடைந்தது. சுதந்திர அரசாங்கம் புறக்கணிக்கப்பட்ட பிள்ளைகளாகிய கிராம மக்கள்பால் நாட்டம் செலுத்தியது. சிதைந்துவிட்ட கிராமத் தொழில்களுக்கு புத்துயிர் கொடுக்கலாயிற்று. முடங்கிப்போன வினைஞர்களின் கைகளுக்கு வேலை கிடைத்தது. அதன் பயனாக இன்று தமிழ் நாடெங்கும் பரவலான முறையில் கிராமத் தொழில்கள் வளர்ச்சி அடைந்துள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கியமான கிராமத் தொழில்கள் மட்பாண்டத் தொழில், கைக்குத்தல் அரிசி உற்பத்தி, எண்ணெய் எடுத்தல், தேனீ வளர்ப்பு, ஓடு, செங்கல், சோப்தயாரித்தல் சுண்ணாம்பு உற்பத்தி, காகித உற்பத்தி, மற்றும் பனை வெல்லம் தயாரித்தல் ஆகும். இந்தத் தொழில்களை வளர்ப்பதற்குக் கூட்டுறவு முறையே சிறந்ததெனப்பட்டதால் அந்த அடிப்படையில் இவைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இம்மாவட்டம் தமிழ் நாட்டுடன் சேர்

வதற்கு முன்பு இங்கு 30 கூட்டுறவுச் சங்கங்களே இருந்தன. ஆனால் இன்று 49 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இக்கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிய விபரங்கள் தொழில் வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தாலக்குளம், திருநயினார்குறிச்சி, தாமரைக்குளம், தாழக்குடி ஆகிய நான்கு கிராமங்களிலும் நான்கு கூட்டுறவு மட்பாண்டத் தொழில் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் 231 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கங்களின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 7,091 ஆகும். இச்சங்கங்கள் மட்பாண்ட உற்பத்தியாளர்களிடமிருந்து மட்பாண்டங்களை வாங்கி அவற்றைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றன. கடந்த 1960—61-ல் மட்டும் இச் சங்கங்கள் ரூ. 30,368 பெறுமானமுள்ள பாண்டங்களை வாங்கியுள்ளன. இச்சங்கங்களுக்கு ரூ. 12,661 கடனாகவும், ரூ. 4 450 மான்யமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 33,099 பெறுமானமுள்ள பொருள்களை விற்பனை செய்துள்ளன. இச்சங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஜூனியர் இன்ஸ்பெக்டர் இருக்கிறார்.

**எண்ணெய் உற்பத்தி**

கோட்டார், வடசேரி, இரணியல், மயிலாடி, புதுக்கடை, மீனாட்சிபுரம், ஆசாரிப்பள்ளம், ஆரல்வாய்மொழி, பளுகல் ஆகிய ஒன்பது கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் முதல் எட்டு சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. ஒவ்வொரு சங்கத்திற்கும் சீனியர் இன்ஸ்பெக்டர் ஒருவரின் சேவை இலவசமாகக் கிடைக்கிறது. இவைகளில் 639 உறுப்பினர்கள் உள்ளனர். ரூ. 24,702 செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகும். ஆசாரிப்பள்ளத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர மற்ற ஏழு சங்கங்களும் நல்லெண்ணய், தேங்காய் எண்ணெய் தயாரிக்கின்றன. ஆசாரிப்பள்ளத்திலுள்ள சங்கம் கடலை எண்ணெய் மட்டும் தயாரிக்கிறது. இந்த எண்ணெய் எல்லாம் உள்ளூர்ப் பகுதிகளிலும், வெளி இடங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தச் சங்கங்களுக்கு அரசாங்க கதர் கிராமத் தொழில் போர்டின் மூலம் கமிஷனின் நிதி உதவி கடனாகக் கிடைக்கிறது. எண்ணெய் வித்துக்களைச் சேமித்து வைக்கவும், நடைமுறைச் செலவு மூலதனத்துக்காகவும் இக்கடன் வழங்கப்படுகிறது. இந்தத் தொழிலை வளர்ச்சியுறச் செய்வதற்கு இச் சங்கங்களின் விற்பனையில் குவின்டாலுக்கு ரூ. 5 விலையில் தள்ளுபடி செய்யப்படுகிறது. 1960—61-ல் உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெய் மதிப்பு ரூ. 11.62 லட்சம். விற்பனை ரூ. 11.90 லட்சம் ஆகும். 1961 மார்ச் முடிய இச் சங்கங்களுக்கு ரூ. 1.07 லட்சம் கடனாகவும், ரூ. 18,030 மான்யமாகவும் கொடுக்கப்பட்டது.

கைக்குத்தலரிசியில் ஊட்டச் சத்து மிகுந்துள்ளது. ஆகவே கைக்குத்தலரிசி உற்பத்தியை அதிகப்படுத்துவதனால் பலருக்கு வேலையும் கிடைக்கும். இன்னும் நல்ல உணவு கிடைக்கும். தற்போது இம்மாவட்டத்தில் சுசீந்திரம், வடசேரி, வாவறை, பாலப்பள்ளம் ஆகிய நான்கு கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களின் உறுப்பினர்கள் 367 பேர். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 4,420. இச்சங்கங்கள் சந்தைகளிலிருந்து நெல்லை விலைக்கு வாங்குகின்றன. பின் ஆட்களை வேலைக்கு அமர்த்தி உமியை நீக்கிக் கைக்குத்தலரிசியை மக்களுக்கு விற்பனை செய்கின்றன. அரசாங்க அலுவலகங்களுக்கும் இச் சங்கங்கள் அரிசி விற்பனை செய்கின்றன.

### விலையில் தள்ளுபடி

நெல்லைச் சேமித்து வைக்கவும், நடைமுறைச் செலவு மூலதனத்துக்காகவும் இச் சங்கங்களுக்கு அரசாங்கக் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் போர்டிலிருந்து நிதி உதவி கிடைக்கிறது. 1961 மார்ச் முடிய இச் சங்கங்களுக்கு ரூ. 59,000 கடனாகவும், ரூ. 3,650 மான்யமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிலை ஊக்குவிப்பதற்காக குவின்டாலுக்கு ஒரு ரூபாய் விலையில் தள்ளுபடி செய்யப்படுகிறது. 1960-61ல் ரூ. 1·99 லட்சம் மதிப்

ஓடு தயாரிப்பு



புள்ள அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. ரூ 2·48 லட்சம் மதிப்புள்ள அரிசி விற்பனை செய்யப்பட்டது.

அகஸ்தீஸ்வரம், முன்சிறை ஆகிய இரு கிராமங்களிலும் இரு சோப் தயாரிக்கும் நிலையங்கள் உள்ளன. இவைகளில் மாதந்தோறும் ரூ. 1,600 மதிப்புள்ள சோப் தயாரிக்கப்பட்டு, பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

செண்பகராமன் புதூரிலும், பாகோடு கிராமத்திலும் அண்மையில் செங்கல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் எற்படுத்தப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் 107 பேர். இதில் செண்பகராமன் புதூரிலுள்ள சங்கமானது மத்திய அரசாங்க ஹரிஜன முன்னேற்றத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும். இச் சங்கத்திற்கு நடைமுறை மூலதனச் செலவுக்காக ரூ 10,000 ரிசர்வ் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது சங்கத்திற்கு ரூ. 1,000 ரிசர்வ் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

**தேனீ வளர்ப்பு**

மார்த்தாண்டம், பாம்பன்விளை ஆகிய இரு ஊர்களிலும் இரண்டு சங்கங்கள் உள்ளன. உறுப்பினர் தொகை 358. செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 1,646. இவற்றில் மார்த்தாண்டத்தில் உள்ள சங்கத்திற்கு பம்பாயிலுள்ள கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் கமிஷனிடமிருந்து நேரடியாக ரூ. 6,000 கடன் கிடைத்துள்ளது. இவ்விரு சங்கங்களுக்கும் ரூ. 1,500 ரிசர்வ்நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 1960-61ல் இவ்விரு சங்கங்களும் முறையே ரூ. 13,925; ரூ. 10,711 பெறுமானமுள்ள தேன் உற்பத்தி செய்து விற்பனையாக்கியுள்ளன.

சேதுப்பாத்தியூர், ராஜாக்கமங்கலம் ஆகிய கிராமங்களில் சுண்ணும்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. உறுப்பினர்கள் 91 பேர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 575. இந்த சங்கங்கள் விரைவில் உற்பத்தி தொடங்கும்.

"ஆயுதம்செய்வோம்—நல்ல காகிதம் செய்வோம்" என்று பாடினார் பாரதியார். காகித உற்பத்திக்காக கண்ணஞ்சேரி, கிள்ளியூர் ஆகிய இரு கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் 88பேர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 1,700. கண்ணஞ்சேரியிலுள்ள சங்கம் அட்டை உற்பத்தி செய்யக் கூடியதாகும். இது மத்திய அரசாங்கத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் கட்டிடங்கள் கட்டவும், யந்திரங்கள் நிர்மாணிக்கவும் இச்சங்கத்திற்கு ரூ. 48,900 மான்யம் வழங்கப்பட்டுள்ளது. இச் சங்கம் விரைவில் வேலை தொடங்கும். கிள்ளியூர் சங்கத்திற்கும் ரூ. 15,000 உதவி நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இம்மாவட்டத்தில் 24 பனைவெல்ல உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. உறுப்பினர்கள் 2,078 பேர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 12,976. அரசாங்கப் பனை வெல்லக் கூட்டுறவு பெடரேஷனிலிருந்து இச் சங்கங்களில் சிலவற்றுக்கு மாதிரி யூனிட்டுகள் வழங்கப்படுகின்றன.

இச்சங்கங்கள் செயலற்று இருப்பினும், இவற்றை இயங்கச் செய்வதற்கான எல்லா வேலைகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

**கைவண்ணத்தொழில்**

முற்கூறிய பல கிராமத் தொழில்களைப் போல கைவேலைத் தொழிலும் இம் மாவட்டத்தில் தற்போது வளர்ச்சி அடைந்துள்ளது. கண்களைக் கவரும் அழகிய, விதவிதமான பொருள்களுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருப்பதால் இந்தத் தொழில் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருவதில் வியப்பில்லை. இந்தப் பொருள்களை விற்பதற்கான வசதியும் வேண்டுமல்லவா? அதற்காக நாகர் கோயிலில் கோட்டார் என்னும் இடத்தில் ரூ. 80,547 செலவில் ஒரு விற்பனை நிலையம் அமைக்கப்படும். தற்போது இந்த நிலையம் (1959 மார்ச்சிலிருந்து) தற்காலிகமாக வேறொரு கட்டிடத்தில் இருந்து வருகிறது. இங்கு விற்பனைப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கயிறுத்தொழில்.




இம் மாவட்டத்தில் தென்னை வளர்ப்பு அதிகம். ஆகவே கயிறுத் தொழில் வளர்ச்சிக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. அதனால் இது மாவட்டத்தின் குடிசைச் தொழில்களில் தலையான தாகத் திகழ்கிறது. சுமார் 10,000 பேர்கள் இப்போது இந்த வேலை செய்து வருகின்றனர். 50,000 பேர்கள் இந்தத் தொழிலை நம்பி வாழ்கின்றனர். இம்மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைவதற்கு முன்பு இங்கு நான்கு கயிறுத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தாம் இருந்தன. ஆனால் இன்று மேற்கொண்டு ஆறு சங்கங்கள் கூட்டுறவு அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக அரசாங்கம் செலவழித்த தொகை ரூ. 2,44,850 ஆகும்.

**பயிற்சிப் பள்ளி**

இத் தொழிலில் பயிற்சி அளிப்பதற்காக இட்ட மொழியில் ஒரு பயிற்சிப்பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 1·81 லட்சம் செலவாகும். இங்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வோராண்டிலும் 40 பேர்கள் கொண்ட குழுவுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு தலா ரூ. 20 உதவி நிதியும் வழங்கப்படும்.

1961 மார்ச் மாதத்தில் மத்திய கயிறு விற்பனை கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் இச்சங்கத்திற்கு ரூ 2·66

கயிறுத் தொழில் பயிற்சிப்பள்ளி. இட்ட மொழியில் உள்ளது.



லட்சம் கடனுகவும், ரூ. 32,000 மான்யமாகவும் அளித்துள்ளது. மற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரூ. 53,100 கடனுகவும், ரூ. 5·93 லட்சம் மான்யமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இம்மாவட்டத்தில் மாதர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 7 இருக்கின்றன. அவற்றில் 4 சங்கங்கள் நூல் பின்னல் வேலையிலும், இரண்டு சங்கங்கள் மீன் வலை பின்னுதலிலும், ஒரு சங்கம் பலவகை குடிசைத் தொழில்களைச் செய்வதிலும் ஈடுபட்டுள்ளன. பங்கு மூலதனக் கடனுக ரூ. 25,800, மானியமாக ரூ 16,000 வழங்கப்பட்டுள்ளது.

ஹரிஜனங்கள், குறவர்களின் நன்மைக்காகக் கோட்டாரிலும், குலசேகரத்திலும் இரு கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இங்கு கூடை முடையும் வேலை மேற்கொள்ளப்படுகிறது. அரசாங்கம் இச் சங்கங்களுக்கு ரூ. 19,000 மான்யமாக வழங்கியது.

1961 மார்ச்சில் அகஸ்தீஸ்வரம் வட்டம் சூரங்குடியில் பாய் பின்னுவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ரூ. 2,500 கடனுகவும், ரூ. 500 மான்யமாகவும் வழங்கப்பட்டது. மற்றும் உலோக வார்ப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்காக 1961 ஏப்ரலில் ஒரு பொதுவசதி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

**தொழிற்பயிற்சி**

நம் நாட்டில் மக்கள் தொகை பெருகியிருக்கும் அளவுக்கு தொழில் பயிற்சி பெற்றவர்கள் அதிகமில்லை. தொழில்துறை சற்று பின்னடைந்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். இக் குறையை நீக்குவதற்காக, தொழிற்பயிற்சி அளிக்கும் விஷயத்தில் முனைப்பான வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

நாகர்கோயில் — ராஜாக்கமங்கலம் சாலையில் நாகர்கோயிலிலிருந்து இரண்டு மைல் தொலைவில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படும். இதற்கான கட்டிடங்கள் கட்ட நிலங்கள் வாங்கப்பட்டுவிட்டன. தற்போது இப்பயிற்சி நிலையம் வேட்டுண்ணி மடத்தில் இருந்து வருகிறது. பிட்டர்கள், லைன்மென், வயர்மென், மோட்டார் மெகானிக், வெல்டர்கள் ஆகியவர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1961 ஏப்ரல் வரையில் இங்கு மொத்தம் 112 பேர்களே சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தனர். ஆனால் 1961 மே மாதத்திலிருந்து மேற்கொண்டு 64 பேர்களைச் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதல்லாமல் 16 பேர்கள் விசேஷப்பயிற்சியும் பெறுகிருர்கள். இதைச் சேர்த்து இந்நிலையத்தில் மொத்தம் 192 நபர்கள் பயிற்சி பெறுகிருர்கள்.

1961 மே மாதத்தில் மேற்கொண்டு இரண்டு (எலக்டார் பிளேட்டர், டிராப்ஸ்மென்) துறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1962 பிப்ரவரி மாதத்திலிருந்து மேற்கொண்டு 80 பேர்கள் பயிற்சிக்காகச் சேர்க்கப்படுவார்கள்.

எஸ். எம். ஆர். வி. தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆண்டு தோறும் 30 மாணவர்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். ஆண், பெண் இருபாலாரும் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியாளருக்கு தலா முதல் இரு ஆண்டுகளில் மாதமொன்றுக்கு ரூ. 10-ம், மூன்றாவது ஆண்டில் மாதமொன்றுக்கு ரூ. 15-ம் உதவிப் பணமாகக் கொடுக்கப்படுகிறது. 1961 ஜுலையிலிருந்து நெசவு-விசைத்தறியில் தீவிரப் பயிற்சி கொடுக்க அரசாங்கம் அநுமதித்துள்ளது. 44 பேர்கள் (ஆண், பெண் இருபாலார்) பயிற்சி பெறுகின்றனர். ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 20 உதவிப் பணமாகக் கொடுக்கப்படுகிறது.

**அரசாங்க உதவி**

சிறு தொழிலதிபதிபர்களுக்குக் கடன் உதவி செய்து, அவர்களை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் தொழில் கொள்கையாக இருந்து வருகிறது. இக்கடனுக்கு 3 சதவீதம் வட்டி செலுத்தவேண்டும். இம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு தொழில் அதிபர்களுக்கு 1957-58ல் ரூ. 5,000; 1958-59ல் ரூ. 50,301; 1959-60ல் ரூ. 55,060; 1960-61ல் ரூ. 34,030 அரசாங்கம் கடனாகக் கொடுத்துள்ளது.

சிறு சிறு தொழில் யூனிட்டுகள் வாடகைக் கிரய முறையில் தமக்குத் தேவையான யந்திரங்களை வாங்கிக்கொள்ள தேசிய சிறு தொழில் கூட்டுறவு (பிரைவேட்) லிமிடெட் வழி செய்கிறது. இது இந்திய அரசாங்கச் சார்பானதாகும். வெளிநாடுகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்குக் கச்சாப்பொருள்கள் இறக்குமதி செய்ய லைசென்ஸ் வழங்குவதில் இந்திய அரசாங்கம் தனது கொள்கையைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

## கதர்

இந்திய நாட்டில் சுமார் ஆறுலட்சம் கிராமங்கள் உள்ளன. இந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 75 சதவிதத்துக்கும் மேல் இக்கிராமங்களிலேயே வாழ்கின்றனர். இவர்களது தலையாய தொழில் வேளாண்மை. ஆனால், வேளாண்மை ஆண்டு முழுவதும் இருந்து வரக்கூடிய தொழில் இல்லையாதலால், ஒரு ஆண்

டில் சில மாதங்கள் பயனின்றிக் கழிந்துவிடுகின்றன. அதோடு குடியானவர்களுக்குப் போதுமான வருவாயும் இல்லாமல் இருந்தது. காந்திஜி இந்த இரு குறைபாடுகளையும் நீக்குவதற்கு விரும்பினர். நாட்களைப் பயனின்றிக் கழிக்காமல் இருக்கவும், ஏதேனும் ஒரு உபதொழில் செய்து குடியானவர்கள் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும் வழி உண்டா என்று சிந்தித்தார். அந்தச் சிந்தனையில் உதித்ததே கதர் இயக்கம்.

சுதந்திரத்திற்கு முன்பு கதர் இயக்கத்தைத் தனித் தனிச் சங்கங்களே நடத்தி வந்தன. ஆனல், நாட்டின் விடுதலைக்குப் பிறகு முதன் முதலாகத் தமிழ் நாட்டில்தான் அது அரசாங்கத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. அதன்பின் கதர் இயக்கத்தில் ஒரு அசுர வேகம் தோன்றியது. லட்சோப லட்சம் கிராம மக்கள் கதர் நூற்பதற்கு ஆர்வமுடையவர்களாக இருப்பதைப் பார்த்து, தமிழ் நாட்டு அரசாங்கம் கதர் வளர்ச்சியில் முனைப்பான கவனம் செலுத்தியது. 1956-ல் கதர் வளர்ச்சிக்காகத் தனியாக ஒரு துறையையும் அமைத்தது. இவ்வாறு கதர் வளர்ச்சிக்காக முதன் முதலில் தனித்துறை அமைத்த மாநிலம் நமது மாநிலம்தான். அதன்பின் கதர்த் திட்டமானது தீவிரக் கதர்த்திட்டம், விஸ்தரிப்புக் கதர்த்திட்டம், அம்பர் ராட்டைத் திட்டம் ஆகிய மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. கதர் இயக்கம் ஓரளவு பரவியுள்ள இடங்களில் அதைத் தீவிரமாக வளர்ப்பது தீவிரக் கதர்த்திட்டமாகும். கதர் இயக்கம் பரவாத இடங்களில் அதை விஸ்தரிப்பது கதர் விஸ்தரிப்புத்திட்டமாகும். அம்பர் ராட்டைமூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவது அம்பர் ராட்டைத் திட்டமாகும்.

**கதர் நிலையங்கள்**

1957-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் கதர்த்துறைப் பிரிவு அமைக்கப்பட்டது. மேற்சொன்ன மூன்று திட்டங்களும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. தீவிரக் கதர்த்திட்டத்தின் கீழ் 1958 அக்டோபர் முடிவுக்குள் நாகர்கோயிலில் ஒரு தலைமைக் கதர் நிலையமும், கன்னியாகுமரி, ராஜாக்கமங்கலம், அழகப்பாபுரம், மருங்கூர், பூதப்பாண்டி, வாழவச்சகோஷ்டம், தெங்கன்புதூர் ஆகிய இடங்களில் கிளை நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் அழகப்பாபுரத்தில் இருந்த கிளை நிலையம் 1959 அக்டோபரில் பாலப்பள்ளம் என்னும் ஊருக்கு மாற்றப்பட்டது. கன்னியாகுமரியில் இருந்த கிளை நிலையம் 1960 டிசம்பரில் பொட்டல் என்னும் ஊருக்கு மாற்றப்பட்டது. அடுத்து 1960 ஏப்ரல் மாதத்தில் அகஸ்தீஸ்வரம், அம்சி ஆகிய இரு இடங்களில் கிளை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1958 ஜனவரியிலிருந்து நாகர்கோயிலிலும், 1960 மே மாதத்தி

லிருந்து கன்னியாகுமரியிலும் இரு விற்பனை நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. 1959 நவம்பரில் மாங்குழியில் ஒரு பஞ்சு வெட்டும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு இப்போது 100 பேர் வேலை செய்து வருகின்றனர். இந்நிலையத்தின் சேவை பாராட்டும்படியாக உள்ளது.

1959 செப்டம்பரிலிருந்து 1960 மார்ச் வரை அம்சி, சிங்களய்யர்புரி ஆகிய இரு இடங்களிலும் இரு மாதிரி நெசவுப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டன. நூறு நெசவாளர்கள் இதில் பயிற்சி பெற்றனர். இவர்கள் அனைவரும் கிளை நிலையங்களிலேயே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதல்லாமல் 1960 மார்ச் மாத முடிவுவரை ஒரு நெசவுப்பயிற்சி நிலையம் நடத்தப்பட்டது. அங்கு பயிற்சிபெற்ற 20 நெசவாளிகளும் தெங்கன்புதூர், பொட்டல் ஆகிய ஊர்களில் உள்ள கிளை நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1960-61ல் அழிஞ்ஞிகோடு, சிங்களய்யர்புரி ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒவ்வொரு நிலையத்திலும் 25 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்விரு நிலையங்களிலும் இப்போது இரண்டாவது பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன.

**கதர்த் திட்டங்கள்**

வட்டாரங்களில் அடங்காத பகுதிகளில் கதர் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் 1957 டிசம்பரிலிருந்து 1959 ஜூலை மாத முடிவுக்குள் ஆரல்வாய்மொழி, கடுக்கரை, பள்ளியாடி, புதுக்கடை, மேக்காமண்டபம் ஆகிய ஐந்து இடங்களிலும் ஐந்து நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சிறிது காலத்தில் பள்ளியாடியிலிருந்த நிலையம் வில்லுக்குறிக்கும், புதுக்கடையில் இருந்த நிலையம் பெரிய விளைக்கும் மாற்றப்பட்டுவிட்டது.

இந்த இடங்களில் நூற்பு நிலையங்களுக்குப் பதிலாகப் பார்வை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதால் நூற்பு நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. அதாவது, குறிப்பிட்ட சில கிராமங்களில் கதர் நூற்பவர்களிடமுள்ள நூலைச் சேகரிப்பதற்காக ஒரு கதர் ஊழியர் அந்தக் கிராமங்களையெல்லாம் பார்வையிட்டு, நூலைச் சேகரித்து வருவார். மேற்சொன்ன இடங்களில் இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டதால்தான் அங்கு இருந்த கிளை நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. வட்டாரப் பகுதிகளில் கதர் விஸ்தரிப்புத் திட்டமானது அகஸ்தீஸ்வரம், ராஜாக்கமங்கலம், குறுந்தங்கோடு, கிள்ளியூர், முன்சிறை, மேல்புரம் ஆகிய ஆறு வட்டாரங்களில் அமுல் செய்யப்பட்டு வருகிறது. தோவாளை வட்டாரத்தில் இத்திட்டத்தை அமுல் செய்யும் வேலையானது இன்னும் மேற்கொள்ளப்படாமல் இருந்துவருகிறது

சாதாரண ராட்டைகளில் கதர் நூற்பதை விட அம்பர் ராட்டையில் நூற்பதால் உற்பத்தி நான்கு மடங்கு அதிகமாகிறது. மேலும் நூலின் தரமும் சிறந்து விளங்குகிறது. ஆனால் இதில் நூற்பதற்குப் பயிற்சி வேண்டும். இந்த ராட்டையைக் கண்டுபிடிசதவர் ஏகாம்பரம் என்னும் ஒரு தமிழர் ஆவார்.

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1959 டிசம்பரில் அமுலாக்கப்பட்டது. அப்போது இரவிப்புதூரில் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இந்நிலையம் நாகர்கோயிலுக்கு மாற்றப்பட்டுவிட்டது. இந்நிலையத்தில் 13 பாட வகுப்புகள் நடத்தப்பட்டன. திருப்பரங்குன்றத்தில் இருந்த நிலையமானது கிள்ளியூருக்கு மாற்றப்பட்டது. அங்கும் மூன்று பாட வகுப்புகள் நடத்தப்பட்டன. பயிற்சி பெற்றவர்களிடமுள்ள ராட்டைகளைப் பழுதுபார்க்க ஆறு சூபர்வைசர்கள் உள்ளனர். மற்றும் அம்பர் ராட்டையின் உப கருவிகளைத் தயாரிக்கும் யூனிட் ஒன்று 1960 ஜுலை மாதத்தில் நாகர் கோயிலில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பட்டைபோடும் கருவியுடன் கூடிய 20 அம்பர் ராட்டைகள் தயாரிக்கப்பட்டன. மேலும் துணிகளுக்குச் சாயம் போடவும், நல்ல டிசைன்களை அச்சுப் போடவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### கதரின் எதிர்காலம்

இம்மாவட்டத்தில் கதர்த்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கீழ் வரும் அட்டவணையில் காணலாம்:

| | 1957-58 | 1958-59 | 1959-60 | 1960-61 |
|---|---|---|---|---|
| நெசவாளர்கள் | 91 | 353 | 587 | 740 |
| நூற்பாளர்கள் | 1,875 | 14,487 | 17,940 | 20,972 |
| கதர் விற்பனை (ரூ.) | 644 | 60,780 | 1,17,510 | 1,11,986 |

காந்திஜி கதர் இயக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். ஏழை எளியவர்களின் துயர் துடைக்கும் தூய்மையான சின்னமாக ராட்டையைப் போற்றினர். போதிய வேலையில்லாமலும் போதிய வருமானமில்லாமலும் தவிக்கும் குடியானவர்களுக்கு விடிவு காலம் கிட்டும் என்று நம்பினர். அதனால் அவர் காலத்தில் கதர் இயக்கம் பரவியது. இனிமேல் நாம் இதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதைப் பொறுத்தே இதன் எதிர்காலம் இருக்கிறது. கிராம மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க கதர் இயக்கத்தைத் தவிர வேறொன்று இருந்தால் கதர் இயக்கத்தை நாம் கை

விட்டுவிடலாம். ஆனால், வேறொன்று இல்லாதவரையில் கதர் இயக்கமே நமக்குக் கதிமோட்சம்.

இம் மாவட்டத்தில் 7 அச்சுக்கூடங்களும், 3 மோட்டார் தொழிற்கூடங்களும், 12 மரம் அறுக்கும் தொழிற்சாலைகளும், 3 தீப்பெட்டித் தொழிற்சாலைகளும், 1 பருத்தி கொட்டை எடுக்கும் தொழிலகமும், 28 அரிசி மாவு மில்களும், 3 பனையோலைப் பொருள் தயாரிக்கும் தொழிற்கூடங்களும், 1 துணி ஆலையும், 2 உலோகத் தொழிற்சாலைகளும், 2 முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளும், 1 தேயிலைத் தொழிற்சாலையும், 3 ரப்பர் பாக்டரிகளும், 5 இதர தொழிற்சாலைகளும் உள்ளன. ஆக இந்த 71 பாக்டரிகளிலும் மொத்தம் 3,050 பேர்கள் வேலை செய்கின்றனர். இந்த பாக்டரிகளை வைத்து தொழில் வசதிகளை விஸ்தரிப்பதென்பது முடியாது. ஆனால் அரசாங்க ரப்பர் வளர்ப்புத் திட்டமும், பஸ் தொழிற்சாலையும் திவிரமாக வேலையிலீடுபட்டால் கூடுதலான பேர்களுக்கு வேலைவசதி செய்து தரமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேலை தேடித்தரும் அலுவலகம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்த மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலகமே கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கும் பணியாற்றி வந்தது. ஆனால் 1958 மார்ச்சில் நாகர் கோயிலில் தனியான ஒரு அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வலுவலகத்தினால் சுமார் 800 ஆசிரியர்களுக்கு வேலை கிடைத்துள்ளது. ஷிப்ட் முறை நீக்கப்பட்ட பள்ளிகளில் இந்த ஆசிரியர்கள் வேலையில் அமர்த்தப்பட்டனர். இவர்களில் 400 பேர் பெண்கள். இவர்களுக்கு இந்த வேலை நிரந்தரமாகக் கிடைத்ததாகும். ஷிப்ட் முறை முழுதும் நீக்கப்பட்டால் இனியும் நிறைய ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். அப்போது இந்த அலுவலகத்தின் சேவை மிகவும் இன்றியமையாததாக இருக்கும். மற்றும் இந்த அலுவலகம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து ஆண்டுதோறும் கூடுதலான நபர்களை வேலைக்கமர்த்தியுள்ளது. 1958 மார்ச்—டிசம்பர் 557, 1959 ஜனவரி—டிசம்பர் 1,124, 1960 ஜனவரி—டிசம்பர் 2,105, 1961 ஜனவரி—ஏப்ரல் 430 ஆக மொத்தம் 4,216 பேர்களை இந்த அலுவலகம் வேலைக்கு அமர்த்தியுள்ளது. இதில் 889 பேர் பெண்கள். மாஜி ராணுவத்தினருக்கும், ஷெட்யூல்ட் வகுப்பினர்களுக்கும் இந்த அலுவலகம் வேலை தேடித் தந்துள்ளது. இதல்லாமல் அரசாங்க அலுவலகங்களிலும், தனியார்துறைத் தொழிற்சாலைகளிலும் உள்ள தொழில்வாய்ப்பு வசதிகளைச் சேகரிக்கும் வேலையையும் இந்த அலுவலகம் முனைப்பாக மேற்கொண்டுள்ளது.

# மத்திய அரசாங்க திட்டங்கள்

தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள மிகப் பெரிய தொழில்கள் பெரம்பூரரயில் பெட்டித் தொழிற்சாலையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டமும் ஆகும். இவையல்லாமல் கச்சா பிலிம் தொழிற்சாலை, டெலிபிரிண்டர் தொழிற்சாலை, மருத்துவ மனைகளுக்கான அறுவைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை முதலிய தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**நெய்வேலி திட்டம்**

இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மிக முக்கியமானது ஆகும். எதிர் காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் இதன் சேவை மிகப் பெரியதாகவிருக்கும். தென் ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலிப் பிரதேசத்தில், 145 லிருந்து 200 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் 100 சதுர மைல் பரப்பளவுக்கு 200 கோடி டன்கள் பழுப்பு நிலக்கரி படிந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும். இதைப் பயன்படுத்தி 4 லட்சம் கிலோவாட் வரை மின்சாரம் உற்

பத்தி செய்யவும், 1·5 லட்சம் டன் யூரியா உரம் தயாரிக்கவும், 3·8 லட்சம் டன் சுட்ட நிலக்கரி அச்சுக்கள் தயாரிக்கவும், 6,400 டன் மோட்டார் ஸ்பிரிட், 54,300 டன் தார், 1,032 டன் பினாயில் ஆகியன தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நிலக்கரியைத் தோண்டும்போது வெளிவரும் தரமான களிமண்ணைப் பயன்படுத்துவதற்கான தொழிற்சாலையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரித் திட்டம் ரூ. 86 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, மூன்றாவது திட்டக் கால விஸ்தரிப்பு வேலைகளையும் சேர்த்து சுமார் ரூ. 110 கோடி செலவிடப்படும்.

**பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை**

பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை முதல் திட்டக் காலத்தில் இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. இது 1955-ல் உற்பத்தியைத் தொடங்கிற்று. சுவிட்ஸர்லாந்து உதவியுடன் இது அமைக்கப்பட்டது. இதில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை 8 கோடி ரூபாய். இரண்டாம் திட்டக் காலத்தில் இத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது. தற்போது இத் தொழிற்சாலையில் சுமார் 7500 பேர் வேலை செய்கின்றனர். 300 பெட்டிகளுக்கு ஆசனம் முதலிய வசதிகளை அமைப்பதற்கான தொழிற்சாலைப் பிரிவு ரூ. 3·5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது திட்ட மத்தியில் இங்குத் தயாராகும் எல்லாப் பெட்டிகளுக்கும் இந்தத் தொழிற்சாலையிலேயே ஆசனம் முதலிய வசதிகள் அமைக்கப்படும்.

**உதகை பிலிம் தொழிற்சாலை**

உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பிரெஞ்சு

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தோடு



நிபுணர்களின் ஒத்துழைப்புடன் போட்டோ பிலிம்கள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்ட வேலைக்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி கம்பெனி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் திற்குச் சுமார் ரூ. 6·5 கோடி செலவாகும். நானூறு நிபுணர்கள் உட் படச் சுமார் ஆயிரம் பேர் இதில் வேலை வசதி பெறுவர். எக்ஸ்-ரே போட்டோ பிலிம், பதிவுத் தாள்கள், போட்டோ லித்தோவுக்கான தாள்கள் முதலியன இதில் உற்பத்தியாகும். மூன்றாவது திட்ட முடிவில் கலர் பிலிம்களும், கலர் போட்டோ தாள்களும் உற்பத்தி யாகும். ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இதில் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுறது. இந்தக் கம்பெனிக்காக 272 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

டெலிபிரின்டர்

"ஆலிவெட்டி" என்ற இத்தாலி நாட்டு நிறுவனத்தின் ஒத் துழைப்புடன் இந்திய அரசாங்கம் கிண்டியில் ஒரு டெலிபிரின்டர் தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. மாதம் 100 டெலிபிரின்டர் கள் இதில் உற்பத்தி செய்யப்படும். இதில் மொத்தம் சுமார் 200 பேர் வேலை பெறுவர். கிண்டி தொழிற் பண்ணையில் ஏற் கனவே இதற்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு அளவில் உற்பத்தி தொடங்கிவிட்டது.

மத்திய அரசாங்கம், ரஷ்யத் தொழில் நுணுக்க உதவியுடன் கிண்டியில் அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சுமார் 5 கோடி ரூபாய் செலவாகும். இங்கு 150 வகைகளில் சுமார் 25 லட்சம் அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கப்படும். இந்தக் கம்பெனிக்

புதியதோர் நகரமும் எழுந்துள்ளது.



காக 115 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனி அதிக அளவில் கிடைக்கிறது. ஆயின் அதில் இரும்புச்சத்துக் குறைவாக இருக்கிறது. இப்பொழுது நெய்வேலியில் நிலக்கரி கிடைப்பதினால், அதையும் சேலம் இரும்புக் கனியையும் கொண்டு இரும்பு உற்பத்தி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. பூர்வாங்க சோதனைகள் நம்பிக்கை அளித்துள்ளன. ஆனால் இனிமேல் தான் விரிந்த அளவில் சோதனைகளை மேற்கொள்ள இயலும். இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளது. பூர்வாங்க வேலைகளுக்காக மாநில அரசாங்கம் மூன்றுவது திட்டத்தில் ரூ. 75 லட்சம் ஒதுக்கியுள்ளது.

## காவேரி எண்ணெய்

காவேரிப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பற்றிப் பல அயல்நாட்டு நிபுணர்களால் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வந்துள்ளது. 1956-ம் ஆண்டு ரஷ்ய நிபுணர்கள் அவ்விடத்தைப் பார்வையிட்டு இங்கு எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறிகள் இருப்பதைத் தெரிவித்தனர். அதனையொட்டி 1957-58-ல் பூர்வாங்க சோதனைகள் நடத்தப்பட்டன. இந்தியப் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் இதற்கான சோதனைகளை மேற்கொண்டது. இதுவரை சுமார் 4,000 சதுர மைல் அளவில் சர்வே நடத்தப்பட்டுள்ளது. மேலும் சில பகுதிகளில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பூர்வாங்க சோதனைகள் இந்தப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.

சேது சமுத்திரத் திட்டமும் இந்திய அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து வருகிறது. பாக் ஜலசந்திக்கும் மன்னர் வளைகுடாவிற்கும் இடையில் அடித்தரை பாறையாக உள்ள பகுதியில் கால்வாய் அமைத்து, போக்குவரத்துக்கு வழி செய்வதே இத் திட்டத்தின் முக்கியஅம்சம் ஆகும். இந்தக் கால்வாய் அமைப்பின் மூலம் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கு வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிவர வேண்டிய அவசியம் இராது. இதன்மூலம் கப்பல் பிரயாண நேரமும், எரி பொருளும் கணிசமாகக் குறையும்.

## ரயில் பாதை

தமிழ் நாட்டில் ரயில்பாதை வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் பரிசிலனையில் உள்ளன. சேலம்-பெங்களூர்,

விருதுநகர்-மானுமதுரை, திருநெல்வேலி-கன்னியாகுமரி ரயில் பாதைத் திட்டங்களை மூன்ருவது திட்டத்தில் சேர்க்கும் விஷயமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கைத்தொழிலும் வாணிபமும் செழிப்படைவதற்கு வேண்டுமான நிலக்கரி, உருக்கு, மற்றும் இதர கச்சாப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்கவேண்டுமானுல், ரயில் வசதிகள் அதிகரித்தாக வேண்டும். இந்த வசதியைச் செய்வதின் அவசியம் பற்றி மாநில அரசாங்கம் தீவிரமாக வலியுறுத்தியுள்ளது.

கல்கத்தா-சென்னை, அரக்கோணம்-ஈரோடு ஆகியவைகளுக்கு இடையில் பிராட்கேஜ் லைன் இரட்டைப்பாதை அமைப்பதற்கான ஏற்பாடும், ரயில்வே அபிவிருத்தித் திட்டத்தில் இடம் பெறும் என்று நம்பப்படுகிறது.

# நாட்டின் நரம்புகள்

மத்திய கிழக்கு நாடுகளில் பாரசிகம் என்று ஒரு நாடு. அதை இப்பொழுது ஈரான் என்று சொல்வார்கள். இயேசுகிருஸ்து பிறப்பதற்கு ஆறு நூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டு மக்கள் பெரிய சாலை ஒன்று அமைத்தார்கள். அதாவது உலகத்திலேயே நல்ல தரமான சாலைகளை அமைப்பதில் இந்த நாடுதான் முதன்மையாக இருந்தது. அதற்கு அடுத்தபடியாக இருந்தது நம்நாடுதான். அந்த அளவுக்கு உலக சரித்திரத்தில் நம் நாட்டுக்கு ஒரு தனி இடம் உண்டு.

போக்குவரத்துக்கு முக்கியமாக இருப்பது சாலைகளாகும். ஏனென்றால் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டிருக்கும் இணைப்பான சாலைகள், மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை

ஆகியவைகளைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் பெரிதும் உதவியாக விளங்குகின்றன. உணவுப் பொருள்களாகட்டும், தொழிற்சாலை களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களாகட்டும், அல்லது உற்பத்தியான பொருள்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதற் காகட்டும், சாலைகள் மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றன.


### சாலை அபிவிருத்தி

நம் நாட்டில் சாலைகளின் தேவைப்பாடு முன்பைவிட இப்போது அதிகரித்துவிட்டது. ஐந்தாண்டுத் திட்டங்களால் நம் நாட்டில் பொருளாதாரமும் அதையொட்டிப் போக்குவரத்தும் வளர்ச்சி யடைந்ததே இதற்குக் காரணம். ஆகவே சாலைகளின் அபிவிருத் திக்காக ஐந்தாண்டுத் திட்டங்களில் பல முக்கியமான அம்சங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம் இரண்டாவது திட்டத்தின் ஆரம்ப காலத்தில் தமிழ் நாட்டுடன் இணைந்தது. அப்போது, அதாவது முதல் திட்டக்கால முடிவில் மொத்தத்தில் இங்கு 710 மைல் நீளச் சாலைகளே இருந்தன. அவற்றில் தேசிய நெடுஞ்சாலைகள் 39 மைல்; மாநில நெடுஞ்சாலைகள் 30 மைல்; பெரிய மாவட்டச்சாலைகள்

நாகர்கோயில்—திருநெல்வேலி நெடுஞ்சாலை.





வாளியாத்து முகப் பாலம்.

169 மைல்; இதர மாவட்டச்சாலைகள் 106 மைல்; கிராமச்சாலைகள் 366 மைல் நீளம் ஆகும். இதை வைத்துக் கணக்கிட்டால் அப்போது சராசரி ஒரு சதுர மைலுக்கு 1·1 மைல் நீளச்சாலை இருந்தது.

முதல் திட்டக்காலத்தில் இருந்த சாலைகளில் 35½ மைல் சிமெண்ட் காங்கிரீட் ஆகும். 36 மைல் தார் போடப்பட்டதாகும். இரண்டாவது திட்டக் காலத்தில் 44 மைல் 6 பர்லாங் தார் போடப்பட்டது. இதற்கான செலவு ரூ. 6. 46 லட்சம் ஆகும். இதுமட்டுமல்லாமல் 4 மைல் 1 பர்லாங் நீளத்திற்குக் கப்பி போடப்பட்டது. மேற்கொண்டு 1 மைல் 4 பர்லாங் நீளத்திற்குப் புதிய பாதை அமைக்கப்பட்டது. இதற்காக ரூ. 1. 30 லட்சம் செலவாயிற்று. மேலும் நாகர்கோயில் - குளச்சல் சாலை விஸ்தரிக்கப்பட்டது. நாவற்காடு சாலையில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த வேலைகளுக்காக ரூ. 21,000 செலவிடப்பட்டது. இத்துடன் மேற்கொண்டு 39 சாலை வேலைகள் உள்ளன. இவற்றால் 35½ மைல் நீளச் சாலை அதிகமாகும்.

பாலங்கள்

மேக்கோடு - குலசேகரம் சாலையில் ஒரு பெரிய பாலம் கட்டப்பட்டது. இதற்கு வாளியாத்துமுகப் பாலம் என்று பெயர். இதற்காக ரூ. 1. 28 லட்சம் செலவிடப்பட்டது. மேலும்


மஹாராஜபுரம் சாலையிலும், அஞ்சு கிராமம் சாலையிலும், தக்கலை, தாடிக்காரன் கோணம் சாலையிலும் மூன்று சிறிய பாலங்கள் கட்டப் பட்டன.

**போக்குவரத்து**

இம்மாவட்டத்தின் போக்குவரத்துத் தேவைகளுக்குத் துணை புரிவது பஸ் சர்விஸே. கன்னியாகுமரி மாவட்டத்தில் 1956 நவம் பரில் அரசாங்க பஸ் நிர்வாகத்தில் 64 பஸ்கள் 27 மார்க்கங்களில் ஓடிக்கொண்டிருந்தன. பின்னர் ஐந்து ஆண்டுகளில் புதிதாக 77 பஸ்கள் சேர்க்கப்பட்டன. தற்போது 100 பஸ்கள் 40 மார்க்கங் ஓடிக்கொண்டிருக்கின்றன. மற்ற பஸ்கள் அவ்வப்போது ஏலத்தில் விடப்பட்டன. 1956-ல் 434 பேர்களே இங்கு வேலை செய்து வந்தனர். தற்போது இங்கு 775 பேர்களுக்கும் மேல் வேலை செய் கின்றனர்.

இவையல்லாமல் நாகர்கோயிலிலிருந்து திருச்சிக்கு இரண்டு எக்ஸ்பிரஸ் பஸ்களும் (ஒன்று விருதுநகர் வழியாக; மற்றொன்று தூத்துக்குடி வழியாக) கோயம்புத்தூருக்கு ஒரு எக்ஸ்பிரஸ் பஸ்

அரசாங்க பஸ் தொழிற்சாலை.



1960-ம் ஆண்டிலிருந்து விடப்படுகின்றன. பஸ்களைப் பராமரிப்பதற்கான புதிய தொழிற்சாலையொன்று ராணித் தோட்டத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 5. 6 லட்சம் ஆகும். தென்னிந்தியாவிலேயே இதுதான் முதலாவது பெரிய பஸ் தொழிற்சாலையாகும். நிர்வாகக் கட்டிடமும் ரூ. 8 லட்சம் செலவில கட்டப்பட்டது. பஸ் தொழிலாளர்களின் நன்மைக்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் கடந்த இரண்டாண்டுக்காலமாகப் பணியாற்றி வருகிறது.

## கட்டிட நிர்மாணத் துறை

இன்றைய ஆலயங்கள் எவை? "பயிர் வளம் செழிப்பதற்காகக் கட்டப்பட்ட அணைகளும், நீர்த்தேக்கங்களுமே இன்றைய ஆலயங்கள். மனித வாழ்வை வளப்படுத்தும் கோயில்கள்" என்று பிரதமர் நேரு கூறினர். இந்த அரும்பெரும் திட்டங்களைக் காட்சியுருவில் சிருஷ்டிப்பது பொதுப் பணித் துறையாகும். இதுமட்டுமல்லாமல் அரசாங்க மருத்துவ மனைகள், கல்லூரிகள், மாணவர் விடுதிகள், பள்ளிகள் மற்றும் இதர அரசாங்க அலுவலகங்களை நிர்மாணிப்பதும் இந்தத் துறைதான். சாலைகளை அமைப்பது அவற்றைப் பராமரிப்பது ஆகியவைகளையும் இந்தத் துறையே கவனித்து வருகிறது. பாசனத்துறை, கட்டிட நிர்மாணத்துறை, பெருவழித்துறை ஆகிய மூன்றும் பொதுப் பணித் துறையின் மூன்று பிரிவுகள் ஆகும்.

இந்த வெளியீட்டில் வேறு இடங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசனத் துறை மற்றும் பெருவழித் துறை பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இனி கட்டிட நிர்மாணத் துறையைப் பற்றிப் பார்ப்போம். கட்டிட நிர்மாணத் துறையின் வேலைகள் இதே வெளியீட்டில் அந்தந்த பிரிவுகளில் விவரித்துச் சொல்லப்பட்டிருந்தாலும், அவற்றை கீழே மொத்தமாகக் காணலாம்.

இரண்டாவது திட்டத்தின் கீழ் பல அரசாங்கத் துறைக் கட்டிடங்கள் கட்ட ரூ. 8. 32 லட்சம் திட்டத் தொகையில் செலவிடப்பட்டது. இதல்லாமல் திட்டத் தொகையில் சேராத படி ரூ. 18.29 லட்சம் செலவிடப் பட்டது. வேளாண்மை, கல்வி, விலங்குப் பராமரிப்பு, மருத்துவம், பொதுச் சுகாதாரம், சுற்றுப்பயணம், மின் அளம் ஆகிய துறைகளில் கட்டிடங்கள் கட்டப்பட்டன.

நாகர்கோயிலில் ரூ. 3,628 செலவில் ஒரு ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையக் கட்டிடமும், கோட்டாரத்தில் ரூ. 19,764 செலவில் கோழி

வளர்ப்பு நிலேயக் கட்டிடமும், ரூ. 88,564 செலவில் பூதப்பாண்டி மார்த்தாண்டம் ஆகிய ஊர்களில் உள்ள அரசாங்க உயர்நிலேப் பள்ளிகளில் தொழில் வகுப்புக் கட்டிடங்கள் மற்றும் தேரூர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக் கட்டிடங்களும், ஆறுதேசம், கரிங்கல், எடைக்கோடு ஆகிய ஊர்களில் ரூ. 2. 42 லட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலேயங்கள் மற்றும் துணே நிலேயக் கட்டிடங்களும். ரூ. 3. 38 லட்சம் செலவில் நாகர் கோயில் மாவட்டத் தலேமை மருத்துவ மனேயில் வார்டுகள், அவுட்பேசன்ட் பிரிவுகள், சமையலறை, பொதுக் சுகாதார ஆராய்ச்சிக் கூடம், சவக்கிடங்குக் கட்டிடங்களும் அருமனே, கணபதியாபுரம். பூதப்பாண்டி ஆகிய ஊர்களில்மருத்துவ மனே அதிகாரிகளுக்கு வீடுகளும், ரூ. 1.34 லட்சம் செலவில் குமரி முனே கேப்ஹோட்டலில் அபிவிருத்தி வேலேகள் மேற்கொண்டதுடன், நாகர் கோயிலில் சீர்ப்பயண விடுதிக் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் ரூ. 6,168 செலவில் மாவட்டத்தில் உள்ள மீன் பதப்படுத்தும் நிலேயங்களில் அபி விருத்தி வேலேகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகளெல்லாம் திட்டத்தில் அடங்கிய வேலேகளாகும். இவையல்லாமல் ரூ. 18. 29 லட்சம் செலவில் பல கட்டிடங்கள் கட்டப்பட்டன.

நாகர் கோயிலிலுள்ள சீர்ப் பயண விடுதி. (Tourist Bungalow)



# கூட்டுறவின் சாதனைகள்

உலகிலேயே ஒற்றுமையின் இன்றியமையாமையை அதிகமாக உணர்ந்த நாடு நம் நாடாகத் தான் இருக்க முடியும். நம் நாட்டிலிருந்த குறுநில மன்னர்களும், சமஸ்தானதிபதிகளும் தங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் பிளவு பட்டிருந்ததால் அன்னியர்கள் பலரின் படையெடுப்புக்கு இடம் தந்தனர். முடிவில் நாடு வெள்ளையர்களுக்கு அடிமைப்படும் அவல நிலை ஏற்பட்டது. ஆனல் கடைசியாக நாம் ஒற்றுமைப் பட்டோம். நாட்டை மீட்டோம். இந்த ஒற்றுமை உணர்ச்சி நம் முன்னேர்களுக்கு, அவர்களை ஆண்டு வந்த மன்னர்களுக்கு இருந்திருந்தால் சரித்திரம் நிச்சயம் வேறு விதமாகத் தான் இருந்திருக்கும்.

ஒற்றுமைக்கும், கூட்டுறவுக்கும் அதிகம் வேறுபாடில்லை. நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒற்றுமை எவ்வளவு உதவுகிறதோ அதே போல் தொழில் வர்த்தக முன்னேற்றத்திற்குக் கூட்டுறவு உதவியாக இருக்கிறது. இந்தக் கூட்டுறவு முறை நம் நாட்டில் என்றைக்கு முதலில் தோன்றியது என்பதைத் திட்டவட்டமாகச்


சொல்ல முடியாது. எனினும் கூட்டுறவு இயக்கம் முதன் முதலில் நம் மாநிலத்தில் தான் தோன்றியது.

1829-ல் சென்னை ராஜதானி அரசாங்கம், ஐரோப்பாவில் இருந்து வந்த நில, விவசாய பாங்குகளின் நடவடிக்கைகளை அறிந்து அந்த முறைகளை எந்த அளவுக்கு நம் நாட்டில் கையாளலாம், கடன் பட்டு அவதிப்படும் கிராம மக்களின் கடன் தொல்லைகளை எவ்வாறு நீக்கலாம் என்று ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸர் பிடெரிக் நிக்கெல்ஸன் அவர்களை நியமித்தது. இவர் தந்த அறிக்கையே 1904-ம் ஆண்டுச் சட்டத்தின் அடித்தளமாக அமைந்தது. பின்னர் 1905-ல் நமது மாநிலத்தில் தான் முதன் முதலாக தலைமைக் கூட்டுறவு பாங்கு ஆரம்பிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, கூட்டுறவு சம்பந்தமான முதல் பத்திரிகையும் நம் மாநிலத்திலிருந்தேதான் வெளிவந்தது.

### விவசாய பாங்கு

கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டோடு இணைந்த பிற்பாடுதான் அங்குக் கூட்டுறவு இயக்கத்தில் ஒரு திருப்பம் தோன்றியது. அதற்கு முன்பு அங்கு மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கு இல்லை. ஆனால் தமிழ் நாட்டுடன் இணைந்த மிகக் குறுகிய காலத்தில் மத்திய பாங்குஒன்று அங்கு ஏற்படுத்தப்பட்டது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இதன் வளர்ச்சி மிகவும் பாராட்டத்தக்கதாய் உள்ளது. இப்போது இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 8 லட்சம். 1960-61-ம் ஆண்டில் மட்டும் இப் பாங்கு விவசாயிகளுக்கு ரூ. 60 லட்சம் குறைந்தகால, நடுத்தரத் தவணைகளில் திரும்பச் செலுத்தும் படியாகக் கடன் கொடுத்துள்ளது. நடைமுறை ஆண்டில் ரூ. 70 லட்சம் கடனாகக் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது.

தற்போது இம் மாவட்டத்தில் 13 விவசாய பாங்குகள் உள்ளன. இவை 33 கிராமங்களில் உள்ள மக்களுக்கு உதவி புரிகின்றன. இந்த 13 பாங்குகளும் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைந்த பின்னர் ஏற்படுத்தப் பட்டவையாகும். குறைந்தகால, நடுத்தர த்தவணைக் கடன்கள், நகைகள் பேரில் கடன்கள் கொடுப்பதுடன், இந்தப் பாங்குகள் ரசாயன உரம், விவசாயக் கருவிகள் முதலியவற்றைக் குடியானவர்களுக்கு நியாய விலையில் வழங்குகின்றன. பாங்குக் கட்டிடம் கட்ட அரசாங்கம் ரூ. 1;500 கடனாகவும், ரூ. 2,500 உதவிநிதியாகவும் வழங்குகிறது. அருமனை, லட்சுமிபுரம், மணக்கவிளை கூட்டுறவு விவசாய பாங்குகள் இந்தத் தொகையைப் பயன்படுத்தி யுள்ளன. மேற்கொண்டு



காரவிளையில் உள்ள தானியக் கிடங்கு.

இந்த ஆண்டில் இரண்டு பாங்குகளுக்கு நிதி உதவி கொடுக்கப் படும். வெல்லமடம், கொட்டாரம், காரவிளை, இட்டமொழி விவசாய பாங்குகள் அரசாங்க நிதி உதவியுடன் கிடங்குகள் கட்டியுள்ளன. இந்தக் கிடங்குகள் குடியானவர்களுக்குப் பெரிதும் உதவியாக உள்ளன.

## கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கம்

இம் மாவட்டம் தனியாக அமைக்கப்பட்டதிலிருந்து 60 பல் காரியக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்பு இங்கிருந்த பல சங்கங்கள் செயலற்று இருந்தன. இத்தகைய 30 சங்கங்கள் தொடர்ந்து இயங்க வகை செய்யப்பட் டுள்ளது. இங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கு வதில் அரசாங்கம் நிதி உதவி செய்கிறது. இச் சங்கங்கள் கிடங்குகள் கட்டுவதற்கும் நிதி உதவி வழங்குகிறது. மாடத்தட்டு விளை பல்காரியக் கூட்டுறவுச் சங்கம் இந்த நிதி உதவியைப் பயன் படுத்தி கிடங்கு கட்டியுள்ளது. வீரநாராயணச்சேரி கூட்டுறவுச் சங்கத்தின் கிடங்குக் கட்டிட வேலை முனைப்பாக நடைபெற்று வரு கிறது. மற்றும் சில சங்கங்கள் இந்த நிதி உதவியைப் பயன்படுத் திக் கிடங்குகள் கட்டத் திட்டமிட்டுள்ளன.

மூன்று கடன் வழங்கு யூனியன்-சர்விஸ் சொசைட்டிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவைகளின் நிர்வாகச் செலவுக்கு (பணியாளர் ஊதியம்) அரசாங்கம் நிதி உதவிசெய்கிறது. மாவட்ட அமைப்புக்குப்பின் வடசேரியில் ஒரு அர்பன் பாங்கு ஏற்படுத்தப்பட்டது. அதையும் சேர்த்து மொத்தம் 6 பாங்குகள் குளித்துறை தக்கலை, நாகர்கோயில் ஆகிய இடங்களில் பணியாற்றிவருகின்றன. இந்தப் பாங்குகள் சிறு வியாபாரிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் கடன் வழங்குவதுடன், உறுப்பினர்களுக்குத் தங்க நகைகளின் பேரில் கடன் கொடுக்கின்றன.

### பால் வழங்கு சங்கம்

தற்போது இம்மாவட்டத்தில் 31 சங்கங்கள் பரவலாகப் பணியாற்றி வருகின்றன. கறவைப் பசுக்கள் வாங்குவதற்காக இச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கப்படுகிறது. இச் சங்கங்களுக்கு 1960-61 வரை அரசாங்கம் ரூ. 96450 ; மத்திய பாங்கு ரூ 1.16 லட்சம் கடனுகை வழங்கியுள்ளன. இச் சங்கங்கள் நீங்கலாக நாகர்கோயிலில் ஒரு கூட்டுறவு யூனியன் இருந்து வருகிறது. பொதுமக்களுக்கும், அரசாங்க மருத்துவமனைகளுக்கும் இங்கிருந்து பால் விநியோகிக்கப்படுகிறது. வண்டி வாகனதிகள் மற்றும், மிஞ்சியபாலை வேறுபொருள்களாக மாற்றும் சாதனங்கள் வாங்கவும் இச் சங்கத்திற்கு அரசாங்கம் கடனும், நிதி உதவியும் கொடுக்கிறது. இச் சங்கங்களின்மூலம் இம் மாவட்டத்தின் சராசரி பால் உற்பத்தி 1200 பட்டணம் படிகளாகும்.

மாடு வளர்ப்பு அபிவிருத்திக்காக :தோவாளை வட்டம், வெல்லமடம் என்னும் ஊரில் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருந்து வருகிறது. இங்கு 3 முர்ரா எருமைகளும், சிந்திக்காளையும் பராமரிக்கப்படுகின்றன. மேலும் இங்கு ஒரு முதலுதவி சிகிச்சை நிலையமும் உள்ளது. இந்நிலையத்தின் ஸ்டாக்மென், கம்பௌண்டர் பொறுப்பை ஒருவரே ஏற்றுள்ளார். மருந்து வகைகள் வாங்க இந்நிலயத்திற்கு ஆண்டு தோறும் ரூ. 300 நடைமுறை செலவு உதவி நிதியாக வழங்கப்படுகிறது.

### வீடு வசதிச் சங்கம்

கிராமப்புற வீடு வசதிச் சங்கங்கள் நான்கும், நகர்ப்புற வீடு வசதிச் சங்கம் ஒன்றும் தற்போது இம்மாவட்டத்தில் பணியாற்றி வருகிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் வீடுகள் கட்டுவதற்காக நகர்ப்புற வீடு வசதிச் சங்கத்திற்கு குறைந்த வருமானக்

காரர்களுக்கான வீடு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 1·21 லட்சமும், அரசாங்க வீடு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 53600-ம், நடுத்தர வருமானக்காரர்களுக்கான வீடு வசதித் திட்டத்தின் கீழ்ரூ. 7000-ம் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளன. நாகர் கோயிலில் 19 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்கொண்டு 4 வீடுகள் கட்டப்படுகின்றன.

அகஸ்திஸ்வரம், ராஜாக்கமங்கலம், முன்சிறை, கிள்ளியூர் ஆகிய நான்கு வட்டாரங்களிலும் ஒவ்வொரு கிராமப்புற வீடு வசதிச் சங்கம் இருந்து வருகிறது. இச் சங்கங்களின் மூலமாக ரூ. 43,000 வழங்கப்பட்டுள்ளது. 9 வீடுகள் கட்டப்பட்டன. 7 வீடுகள் கட்டப்படுகின்றன.

**கூட்டுறவு விற்பனைச் சங்கம்**

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு விநியோக-விற்பனைச் சங்கமானது 1958-ல் தான் ஏற்படுத்தப்பட்டது. எனினும் அது தனது வேலைகளை மிகப் பெருமளவில் விஸ்தரித்துள்ளது. மாநில வர்த்தகத்திட்டத்தின்கீழ் இச் சங்கம் ரசாயன உரங்களைச் சேமித்து வைக்கிறது. மாவட்டத்தில் சர்க்கரை விநியோகம் இச் சங்கத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது. அரசாங்கம் இச் சங்கத்தில் ரூ. 17,000 பெறுமான முள்ள பங்குகள் வாங்கியிருப்பதுடன், நெல் அரைக்கும் யந்திரம் நிறுவ ரூ. 25,000 வழங்கியுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஆக்க வேலைகளில் குடியிருப்புகள் கட்டுவதும் ஒன்று. கிள்ளியூர் வட்டாரத்தில் உள்ள நெசவாளர் காலனி இது.



இம் மாவட்டத்தின் முக்கியமான தொழில் வேளாண்மையே அடுத்தது கைத்தறி. மாநிலப் பிரிவினைக்கு முன் இங்கு 76 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. தற்பொழுது 83 சங்கங்கள் உள்ளன. இவற்றில் 75 சங்கங்கள் செஸ்நிதித் திட்டத்தின் கீழ் பணியாற்றி வருகின்றன. இச் சங்கங்களில் மொத்தம் 11,391 உறுப்பினர்கள் உள்ளனர். இவைகளின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 3.64 லட்சமாகும். இச் சங்கங்களுக்கு ரூ. 72,293 பங்கு மூலதனக் கடனுகக் கொடுக்கப் பட்டது. அரசாங்கம் ரூ. 2·45 லட்சம் நடைமுறை மூல தனக்கடனுகக் கொடுத்துள்ளது. இதற்கு வட்டி கிடையாது. மேலும் மத்திய பாங்கானது தன் வசமுள்ள சொந்த நிதியிலிருந்தும் இந்திய ரிஸர்வ் பாங்கு நிதியிலிருந்தும் ரூ. 6.05 லட்சம் கடனுகக் கொடுத்துள்ளது.

கைத்தறித் துணி விற்பனையை ஊக்குவிக்க அரசாங்கம் ரிபேட் வழங்குவதுடன், கைத்தறிச் சாதனங்கள் வாங்க நிதி உதவி செய் கிறது. நாகர்கோயிலில் உள்ள மாநிலச் சங்கத்தின் மத்தியக் கிடங்கானது கூட்டுறவுச் சங்க கைத்தறி உற்பத்திப் பொருள்களைப் பாதுகாக்கிறது. மேலும் மாநிலச் சங்கம் இம் மாவட்டத்தில் ஒரு விற்பனை நிலையத்தையும் நடத்தி வருகிறது.

**பட்டு உற்பத்தி**

செய்ற்கைப்பட்டுத் தொழில் வளர்ச்சிக்காகத் தனியாக ஒரு சங்கம் கோட்டாரில் உள்ளது. நாகர் கோயிலில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கமானது சொந்தத் தறியில்லாத 125 நெசவாளர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறது. அரசாங்கம் இந்தச் சங்கத்திற்கு நடைமுறை மூலதனக் கடனுக ரூ. 30,000; பங்கு மூலதனக் கடனுக ரூ. 3,375; கருவிகள் வாங்குவதற்கான கடனுக ரூ. 12,910; மேஜை நாற்காலி வாங்குவதற்கான கடனுக ரூ. 3,200 கொடுத்து உதவி செய்துள்ளது. மேலும் சாயம் போடும் நிலையம் நிறுவுவதற்காக ரூ. 2,000; கட்டிட வாடகைக்காக ரூ. 2,400 உதவி நிதி கொடுத்துள்ளது. கூட்டுறவு சப்-ரிஜிஸ்ட்ரார் ஒருவரின் சேவை இதற்குக்கிடைத்துவருமாறு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. விசேஷமாக டர்க்கி டவல்கள், போர்வைகள் தயாரிப்பதில் இச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

வடசேரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நெச வாளர்களுக்கு 50 வீடுகள் கட்டித்தர அரசாங்கம் ரூ. 1.20 லட்சம் கடனுகவும், ரூ. 60,000 உதவி நிதியாகவும் கொடுத்துள்ளது. வீடு

6

கள் கட்டப்படுகின்றன. மற்றும் இதர வசதிகள் செய்துதர ரூ. 54,700 கடன் வழங்கியுள்ளது.

தற்போது இம் மாவட்டத்தில் 5 தொழில் ஒப்பந்தச் சங்கங்கள் உள்ளன. புன்னக்காட்டுவிளையில் உள்ள சங்கமானது வடசேரி நெசவாளர் சங்கத்திற்காக 30 விடு கட்டித்தர ஒப்பந்தம் செய்துள்ளது. மற்றும் புத்தளம், குளச்சல் ஆகிய இடங்களில் உள்ள சங்கங்கள் பொதுப் பணித்துறை வேலைகளையும் வட்டார வேலைகளையும் நிறைவேற்றி வருகின்றன.

இவ்விதமாகக் கூட்டுறவு இயக்கம் இம் மாவட்டத்தில் பல துறைகளில் அபிவிருத்தி அடைந்திருப்பதைக் காணலாம். தொழிலைப் பெருக்கி உயர்ந்த பட்ச நன்மைகளைப் பெற கூட்டுறவு இயக்கம் வழி செய்கிறது. அந்த நன்மைகள் இடையில் தரகர்கள் கையில் சிக்கிப் பங்குபோடப் படாமல் நேராகச் சங்க உறுப்பினர்களுக்கே கிடைத்து வருகின்றன. ஆகவே இந்த இயக்கம் நாளுக்கு நாள் பலம் பெற்று வருவதிலும், அரசாங்கம் இந்த இயக்கத்தை வளர்ப்பதில் தீவிரக் கவனம் செலுத்துவதிலும் வியப்பில்லை.




நாகரிகம் வளர்ச்சி யடைந்த காலமிது. மனிதனின் அறிவு இயற்கையின் ரகசியங்களையெல்லாம் துருவித்துருவி ஆராய்ந்து பல அரிய சாதனைகளைச் செய்து முடித்துள்ளது. அந்தச் சாதனைகளால் இன்று நமது வாழ்க்கையில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது.

உதாரணமாக மருத்துவத்தை எடுத்துக் கொள்வோம். நமது முன்னோர்கள் காலத்தில் குறிப்பிட்ட ஒரு நோயைத் தீர்க்க அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமத்தையும், காலத்தையும் விட மிகக் குறுகிய காலத்தில், சிரமம் அதிகம் இல்லாமல் அதே நோயை நாம் இன்று குணப்படுத்தி விடுகிறோம். இதற்கு நமக்கு விஞ்ஞானம் பேருதவியாய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அந்த விஞ்ஞானத்தின் துணைகொண்டு பல புதிய மருத்துவ வசதிகள் கண்டு பிடித்தால் மட்டும் போதாது. அந்த வசதிகளெல்லாம் ஏழை எளியவர், செல்

வந்தர் என்று வேறுபாடில்லாமல் அனைவருக்கும் கிடைக்குமாறு செய்ய வேண்டும். நமது ஐந்தாண்டுத் திட்டத்தின் லட்சியம் இதுவே. இன்று இந்தக் குறிக்கோளை நோக்கியே நாடு செல்கிறது.

நம் தமிழ் நாட்டில் கிராமங்கள் அதிகம். இக் கிராமங்களில் வாழும் மக்களுக்கெல்லாம் இந்த மருத்துவ வசதிகளைச் செய்வதாக வைத்துக்கொள்வோம். பின்னர் நாம் நமது லட்சியத்தில் வெற்றி கண்டு விட்டோம் என்று தான் சொல்ல வேண்டும். மக்களுக்குத் தேவைப்படும் வசதிகளில் மருத்துவ வசதியும் ஒன்றாகும். அதனால் இரண்டாவது திட்டக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலான முறையில் மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டன. கிராமங்கள் மட்டுமின்றி, வட்டத் தலைமை இடங்கள், மற்றும் பேரூர்கள் இதனால் பயனடைந்தன.

### ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

இரண்டாவது திட்டக்காலத்தில் இம் மாவட்டத்தில் ஐந்து இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டன.

அகஸ்தீஸ்வரம் (இரண்டாவது நிலை) வட்டாரத்தில் உள்ள அகஸ்தீஸ்வரத்தில் ஒரு தலைமை நிலையமும், ஒரு கிளை நிலையமும் பணியாற்றி வருகின்றன. இந்நிலையம் ஐக்கிய நாடுகள் சிறுவர் பராமரிப்பு நிதியிலிருந்து உதவிபெறத் தகுதியுள்ளதாகும். இதற்காக ஒரு ஜிப் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு விடுகள் கட்டும் திட்டம் விரைவில் ஆரம்பமாகவிருக்கிறது.

முன்சிறை (முதல் நிலை) வட்டாரத்தைச் சேர்ந்த ஆறு தேசத்தில் ஒரு நிலையம் பணியாற்றி வருகிறது. தலைமை நிலையத்துக்கான கட்டிடம் உருவாகிறது. இந்நிலையத்துக்கு ஐ. நா. உதவி உண்டு. ஒரு ஜிப் காரும் இந்நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்குப் பணியாற்றும் ஊழியர்களுக்கு விடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

ராஜாக்கமங்கலத்துறை (முதல் நிலை) வட்டாரத்தைச் சேர்ந்த ராஜாக்கமங்கலத்துறையில் ஒரு நிலையம் பணியாற்றுகிறது. இது ஐ. நா. உதவி பெறுகிறது. இங்கு ஒரு ஜிப் கார் உள்ளது. நிலைய ஊழியர்களுக்கு விடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

கிள்ளியூர் (முதல் நிலை) வட்டாரத்தைச் சேர்ந்த கரிங்கலில் ஒரு நிலையம் பணியாற்றுகிறது. இதுவும் ஐ. நா. உதவி

பெறத்தகுதியுள்ளது. இங்கும் நிலைய ஊழியர்களுக்கு வீட்டுவசதி செய்து தரப்பட்டது.

மேல்புரம் (முதல் நிலை) வட்டாரத்தைச் சேர்ந்த எடைக் கோட்டில் ஒரு நிலையம் உள்ளது. ஐ. நா. உதவி எதிர்பார்க்கப் படுகிறது. நிலைய ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டன.


இவையல்லாமல் குறுந்தங்கோடு (முதல் நிலை) வட்டாரத்தைச் சேர்ந்த முட்டம் என்னும் ஊரில் ஒரு நிலையம் அமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. மற்றும் தோவாளை வட்டாரம் அழகியபாண்டி புரத்தில் ஒரு நிலையம் நிறுவப்படும்.

அருமனை, கணபதிபுரம், பூதப்பாண்டி ஆகிய ஊர்களில் உள்ள அரசாங்க டிஸ்பென்சரி அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டன. மற்றும் கொட்டாரம், குமரிமுனையில் உள்ள அரசாங்க டிஸ்பென்சரி அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டித்தரத் திட்டமிடப் பட்டுள்ளது.

## குடும்பக் கட்டுப்பாடு

அளவான குடும்பமே ஆனந்தம் தரும். திட்டமிட்ட அடிப்படை யில் மக்கட் செல்வங்களை வளர்த்து சிறந்த வாழ்வு நடத்துவதே நன்மை விளைவிக்கும். இதற்காக குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்

நாகர் கோயிலில் அரசாங்க மருத்துவ மனையைச் சேர்ந்த
பொதுச் சுகாதார ஆராய்ச்சிக் கூடம்



சம்பந்தமாக நல்லுரைவழங்கவும், மக்களுக்கு உதவி செய்யவும் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் நாடெங்கும் அமைக்கப் படுகின்றன. தற்போது இம்மாவட்டத்தில் நாகர் கோயில், பத்மநாபபுரம், குளித்துறை ஆகிய ஊர்களில் இந் நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. நாகர்கோயிலில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனையும் குளித்துறை, பத்மநாபபுரம், குலசேகரம் ஆகிய ஊர்களில் உள்ள அரசாங்க மருத்துவ நிலையங் களும் சந்தானபூர்த்தி செய்வதற்கு அங்கிகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி தாய் அல்லது தந்தை ஆபரேஷன் செய்து கொள்வதானல் அவர்களுக்கு தலா ரூ. 30 படியாக அளிக்கப் படுகிறது.

## மருத்துவமனை அபிவிருத்தி

நாகர் கோயிலில் உள்ள அரசாங்க மாவட்டத் தலைமை மருத் துவ மனையில் மாவட்ட சுகாதார பரிசோதனைக் கூடம், புதிய சவக் கிடங்கு, சமையற் கூடம், ஆகியவை கட்டியதுடன், தனிப்பிரிவு வார்டில் குளிக்கும் அறை, மற்றும் நீர் வசதி செய்து தரப் பட்டுள்ளது. சுகாதார பரிசோதனைக் கூடத்திற்குத் தேவையான கருவிகள் ஐ. நா. விடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன, இது வெகுவிரைவில் முழு அளவில் வேலை தொடங்கும். மற்றும் 76 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு, அவுட் பேஸன்ட் வார்டு, எக்ஸ்ரே மற்றும் நிர்வாகப்பகுதிக் கட்டிடம் ஆகியவை கட்டப்படுகின்றன. எக்ஸ்ரே கருவி ஒன்றும் வரவழைக்கப் பட்டுள்ளது. இதற்கான தனிப்பகுதிக் கட்டிடம் முடியும் வரையும் இது நிர்வாகப் பகுதிக் கட்டிடத்திலேயே இருந்து வரும். மேலும் மேகநோய் மருந்தகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான தனிக் கட்டிடம் ஒன்றும் கட்டப்படுகிறது. பல் மருத்துவப் பிரிவு ஒன்றும் இங்கு உள்ளது. தனிக் கட்டிடம் கட்டப்படும் வரை யில் அப்பிரிவு இங்கேயே இருந்து வரும்.

## புதிய மருத்துவ மனைகள்

குளித்துறையில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையமானது 1959 நவம்பர் மாதத்திலிருந்து வட்டத் தலைமை மருத்துவ மனையாக நிர்மாணிக்கப்பட்டது. இங்கு 20 படுக்கைகள் உள்ளன. இதே போல் குளச்சலில் உள்ள அரசாங்க டிஸ்பென்சரியையும் 20 படுக் கைகள் கொண்ட மருத்துவமனையாக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. தக்கலையில் ஒரு அரசாங்கத் தொழுநோய் மருத்துவ நிலையம் பணியாற்றி வருகிறது. மேலும் இம்மாவட்டத்தில் மூன்று அரசாங்க ஆயுர்வேத மருத்துவ நிலையங்களும் பணியாற்றி வருகின்றன.


## பொதுச் சுகாதாரம்

அறிவுக் களஞ்சியமாகிய திருக்குறளில் அடங்காத பொருளே இல்லை எனலாம். கடுகைத் துளைத்து அதனுள் எழுகடலையும் புகுத்தியது போன்ற குறுகத் தரித்த குறளில் 'மருந்து' எனும் அத்தியாயம் ஒன்று உண்டு. அதில்,

" நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல் "

எனும் குறளைப் பொதுச் சுகாதாரத்தின் திரண்ட கருத்தாகக் கொள்ளலாம். நோய்க்குக் காரணமானவற்றைக் கண்டறிந்து அதனைத் தணிக்கும் வழி முறைகளைக் கையாள்வதே நன்மை பயக்கும். அத்தகைய வழிமுறைகளை மருத்துவ அதிகாரிகள் மட்டு மல்ல, மக்களும் கையாள்வதே சாலச்சிறந்தது. நோய் எதனுல் ஏற்படுகிறது என்னும் விளக்கத்தை மக்கள் உணர்ந்து நடந்தால் நோய்களே தோன்ரு. ஆகவே பொதுச் சுகாதாரத்தின் அடிப்படை யாகத் திகழ்வது மக்களின் பொறுப்புணர்ச்சியும், சுற்றுப் புறங் களைச் சுத்தமாக வைத்திருந்து வாழவேண்டும் என்னும் மனப் பான்மையும் தான். இந்தப் பொறுப்புணர்ச்சியை வளர்ப்பது

நாகர்கோயிலில் உள்ள அரசாங்க மருத்துவமனை.
அவுட் பேஸன்ட் வார்டு விஸ்தரிக்கப்படுகிறது.




சுகாதார இன்ஸ்பெக்டர்களின் கடமையாகும். நோய் ஏற்பட்ட காலங்களில் குணப்படுத்துவது மருத்துவ அதிகாரிகளின் கடமை யாகும்.

கிராம மக்களிடையே இந்தப் பணியை விரிவுறச் செய்வ தற்காக கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. இங்கு சுகாதார இன்ஸ்பெக்டரும், சுகா தாரப் பார்வையாளரும், அதே சமயத்தில் ஒரு மருத்துவ அதிகாரி யும் கம்பௌண்டரும் இருக்கின்றனர். இரண்டாவது திட்டக் காலத்தில் இம்மாவட்டத்தில் அகஸ்திஸ்வரம், ஆறுதேசம், ராஜாக்கமங்கலம், எடைக்கோடு, கரிங்கல் ஆகிய ஊர்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று முன்னர் பார்த்தோம். இங்கு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம், பொதுச் சுகாதாரம் சம்பந்தமாக மக்களுக்கு ஆலோசனைகள் சொல்லப் படுகின்றன.

**தாய் சேய் நலவிடுதிகள்**

கிராமப்புறங்களில் கர்ப்பிணிகளுக்குச் செய்து தரப்படும் வசதி கள் குறைவு. பிரசவத் துறையில் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தாய்மார்களுக்கு நல்ல வசதிகளைச் செய்தால் அதன் மூலம் பிரசவகால அகால மரணங்களைக் குறைக்க முடியும். இந்த

தாய் சேய் நலம்பேணும் விடுதி



நோக்கத்துடன் கிராமப்புறங்களிலும், மிகவும் பின்தங்கிய பகுதிகளிலும் தாய் சேய் நலவிடுதிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. பிரசவத்திற்கு முன்னும் பின்னும் தாய்மார்களுக்குச் சேவை செய்யப்படுகிறது. பயிற்சியாளர்கள் மருந்தகங்கள் வைத்து நடத்துவதுடன், மருந்தும் விநியோகம் செய்கின்றனர். இவ்விடுதிகளிலிருந்து குழந்தைகளுக்குப் பால் பவுடர் வழங்கப்படுகிறது.

இரண்டாவது திட்டக்காலத்தில் இம்மாவட்டத்தில் அழகிய பாண்டியபுரம், தெரிசனங்கோப்பு, மருங்கூர், மேக்கோடு, ஆசாரிப்பள்ளம், கஞ்சம்புரம், குளிவிளை ஆகிய இடங்களில் தாய் சேய் நலவிடுதிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1958-59 முதல் 1960-61 வரை ரூ. 16,479 செலவிடப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகளுக்குப் பணி செய்யும் 'தாயி'களுக்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் புதிய முறைகளைப் பற்றிப்பயிற்சி அளிக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி இரண்டாவது திட்டக் காலத்தில் 56 தாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 20 உதவி நிதி வழங்கப்பட்டது. குறைந்தபட்சம் அவர்களுக்கு என்னென்ன சாதனங்கள் வேண்டுமோ அவைகள் இலவசமாக வழங்கப் படுகின்றன. 1958-59 முதல் 1960-61 வரை ரூ. 8,256 செலவிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில், பல விடுகளில் சுகாதாரத்தைப் பாதிக்கும் அளவில் கக்கூஸ்கள் இருக்கின்றன, பாதுகாப்பான கக்கூஸ்கள் கட்டுவதன் மூலம் நோய்கள் பரவாமல் தடுக்க முடியும். இந்த நோக்கத்துடன் இம்மாவட்டத்தில் இரண்டாவது திட்டக்காலத்தில் 648 கக்கூஸ் தட்டுகள் வழங்கப்பட்டன. இதற்காக 1957-58 முதல் 1960-61 வரை ரூ. 12,245 செலவிடப்பட்டது.

பிறப்பு-இறப்பு-பதிவு

பிறப்பு-இறப்பைப் பதிவு செய்வதன் மூலம் நாட்டின் மக்கள் தொகையைக் கணக்கிட முடிகிறது. அதைக் கொண்டு அரசாங்கம் திட்டங்கள் வகுக்கிறது. மேலும் இறப்பைப் பதிவு செய்வதன் மூலம், அந்த இறப்புக்குக் காரணமான விவரங்களைக் கண்டறிந்து நோய்களைத் தீர்க்க மேற்கொண்டும் அதிகமான மருத்துவ வசதி செய்ய ஏதுவாகிறது. தற்போது இம்மாவட்டத்தில் 18 சுகாதார உதவியாளர்கள் பிறப்பு-இறப்புப் பதிவுத் திட்டத்தின் கீழ்ப்பணியாற்றுகின்றனர். இத்திட்டத்திற்காக இரண்டாவது திட்டக்காலத்தில் ரூ. 92,826 செலவிடப் பட்டது.

பொதுச் சுகாதாரப் பணிகளில் சமுதாய நல வட்டாரங்களின் சேவை மிகச் சிறந்ததாகும். கிராமத்தினருக்கு வட்டார நிதியிலிருந்து கக்கூஸ் தட்டுகள் வழங்கப்படுவதுடன், சாக்கடை வசதிகள் செய்து தரப்படுகின்றன. கிணறுகள் வெட்டப்படுகின்றன.

மேலும் பொதுச் சுகாதார அறிவைப் பரப்பும் பணியில் கிராம சேவக்குகள், ஹரிஜன நலத்துறை, பெண்கள் நலத்துறை ஊழியர்களின் பங்கு பயனுள்ளதாய் விளங்குகிறது.

மலேரியா ஒழிப்பு, பி. சி. ஜி. திட்டம் ஆகியவையும் பொதுச் சுகாதாரத் துறையின் வேலைகளாகும். தேசிய மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளின்கீழ் வீடுகளில் டி. டி. டி. தெளிக்கப்பட்டது. மலேரியா தடுப்பு சர்வேக்கள் நடத்தப்பட்டன. மலேரியாவைத் தடுக்கும் மருந்துகள் விநியோகிக்கப்பட்டன. பி. சி. ஜி. திட்டத்தின் கீழ் பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டது. இவ்விதமாக இவ்விரு திட்டங்களால் மலேரியாவும், க்ஷயரோகமும் பெருமளவில் களையப்பட்டுவிட்டன.

**குடிநீர்த் திட்டம்**

பொதுச் சுகாதாரத்தை நிலை நாட்டுவதென்றால் மக்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைக்க வகை செய்யவேண்டும். அதன்படி இரண்டாவது திட்டக்காலத்தில் இம் மாவட்டத்தில் நாகர்கோயில் நகராட்சியிலும், சுசீந்திரம், குமரிமுனை பஞ்சாயத்துக்களிலும் 1·15 லட்சம் பேர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்பட்டது. இதற்காக ரூ. 2·05 லட்சம் செலவிடப்பட்டது. மூன்றுகுடிநீர்த் திட்டங்கள் மூலம் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. அவையாவன:

குமரிமுனை குடிநீர்த் திட்டத்தால் 14,000 பேருக்கு நாளொன்றுக்கு 7 காலன் விதம் மொத்தம் 98,000 காலன் நீர் வழங்கப்படுகிறது. பொது மக்களுக்கு மட்டுமின்றி அரசாங்க அலுவலகங்களுக்கு இத்திட்டத்தால் பயன் உண்டு. இதற்கான மூலதனச் செலவு ரூ. 89,000 ஆகும்.

சுசீந்திரம் குடிநீர்த் திட்டத்தால் 16,500 பேருக்கு நாளொன்றுக்கு 7 காலன் விதம் மொத்தம் 1,15,500 காலன் நீர் வழங்கப்படுகிறது. இதற்கான மூலதனச் செலவு ரூ. 67,500 ஆகும்.

நாகர்கோயிலில் ஏற்கெனவே இருந்துவரும் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ. 48,500 செலவில் இரண்டாவது திட்டக்காலத்தில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதுமட்டுமல்லாமல் மூன்றாவது திட்டக்காலத்தில் மேற்கொண்டும் இக்குடிநீர்த் திட்டத்தை விஸ்தரிக்க ரூ. 7·61 லட்சம் செலவிடப்படும். தற்போது இந்த வேலைகள் தொடங்கிவிட்டன.

இவற்றிலிருந்து இம்மாவட்டத்தில் பொதுச் சுகாதார நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதை நன்கு அறிந்து கொள்ளலாம். இரண்டாவது திட்டத்தின் பயனை அடைந்த மக்கள், மூன்றாவது திட்டத்தின் பயனை நுகர்ந்து நோயற்ற நல்வாழ்வு வாழ்வர் என்பது திண்ணம்.




**க**ம்ப ராமாயணத்தில் ஒரு நல்ல கட்டம். இராவணனை விட்டுப் பிரிந்த அவனது தம்பி விபீஷணன் நேராக ராமனிடம் அடைக்கலங்கேட்டு வருகிறான். இராமனும் அவனுக்கு அடைக்கலம் தந்து, அரவணைத்துக் கூறுகிறான்:

" குகனொடும் ஐவரானோம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம் எம்முழை அன்பில் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம் "

என்பது இராமன் கூற்று. "குகன் எம்முடன் சேர்ந்தமையால் இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கனன் என நால்வராக இருந்த நாங்கள் ஐவரானோம். பின்னர் சுக்ரீவன் வந்தான். அவனைச் சேர்த்து அறுவரானோம். இப்போது நீ வந்துள்ளாய். உன்னைச் சேர்த்து எழுவரானோம்" என்பது இதன் பொருள்.

இராமன் ஒரு க்ஷத்திரியன். ஆனால் குகன் ஒரு வேடுவன். விபீஷணன் இலங்கைக்கோமகனின் இளவல். இருப்பினும் இராமன்

அனைவரையும் தனது உடன் பிறந்த சகோதரர்களாக எண்ணிக் கூறியது அவனது உள்ளப் பாங்கைக் காட்டுகிறது. இதனால் ஜாதி மதபேத ஏற்றத்தாழ்வு அவன் உள்ளத்தில் இம்மியளவும் இடம் பெறவில்லை என்பது விளங்கும். அந்த இராமனின் ராஜ்யமே காந்திஜி சொல்லிவந்த ராம ராஜ்யம்.

காந்திஜியின் லட்சியங்களுள் ஒன்று ஹரிஜன முன்னேற்றம். இந்த லட்சியம் அவர் காலத்தில் அனைவரது உள்ளத்திலும் வேரூன்றியது. அதனால் அவர் மறைந்த பின்பும் நம் உள்ளத்தில் அந்த லட்சியம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய ஹரிஜன முன்னேற்ற நடவடிக்கைகள் அனைத்துக்கும் காரணம் அந்த லட்சியமே.

**அன்று**

கன்னியா குமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைவதற்கு முன்பு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையின் கீழ் ஒரு அதிகாரி ஹரிஜன முன்னேற்ற வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். மேலும் ஆறு சமுதாய நல ஊழியர்கள் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்து வந்ததுடன், ஹரிஜனக் காலனிகளைப் பார்வையிட்டு, ஹரிஜனங்களைக் கண்டு பேசி, முன்னேற்ற வேலைகளின் முழுப்பயனையும் அவர்கள் எவ்வாறு பயன் படுத்திக் கொள்வது என்று ஹரிஜனங்களுக்கு வழிகாட்டி வந்தனர். ஹரிஜனங்களின் கல்வி வளர்ச்சியிலும் இந்த ஊழியர்கள் அக்கறை காட்டினர். முதியோர் வகுப்புப் பள்ளிகள் வைத்து நடத்தினர். வேளாண்மை, குடிசைத் தொழில்களான நூல்நூற்றல், நெசவு, பாய்பின்னுதல், கோழி வளர்ப்பு ஆகிய வேலைகளில் நவீன முறைகளைக் கையாளும் விதத்தைப் பற்றியும் இவர்கள் ஹரிஜனங்களுக்குக் கற்பித்து வந்தனர். மருத்துவச்சி ஒருவர் சுகாதாரப்பார்வையாளர் என்னும் ரீதியில் ஹரிஜனங்களின் சுகாதாரத்தைக் கவனித்துவந்தார். ஹரிஜனங்களுக்காக வீடுகளும் கட்டித்தரப்பட்டன.

**இரண்டாவது திட்டத்தில்**

இரண்டாவது திட்டக்காலத்தில் இம்மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைந்தது. அதன் பின்னர் ஹரிஜன முன்னேற்ற நடவடிக்கைகளில் ஒரு வேகம் தோன்றியது. முன்பிருந்துவந்த வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. முன்னேற்ற வேலைகளை முழுநேர வேலைகளாகக் கவனிக்க மாவட்ட நலவளர்ச்சி அதிகாரி ஒருவர் 1957 ஏப்ரலில் நியமிக்கப்பட்டார். வீடு வசதித் திட்டத்தின் கீழ் 337 வீடுகள் கட்டப்பட்டு ஹரிஜனங்களுக்கும், 20 வீடுகள் மலைஜாதியினருக்கும் கொடுக்கப்பட்டன. ரூ 2·03 லட்சம் செலவிடப்பட்டது. சுகாதார வேலைகளுக்காக ரூ. 40,390 செல

விடப்பட்டது இதன் கீழ் 34 குடிதண்ணீர்க் கிணறுகள் வெட்டப்பட்டன. கல்வித்துறையில் முன்னேற்றத்திற்காக உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. இந்த வகையில் 1957 ஏப்ரல் மாதத்திலிருந்து 1961 மார்ச் முடிய ரூ. 3·59 லட்சம் செலவிடப்பட்டது. வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 988 ஜோடி உழவு மாடுகள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. இதல்லாமல் விதைகள் மற்றும் இதர சாதனங்கள் வாங்கவும் நிதி உதவி செய்யப் பட்டது. 1957 ஏப்ரலிலிருந்து 1961 மார்ச் முடிய ரூ. 2·72 லட்சம் உதவி நிதியாகக் கொடுக்கப்பட்டது. வேளாண்மை அல்லாத இதரதொழில்கள் செய்பவர்களுக்குத் தையல்மிஷினும், நெசவுச் சாதனங்கள் ஆகியவையும் வழங்கப்பட்டன. இதற்காக ரூ. 62,000 செலவிடப்பட்டது. மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலகத்தின் மூலம் 1958 மார்ச் மாதத்திலிருந்து 1961 ஏப்ரல் முடிய 257 ஹரிஜனங்களும் மலை ஜாதியினரும் பலதரப்பட்ட வேலைகளில் அமர்த்தப் பட்டனர்.

**மாதர் நலன்**

பெண்கள் சமுதாயத்தின் கண்கள். அவர்களது வாழ்க்கையைச் சீர்படுத்துவதென்றால் அவர்களது பொருளாதார

சுத்தமும் சுகாதாரமும் உள்ள ஹரிஜன் காலனி. மருங்கூர் பகுதியில் உள்ளது.





நாகர் கோயிலில் உள்ள தொழில் நிலையத்தில்
பெண்கள் பல அழகுப் பொருள்கள் செய்கின்றனர்.

நிலையை உயர்த்தவேண்டும். அதற்கு அவர்களுக்குப் பல தொழில்களைச் செய்வதற்கான பயிற்சிகள் தரவேண்டும். தமது ஓய்வு நேரங்களில் அவர்கள் அந்தத் தொழில்களில் ஈடுபடுவதன் மூலம், அவர்களது நேரம் பயனுள்ளதாகக் கழிகிறது. வருவாய் கிடைக்கிறது. வாழ்க்கையும் ஓரளவுக்கு வளமுள்ளதாகிறது.

**பயிற்சி நிலையம்**

மெழுகுப் பொருள்கள், மீன்செதில்களை வைத்துப் பூக்கள் ஆகியவை தயாரிக்கவும், அந்தத் துறையில் பெண்களுக்குப் பயிற்சி தரவும் 1958 ஜூன் மாதத்தில் நாகர்கோயிலில் ஒரு தொழில் நிலயம் ஆரம்பிக்கப்பட்டது. இது வரையில் 5 பிரிவினருக்குப் பயிற்சி தரப்பட்டது. இப்போது 6-வது பிரிவினருக்கு (12 பேர்) பயிற்சி தரப்படுகிறது. இந்நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு 1958 ஜூன் மாதத்திலிருந்து 1961 மார்ச் முடிய ரூ 5391 உதவிப் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 273 பெறுமானமுள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்நிலையத்தின் சார்பில் ஒரு தொழில் கூட்டுறவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


இதேபோல் ஜமுக்காளம், போர்வை நெய்வதற்காக 1959 நவம்பரில் ஒரு தொழில் நிலயம் ஆரம்பிக்கப்பட்டது. 1960 ஜூலையிலிருந்து தான் இந்த உற்பத்தி வேலை நடைபெறுகிறது. நடைமுறை ஆண்டில் ரூ. 769 மதிப்புள்ள போர்வைகள் தயாரிக்கப்

பட்டன. ரூ. 196 பெறுமானமுள்ள ஜமுக்காளம், போர்வைகள் விற்பனை செய்யப்பட்டன. கைவிடப்பட்ட மனைவியர், அனாதைகளுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 பேர்கள் பயிற்சி பெற சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பயிற்சியாளர்களுக்கு ரூ. 671 ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. முதல் பிரிவினருக்குத் தரப்பட்ட பயிற்சி முடிந்தது. இத்தருணத்தில் தகுந்த கட்டிட வசதியின்மையால் நாகர் கோயிலிலிருந்து இந்நிலையம் இரணியலுக்கு மாற்றப்பட்டது. 1960 டிசம்பரிலிருந்து இரண்டாவது பிரிவினருக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. உயர்ந்தரக ஜமுக்காளம், போர்வை ஆகியவை நெய்வதில் இப்பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். உற்பத்தியான பொருள்களும் நேர்த்தியாகவே உள்ளன.

**போலீஸ் துறையினர் நலன்**

சட்டத்தையும், அமைதியையும் நிலை நாட்டி, நாட்டில்சுமுக நிலை தோன்றுவதற்குப் பாடுபடுபவர்கள் போலீஸார். அவர்களது குறைகளை முடிந்தமட்டில் ஒவ்வொன்றாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பெருமுயற்சி எடுத்துவருகிறது. இதில் முக்கியமானது வீட்டு வசதித் திட்டம். போலீஸாருக்குக் காலனி அமைப்பதில் இப்போது முனைப்பான வேகம் தோன்றியுள்ளது.

போலீஸார் குடியிருப்பு



கன்னியாகுமரி மாவட்டத்தில் கோட்டார், திருவட்டாறு நிலையங்களிலும், குளச்சல், கன்னியாகுமரி, குலசேகரம், மணவாளக் குறிச்சி, அஞ்சு கிராமம் ஆகிய அவுட்போஸ்ட்களிலும் பணியாற்றும் போலீஸாருக்கும், இரணியல் போலிஸ் நிலைய ஸப்—இன்ஸ்பெக் டருக்கும் விடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. ஆரல்வாய்மொழி போலிஸ் நிலையத்தினருக்காகவும் விடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மற்றும் தக்கலை, விளவங்கோடு, இரணியல், பூதப்பாண்டி ஆகிய இடங்களில் விடுகள் கட்ட மனை இடங்கள் வாங்கப்படுகின்றன.

**சிறுவர் கிளப்**

சிறுவர்கிளப் ஆரம்பிப்பதற்காக அரசாங்கம் தேர்ந்தெடுத்த மூன்று இடங்களில் கன்னியாகுமரியும் ஒன்று. இங்கு ஆரம்பிக்கப் பட்டுள்ள சிறுவர் கிளப் மிக நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இதனோடு ஒரு நூல் நிலையமும் இணைக்கப்பட்டுள்ளது. பல சிறுவர்கள் தையல் வேலை கற்று வருகின்றனர். சாரணர் இயக்கமும் இங்கு ஊக்குவிக்கப்படுகிறது. மாலையில் சிறு வர்களுக்குச் சத்துள்ள உணவு கொடுக்கப்படுகிறது. போலீஸார் விட்டுப் பெண்டிர்களுக்காக ஒரு மாதர் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. மத்திய சமுதாய நல போர்டின் மான்ய நிதி உதவியுடன் இச்சங்கத் திற்காக ஒரு கட்டிடமும் கட்டப்பட்டுள்ளது. இங்கு ஒரு தையல் மிஷினும், ஒரு தறியும் உள்ளன. பலர் தையல், நெசவு, நூல் பின்னல் ஆகிய வேலைகள் கற்று வருகின்றனர். குழந்தை வளர்ப்பு மிகவும் முக்கியமானது. தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பது போல் இளமையில் அமையும் பண்பு இறுதிவரையிலும் இருக் கிறது. தவறு செய்த சிறுவர்களைத் திருத்தும் பணி இரண்டாவது திட்டக்காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டது.

**சிறுவர் நலம்**

திருத்தப் பள்ளிகள் அல்லாத நிலையங்களிலிருந்து வெளிவந்த சிறுவர்களின் பின்கவனிப்புக்காக 1957-58ல் நாகர்கோயில் கிருஷ்ணன் கோவிலில் ஒரு பாதுகாப்பு விடுதி ஆரம்பிக்கப்பட்டது. இதுவே பின்னர் 1960-ல் கன்னியாகுமரி-திருநெல்வேலி மாவட்டங் களுக்கான அரசாங்க உஷார் விடுதியாக மாற்றப்பட்டது. பாதுகாப்பு விடுதிகளுக்கு சிறுவர்களை அனுப்பும் ஒரு கிளை விடுதி யாகவே இது இருந்து வருகிறது. 1960-61ல் இவ்விடுதியில் 17 சிறுவர்கள் இருந்தனர்.

> " வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனைய துயர்வு "

என்பது திருக்குறள்.

அதாவது தண்ணீர் எந்த அளவுக்கு உயர்கிறதோ அந்த அளவுக்கே மலர்க்கொடி உயரும். மனிதர்கள் உள்ளம் எந்த அளவுக்கு உயர்கிறதோ அந்த அளவுக்குத்தான் அவர்களும் வாழ்க்கையில் உயரமுடியும். இதைப்போல் சமுதாயத்தில் மக்கள் நிலை, பழக்க வழக்கம், பண்பாடு எந்த அளவுக்கு மேம்படுகிறதோ அந்த அளவுக்குத்தான் நாட்டின் சிறப்பு மேம்படும். மக்கள் வாழ்வை நல்வழியில் செலுத்தி மகிழ்ச்சிகரமாக்குவதே சமூக முன்னேற்ற நடவடிக்கைகள் ஆகும்.

## பொது வேலைகள்

திட்டம் வகுக்காமல் ஒருவர் ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதென்பது மிகக் கடினம். அதிலும் சிறப்பாக, பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு அரசாங்கம் சரியான ஒரு திட்டம் வகுக்காமல் எந்த வேலையையும் மேற்கொள்ள முடியாது. அப்படித் திட்டம் வகுப்பதென்றால் அது கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் கவனத்தில் வைத்து எதிர்காலத்திற்கான திட்டங்கள் வகுக்கவேண்டும். இதற்குக் கடந்த காலப் புள்ளி விவரங்களும், நிகழ்காலப்புள்ளி விவரங்களும் மிகச்சரியாக இருக்கவேண்டும். அப்போது தான் எந்த எந்தத் துறையில் தேவைப்பாடு இருக்கிறது. எந்த எந்தத் துறையில் உபரி ஏற்பட்டுள்ளது என்று அறிந்து திட்டத்தில் ஒரு சமநிலை கொண்டு வரமுடியும். இவ்வாறு புள்ளி விவரங்களைச் சேகரித்து வைத்து அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் பயன்படுமாறு அறிவிப்பதே புள்ளி விவரத்துறை ஆகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1959 மார்ச் மாதத்தில் புள்ளி விவரத்துறை யூனிட் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த யூனிட்டானது சாரசரி ஏக்கருக்கு நெல் விளைச்சல் என்ன என்று கணக்கிட்டது. அத்துடன் நவீன விவசாய முறைகள் ஒவ்வொன்றுலும் எவ்வளவு உற்பத்தி கூடியுள்ளது என்றும் சர்வே நடத்தியது. மேலும் தமது நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தை ஒரு குடியானவர் என்ன செய்கிறார், அதை எவ்வெவ்வகைகளில் முதலீடு செய்கிறார் என்று கணக்கெடுத்தது. தென்னை வளர்ப்பு, பால் உற்பத்தி, விலங்குச் செல்வம், மீன் பிடித்தல், கைத்தறித் துணி உற்பத்தி, விற்பனை, விவசாயப் பொருள்களின் மார்க்கெட் நிலவரம் ஆகியவை சம்பந்தமாகவும் சர்வே நடத்தியது. இந்த வேலைகளுக்காகத் திட்டக் காலத்தில் ரூ. 49·63 லட்சம் செலவிடப்பட்டது.

மிக அழகான மலரும் தனது நறுமணத்தால் தான் மக்கள் மனதைக் கவர்கிறது. மணம் இல்லாவிட்டால் மலர் எங்கே இருக்கிறது என்று அறிந்து கொள்ள முடியாது. அதேபோல் ஒரு திட்டத்தைப் பற்றிய செய்திகளை மக்களிடையே விளக்கிச் சொல்லாவிட்டால் அந்தத் திட்டத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியாமல் போய்விடும். ஒரு திட்டத்தையும், அதன் சிறப்பான அம்சங்களையும் மக்கள் நல்ல முறையில் அறியாத வரையில் அவர்கள் அந்தத் திட்டத்தைப் பற்றியோ, அதன் வெற்றியைப் பற்றியோ கவலைப்படமாட்டார்கள். அத்துடன் ஒத்துழைப்பும் தரமாட்டார்கள். ஆகவே திட்டத்தைப் பற்றிய செய்திகளை மக்களுக்கு விளக்குவதே செய்தித் துறையின் பணி ஆகும்.

**கலை நிகழ்ச்சிகள்**

இப்பணியைத் திறம்பட நடத்துவதற்காக நாகர்கோயிலில் ஒரு செய்தித் துறைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட விளம்பர அதிகாரி ஒருவர் செய்தி விளம்பர வேலைகளை மேற்பார்த்து வருகிறார். நாடகம், திரைப்படங்கள், மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்களிடையே ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமான பொது அறிவு வளர்க்கப்படுகிறது. அத்துடன் சிறு சேமிப்பு, ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமான நாடகங்களும் நடத்தப்பட்டன.

இவைகளெல்லாம் வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்று மக்கள் எண்ணிவிடலாகாது. பொழுது போக்குடன், நமது லட்சியங்களை இந்தக் கலை நிகழ்ச்சிகள் படம் பிடித்துக்காட்டுகின்றன. நமது மக்களின் தியாக உணர்வு, தேசபக்தி, உழைக்கும் திறன் ஆகியவைகளை இந்நாடகங்கள் பிரதிபலிக்கின்றன.

# வளமான எதிர்காலம்

சுதந்திரப் பாதையில் பயணம் தொடங்கிப் பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேறி விட்டன. தற்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்றுவருகிறது.

நாட்டு மக்கள் நலனுக்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 186 கோடியும் அரசாங்கத்தால் செலவிடப்பட்டதை அறிந்தோம். மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 291 கோடி செலவிடப்படும். இரண்டாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து நடத்தவும், நிறுவனங்களைப் பராமரிக்கவும் ஆண்டுதோறும் ரூ. 8 கோடி செலவிட வேண்டியிருக்கிறது. மூன்றாவது திட்டக்கால அளவில் இச் செலவு ரூ. 40 கோடியாகும். இதற்கு வழி வகுப்பதோடு, திட்டச் செலவுக்காக மாநில அரசாங்கம் ரூ. 101 கோடி ஒதுக்கும். அதற்கு மேல் ரூ. 190 கோடி வரை மத்திய அரசாங்கம் உதவி செய்யும். இந்த வகையில் மூன்றாவது திட்டத்தின் மொத்த அளவு

ரூ. 291 கோடியாக இருக்கும். திட்ட வாரியான செலவு விவரங்கள் பின் வருமாறு :—

| (1) | முதல் திட்டச் செலவு (2) | இரண்டாம் திட்டச் செலவு (3) | மூன்றும் திட்ட உத்தேசச் செலவு (4) |
|---|---|---|---|
| | (ரூபாய்கள் கோடியில்) | | |
| வேளாண்மை | 9·67 | 16·80 | 36·98 |
| சமுதாயநல அபிவிருத்தியும் கூட்டுறவும் | | 15·23 | 25·18 |
| பாசனமும் மின்சக்தியும் | 50·43 | 95·78 | 127 61 |
| பெருந் தொழில்களும், நடுத்தரத் தொழில்களும், சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும் | 1·53 | 1·13 | 3·35 |
| | | 12·72 | 20·16 |
| சாலைகள், சுற்றுலா வசதிகள் . | 2·70 | 5·38 | 11·25 |
| கல்வி | 3·82 | 13·73 | 32·16 |
| சுகாதாரம் | 6·42 | 14·35 | 21·50 |
| வீட்டு வசதி | 1·29 | 4·80 | 7·00 |
| பின்தங்கிய வகுப்பினர் நலன் | 4·52 | 4·59 | 5·38 |
| | | | (—) 2·12* |
| சமூக நலன் | | 0·18 | 0·52 |
| தொழிலாளர் நலன் | | 0·48 | 1·33 |
| மற்ற இனங்கள் | | 1·01 | 0·59 |
| மொத்தம் | 80·38 | 186·18 | 290·89 |

* மத்திய அரசாங்கத் துறையில் செலவிடப்படும் தொகை

நம் நாட்டில் பெரும்பாலோர் ஈடுபட்டிருக்கும் வேளாண்மைக்காக உற்பத்திக்கும் சிறு பாசனத்திற்கும் இரண்டாவது திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது மூன்றுவது திட்டத்தில் ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு பாசனக் குளங்களையும் ஏரிகளையும் புதுப்பிப்பதற்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 4·4 கோடி செலவாகியிருக்க, இப்போது அதற்கு ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை மட்டும் அல்லாமல், தூர்வாரிச் செப்பஞ் செய்யும் வேலைத் திட்டம் ரூ. 80 லட்சம் செலவில் தொடர்ந்து நடத்தப்படும். கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 1 கோடி அளவிற்குக் கடன் தொகைகளும், உதவித் தொகைகளும் வழங்கப்படும். சுமார் 7,200 மின்சார மோட்டார் பம்பு செட்டுகளும் 1,240 ஆயில் என்ஜின் பம்பு செட்டுகளும் வாடகைக் கிரய அடிப்படையில் வழங்கப்படும். இதற்குச் சுமார் ரூ. 1 கோடி செலவாகும். வாடகைக் கிரய அடிப்படையில் 250 யந்திரக் கலப்பைகள் விநியோகிக்கப்படும். மேலும் 2,000 துளைக் கிணறுகளுக்காக

ரூ. 50 லட்சம், 150 குழாய்க் கிணறுகள், 500 ஊற்றுக் கிணறுகள் ஆகியவற்றிற்காக ரூ. 94 லட்சம், 3,000 வடிமுனைக் கிணறுகளுக்காக ரூ. 50 லட்சம் செலவிடப்படும். அரசாங்க விதைப் பண்ணைகள் புதிதாக 76 நிறுவ ரூ. 100 லட்சம் செலவாகும். தனிப்பட்ட சாகுபடியாளர்க்கு வாடகைக்கு விடுவதற்காக 25 கனரக டிராக்டர்கள் வாங்க ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிருமி, பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் வழங்க ரூ. 100 லட்சமும், சிறந்த வேளாண்மைக் கருவிகளை வழங்க ரூ. 20 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. வாணிகப் பயிர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குரிய பல்வேறு திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 192 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பாசனத்துக்கு ரூ. 27 கோடி**

பாசனத்துக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 17 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் இதற்கென ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வகை செய்துள்ள ரூ. 21 கோடியும் இதில் சேர்ந்ததாகும். ரூ. 48 லட்சம் செலவில் பாலாறு கால்வாய்த் திட்டம், ரூ. 55 லட்சம் செலவில் சாத்தனூர் (இரண்டாம் நிலை) திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளால் உணவு உற்பத்தி 53 லட்சம் டன்களிலிருந்து திட்ட முடிவில் 70 லட்சம் டன்களாக உயரும் என எதிர்பார்க்கலாம். கரும்பு (வெல்லம்) 40 லட்சம் டன்னிலிருந்து 50 லட்சம் டன்னாகவும், எண்ணெய் வித்துக்கள் 10·50 லட்சம் டன்னிலிருந்து 13·40 லட்சம் டன்னாகவும், பருத்தி 4·20 லட்சம் பேல்களிலிருந்து 5·20 லட்சம் பேல்களாகவும், தேங்காய் 4,150 லட்சம் காய்களிலிருந்து 5,160 லட்சம் காய்களாகவும் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கால்நடை நலம்**

கால்நடை வளர்ப்புக்கென மூன்றாவது திட்டத்தில் ரூ. 352 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேந்திர கிராம நிலையங்களுக்கான ரூ. 75 லட்சமும், கோழி வளர்ப்புக்கான ரூ. 52 லட்சமும் இதில் அடங்கும்.

பால் பண்ணையும், பால் வழங்கலும் என்பதன்கீழ் மூன்றாவது திட்டத்தில் ரூ. 275 லட்சம் செலவாகும். இத்தொகையிலிருந்து சென்னை பால் பண்ணைத் திட்டத்திற்காக ரூ. 100 லட்சமும், திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் அமைக்க ரூ. 53 லட்சமும் செலவிடப்படும்

மதுரையில் ஏற்படுத்தப்படும் இயந்திரத்திற்காக ஐக்கிய நாட்டு சர்வதேச குழந்தைகள் நிதியிலிருந்து உதவி கிடைக்கக்கூடும். ரூ. 15 லட்சம் செலவில் வெண்ணெய், பால் பவுடர் தொழிற்சாலையும், ரூ. 6 லட்சம் செலவில் கால்நடைத் தீனி தயாரிப்பு நிலையமும் அமைக்கப்படும்.

மீன் வளத்திற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 79 லட்சம் செலவாயிற்று. இப்போது மூன்றாவது திட்டத்தில் இதற்காக மொத்தம் ரூ. 2·22 கோடி செலவிடப்படும். அத்தொகையில் படகுகள் வழங்க ரூ. 63 லட்சமும், நைலான் வலைகள் போன்றவை வாங்க ரூ. 20 லட்சமும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ரூ. 30 லட்சமும், மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும், மீன்களைக் கரைசேர்க்கும் வசதிகளைச் செய்து தரவும் ரூ. 35 லட்சமும் செலவிடப்படும்.

**ரப்பர் தோட்டம்**

மூன்றாவது திட்டத்தில் வன வளத்திற்காக ரூ. 2·12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 2·62 லட்சம் ஏக்கரில் கிராமக்காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ. 75 லட்சம் செலவாகும். ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றின் கரைகளில் மரங்கள் நட ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பில் ரப்பர் தோட்டம் வைக்கப்படும். மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ரூ. 250 லட்சம் செலவிடப்படும். குந்தா பள்ளத்தாக்கு மண்வளப் பாதுகாப்பு, சிறப்புத் திட்டத்திற்கு ஆகும் செலவுக்காக ரூ. 25 லட்சம் செலவுத் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்கும்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்திற்கு மூன்றாவது திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1962-63க்குள் மாநிலம் முழுவதற்கும் சமுதாய நலவளர்ச்சி வேலை விஸ்தரிக்கப்படும்.

மூன்றாவது திட்டக்கால அளவில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் குறுகியகால, நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 47 கோடியும், நீண்டகாலக் கடன்களாக ரூ. 3 கோடியும் வழங்கும். கூட்டுறவு என்பதன்கீழ் பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 471 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான ரூ. 110 லட்சமும், 1,030 கிடங்குகளைக் கட்டுவதற்கான ரூ. 100 லட்சமும் அடங்கும்.

**கூட்டுறவு ஆலைகள்**

இரண்டாவது திட்டக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் பேட்டை, நாசரத் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்

டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டையிலும் ஆக நான்கு இடங்களில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது. பேட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகியவைகளில் ஆலைகள் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கிவிட்டன. நாசரத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை இன்னும் உருவாகும் கட்டத்தில் உள்ளது. மூன்றுவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் மேலும் நான்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு நூற்பாலைகளின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்றுவது திட்டக் காலத்தில் இதற்கென ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### அணு மின்சார உற்பத்தி

மின்சார அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 79 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் மின்சாரப் பெருக்கத்திற்கு ரூ. 100 கோடி செலவிடப்படும். நெய்வேலியில் மத்திய அரசாங்கத்திட்டத்தின்கீழ் அனல் மின்சாரநிலைய விஸ்தரிப்பு வேலை ரூ. 15 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இரண்டாம் திட்ட முடிவில் தமிழ்நாடு மின்சார இணைப்பில் உற்பத்தி 5·71 லட்சம் கிலோ வாட்டாகும். மூன்றும் திட்ட முடிவில் 10·46 லட்சம் கிலோ வாட்டாக இது உயரும். ஆனாலும்கூட, மின்சாரத் தேவை இந்த உற்பத்தித் திறனுக்கும் மேல் போகக் கூடுமாதலால், மாநிலத்தில் அணுமின்சார நிலையம் அமைப்பு சம்பந்தமான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சார விநியோக வேலைத் திட்டங்களுக்காக ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின்சார வசதியும் இதில் அடங்கும். 7,300 கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிப்பதென்ற லட்சிய அளவை அடைவது கடினமாக இருக்காது என்று கருதப்படுகிறது. கிராம மின்சாரத் திட்டங்களுக்காகத் தனிப்பட்ட லைசென்சுதாரர்களுக்குக் கடன் கொடுப்பதற்கென ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக மூன்றுவது திட்டத்தில் ரூ. 11·2 கோடி செலவிடப்படும். தொழிற் கூடங்கள், தொழிற்சாலை யூனிட்டுகள் இவற்றை நிறுவவும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை வழங்கவும் ஒதுக்கப்பட்ட ரூ. 320 லட்சம் இத் தொகையில் அடங்கும். கைத்தறிகளுக்காக மொத்தம் ரூ. 800 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறி கூட்டுறவு சங்கங்களில்

2,500 விசைத் தறிகளை நிறுவுவதற்கென மத்திய அரசாங்கத் தொழில் துறையின் கீழும் தொகை ஒதுக்கப்படும்.

சாலைகள் அபிவிருத்திக்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 5·33 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் இந்த வகையில் சுமார் ரூ. 11 கோடி செலவிடப்படும்.

**கட்டாயக் கல்வி**

கல்வி அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி செலவிடப்படும். கட்டாய ஆரம்பக் கல்வியை அமுலாக்க ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் 6 முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளும் 1965-66-ஆம் ஆண்டுக்குள் பள்ளி செல்வர். மூன்றும் திட்டக்கால முடிவில் 17 லட்சம் குழந்தைகள் மதிய உணவு பெறும்படியாகத் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

பொறியியற் கல்லூரிகளில் மேற்கொண்டு 610 மாணவர்களைச் சேர்க்கவும், பாலிடேக்னிக்குகளில் மேற்கொண்டு 1,060 மாணவர்களைச் சேர்க்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்தியத் திட்டத்தின் பாகமாக பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஒன்று இம்மாநிலத்தில் நிறுவப்படும். தனியார் துறையில் மேலும் ஒரு பொறியியற் கல்லூரி ஏற்படும். புதிதாக ஆறு பாலிடேக்னிக்குகள் தொடங்கப்படும். அவற்றுள் மூன்று பெண்களுக்கானவை ரூ. 100 லட்சம் செலவில் 20 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கப்படும்.

ஹரிஜன நலனுக்காக 1955-56-ம் ஆண்டுச் செலவு ரூ. 117 லட்சமாக இருந்தது. 1960-61-ல் இது ரூ. 355 லட்சமாக அதிகரித்தது. மூன்றும் திட்டத்தில் ஹரிஜன நலனுக்காக மேற்கொண்டு ரூ. 5·4 கோடி செலவிடப்படும். அதில் மத்திய அரசாங்கப் பங்கு ரூ. 2·1 கோடியாகும். இத்தொகை மாநிலத் திட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கு மேற்பட்டுள்ள தொகையாகும். ஹரிஜன நலன் சம்பந்தப்பட்ட எல்லாத் திட்டங்களுக்காகவும் மூன்றாவது திட்டத்தில் ரூ. 20 கோடி செலவிடப்படும்.

**வீட்டு வசதிகள்**

வீட்டு வசதி, நகர அபிவிருத்தித் திட்டங்களுக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 4 கோடி மத்தியத் திட்டத்தின் பங்காக இருக்கும்.

சுகாதார அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 21·5 கோடி செலவிடப்படும். நகர தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ. 7½ கோடியும், கிராமங்களில் தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ. 1½ கோடியும் இதில் அடங்கும்.

மூன்ருவது திட்டக் காலத்தில் புதிய மருத்துவக் கல்லூரி மூன்று ஏற்படுத்தப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகள் அபி விருத்திக்காகவும், மருத்துவப் பயிற்சி வசதிகள் அதிகரிக்கவும் ரூ. 456 லட்சம் செலவிடப்படும். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங் களுக்காக ரூ. 161 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத் தில் அந்த வகையில் ரூ. 64 லட்சம் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ள ரூ. 97 லட்சத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்விதமாக, வளமான எதிர்காலத்தை நோக்கி மேலும் ஒருபடி முன்னேறும் முயற்சியாக மூன்ருவது திட்டம் விளங்கு கிறது.